No. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹு வைகாசி-மீ 21-உ (3—6—1934) | மலர் 28.

இனாம்! சந்தாதாரர்களுக்கு இனாம்!

அருமையான புத்தகங்கள் இனாம்!

நமது 'புரட்சி' பத்திரிகைக்கு ஜூன் மாதம் 1-தேதியிலிருந்து 31-உக்குள் முன்பணம் மணியார்டரில் அனுப்பி புதுசந்தாதாரராய்ச்சேருகிறவர்களுக்கு 8 அணா விலையுள்ள அடியில்கண்ட புஸ்தகங்களில் எது இஷ்டமோ அதை இலவசமாய் புக்போஸ்டில் அனுப்பிக்கொடுக்கப்படும்.

கைவல்யம்		0–8–0
இந்தியாவின் குறைபாடு		0–8–0
இராமாயண ஆராய்ச்சி (அயோத்தியாகாண்டம்)		0–8–0
மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை		0–8–0
லெனினும் மதமும்	அணா 4	0–8–0
பொதுவுடமைத்தத்துவம்	,, 3	
போல்ஷ்விக் முறை	,, 1	
கடவுளும் பிரபஞ்சமும்	அணா 4	0–8–0
சோஷியலிசம்	,, 3	
இலங்கை உபந்யாசம்	பை 6	
சமதர்ம உபந்யாசம்	,, 6	

மானேஜர், "புரட்சி", ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

ஈ. வெ. ரா. சொற்பொழிவு.
விலை அணா 2.

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2.

பர்னர்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

"தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

வருட சந்தா	ரூ.	3—0—0
6 மாதம்	,,	2—0—0
3 மாதம்	,,	1—4—0

மானேஜர்,
"தமிழன்" ஆபீஸ்,
சேப்ரோட், நாகர்கோவில்.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவறாதுழைப்பவன் தமிழன், வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு	ரூ.	3—0—0
வெளிநாடு	ரூ.	5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
அண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வெளிவந்து விட்டது! நமது புதிய பிரசுரங்கள்!!

சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் 1¾ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

இன்றைய ரஷியா.

குழந்தைகளின் இல்லங்களும், அரண்மனைகளும், ஆண்பெண்களின் சம்பந்தமும்.

(நித்தியநாராயணபானர்ஜி எழுதியது.)

(ஏ. வி. சீனிவாசன் மொழிபெயர்ப்பு)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

விவாக விடுதலை.

ரஷ்யாவில் விவாகம் செய்து கொள்ள சுமார் ஐந்து நிமிடமும், விவாக விடுதலை பெற இன்னும் சீக்கிரத்திலும் முடிவடைகின்றது. இருவரில் யாராவது ஒருவர் ஆபீசுக்கு வந்து "நான் விவாக விடுதலை பெற விரும்புகிறேன்" என்று கூற வேண்டும். விவாக விடுதலை பெற இவையே போதுமானவையாகும். மற்றொருவரும் இச்சமயத்தில் அங்கே இருப்பின் மிகவும் நல்லது. இல்லாவிடில் இந்த ஆபீசிலிருந்து அவருக்கு கல்யாணமாகவில்லை யென்றும், அவரது கூட்டாளி (மனைவியோ-புருஷனோ) விவாகரத்து செய்து கொண்டாரென்றும் அவருக்கு தபால் மூலமாக கடிதம் எழுதப்படும். இதன் பயனாக அவரை தன்னுடைய பாஸ் போர்ட்டில்இச்சந்தர்ப்பத்தை குறிக்கும்படியாயும் வேண்டிக் கொள்ளப்படுகின்றது. ரிஜிஸ்ட்ராரும் அவர்கள் ஏன் விவாக விடுதலை செய்து கொள்ளுகின்றனர் என்று கேட்க மாட்டாள்; ஆனால் இருவருக்குமுள்ள மன சஞ்சலத்தை தாமே முடிவு செய்யுமாறு அவர்களை கேட்டுக் கொள்ளக் கூடும். ஆனால் இதற்குச் சட்டம் ஒத்துக் கொள்ளுவது கிடையாது. விவாகமும், அவைகளின் ரத்துகளையும் குறிப்புகள் எழுதப்பெற்ற புத்தகத்தை எனக்குக் காண்பிக்கப் பட்டது. ஆனால் எனக்கு அது ஒன்றும் புரியவில்லை. இரண்டு புத்தகங்களில் எல்லா பக்கங்கள் நிறைய எழுதியிருந்தது. நான் ரிஜிஸ்ட்ராரை "நூற்றுக்கு எத்தனை பேர் விவாக ரத்து செய்துக் கொள்ளுகின்றனர்" என்றுகேட்டேன்.

"சுமார் 50 பேர் வரையில் உள்ளனர்" என்று அவள் பதிலளித்தாள். "அவ்வளவு அதிகமான தொகை இருக்கின்றதா" என்று நான் கேட்டேன். "ஆனால் அமெரிக்கா தேசத்தை ஒத்திடுவோமாகில் இது அதிகமாகாது" என்று என்னுடைய வழிகாட்டி கூறினாள்.

மற்றொரு ஜோடி என்னிடத்தில் வந்து என்னை என்னமோ சிலது கேட்டனர்- அது எனக்கு ஒன்றும் தெரியவில்லை. என்னுடைய வழிகாட்டி அவர்களுக்கு பதிலளித்து விட்டு புன் சிரிப்புடன் என்னிடத்தில் "நம்முடைய நெம்பர் என்னவென்று கேட்கிறார்கள்" என்று கூறினாள். அவர்கள் அவ்வாறுகேட்டது மிக்க அதிசயிக்கத் தக்கதாகும். "நீ அவர்களுக்கு என்ன பதிலளித்தாய்" என்று நான் கேட்டேன். "எங்களுக்கு நெம்பர் ஒன்றுமில்லை என்று கூறினேன்" என்று அவள் எனக்கு சொன்னாள். சிறுவயதினராகிய இவ்விருவர்கள் ரிஜிஸ்ட்ரார் எதிரில் உட்கார்ந்தார்கள். அவர்கள் மிக்க இளைஞர்கள் போல் புலப்பட்டனர். அவர்களுக்கு சுமார் 18 வயது இருக்கலாம். இந்த வயதில் தான் ரஷ்யாவில் அநேகமாக விவாகம் நடை பெறுகின்றன. மற்றொரு இருவர்கள் அங்கே வந்தனர். அவர்கள் சிறிது வயதானவர்கள் போல தோன்றியது. அவர்கள் இருவரும் இரண்டாம் தடவை விவாகம் செய்து கொள்ளுகின்றனர் போலும். ஆகையால் அவர்களுக்கு குழந்தைகள் இருக்கின்றனவா என்று அவர்களை கேட்கப் பட்டது. "ஒன்றுமில்லை" என்று அவர்கள் பதிலளித்தனர். முதல் விவாகம் செய்து கொண்டதில் ஏதாவது குழந்தைகள் இருப்பின் தாய் தந்தையர் அவர்களை போஷிக்க வேண்டும். ஆனால் இதர தேசங்களைப் போல இங்கே அவர்களை போஷிக்கும் கஷ்டம் தந்தைக்கு மட்டுமல்ல. தந்தைக்கு சம்பாதிக்க இயலாதிருப்பின், தாய் தான் அவர்களை போஷிக்கும் கஷ்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தையைகாப்பாற்றவேண்டியதற்குவேண்டிய தொகையானது தாய்தந்தையர்கள் சம்பாதனையை பொருந்தியுள்ளது. ஆனால் ஒருவர் கொஞ்சமேனும் சம்பாதிக்க வல்லமையற்றவராகில் அவர் மற்றொருவருடைய சம்பாதனையில் மூன்றில் ஒரு பங்கு கொடுக்கும்படி கேட்க நியாயமுண்டு. சட்டப்படி விவாக விடுதலை செய்து கொள்ளும் விஷயத்தில் குழந்தைகள் தாயுடன் நின்று விடுகின்றனர். ஆனால் அவள் மதுபானம் சாப்பிடுபவளாகவும், கருணையற்றவளாகவும், அன்பில்லாதவளாகவும் இருப்பினும் அல்லது குழந்தைகளை கொடுமைகட்கு உட்படுத்தினால் குழந்தைகள் தந்தையிடத்தில் சார்ந்து விடும். எப்போதாவது விவாக விடுதலை ஏற்படின், அவர்கள் இருவருக்கும் தமக்குள்ளே குழந்தைகள் யாருடைய போஷணையில் இருக்க வேண்டுமென்பதையும், இன்னும் அவர்களைப்பற்றியதையும் முடிவு செய்து கொள்ளுகின்றனர். அவர்கள் அவ்வாறு செய்து கொள்ளாவிடில் நீதி மன்றத்திற்கு செல்ல நேரிடும். ரஷியாவில் சட்டப்படி விவாகம் ரிஜிஸ்டர் மூலயாகத் தான் செய்து கொள்ள வேண்டுமென்று அவசியம் ஒன்று மில்லை. ஓர் ஆணும் ஓர் பெண்ணும் விருப்பப்படின் அவர்கள் இருவரும் ஒன்றாக புருஷன் மனைவிபோல் வாழலாம். இதை அரசாங்கமாவது அல்லது சமூகமாவது நிந்திக்காது. ஜீவனத்திற்கு மனைவிக்கு கொடுக்கவேண்டிய பணத்திற்காக வியாஜ்யம் ஏற்படின் இவ்வாறு தாமே விவாகம் செய்து கொள்வதினால் இடையூறுகளும் உண்டாகின்றன. இவ்வித கஷ்டங்களில் தகப்பன் யாரென்பதை சிநேகர்களின் சாக்ஷியத்தாலும், சுற்றத்தார்களின் சாக்ஷியத்தினாலும் நியமனம் செய்யப்படுகின்றது. அம்மனிதன் அவளுடன் வசித்து வந்தானென்றும் அநேகமாய் பிள்ளை அவனுக்கு சொந்தமென்றும்அவர்கள்கூறினால், அவன் அப்பிள்ளைக்கு ஜீவிக்க பணம் கொடுக்க வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்குமுள்ள சம்பந்தம் மிதமிஞ்சி இருப்பினும் கூட, ரஷியா ஏன் ஓர் கீழ்தர வகுப்பாருள்ள தேசமாக மாறி விட வில்லை என்பதற்கு இது ஓர் முக்கிய காரணமாகும். ரஷியாவில் ஓர் ஆணும் ஓர் பெண்ணும் ஓர் வித நிபந்தனை இல்லாமற்படி கூடி வாழலாம் என்று ஒருவன் கேள்விப்படுவானாகில், அங்கே பெண்கள் விபசாரிகள் என்றும், ஆண்கள் அதிக முறைமையற்ற கீழ்தர வகுப்பினர்கள் என்று அவன் கருத நியாயமிருக்கிறது. ஆனால் அது உண்மையில் அவ்வாறு இல்லை. ரஷியர்கள் இக்கண்டத்தின் இதர தேசத்தினர்களை விட அதிக நியாயமுள்ளவர்களென்று எனக்கு தோன்றுகிறது. நீங்கள் ஐரோப்பாவில் என்ன காண்கின்றீர்.

நாகரீகமடைந்த எல்லா தேசங்களிலும் ஆண்களை உடனே கவர்ச்சி செய்யுமாறு பெண்கள் தாமே நல்ல ஆடைகளை அணிந்து கொள்ளுகின்றனர். அத்தேசங்களில் பெரிய சமூகத்தில் நடக்கும் சாப்பாட்டு பந்தியிலும், நடிக்கும் இடங்களிலும் ஆண்களும் பெண்களும் தத்தம் இனத்தினர்களுடன் கலந்து கொள்ளாமல், ஆண்கள் பெண்கள்முன்னிலையிலும், பெண்கள் ஆண்கள் முன்னிலையிலுமாக உட்கார்ந்து கொள்ளுகின்றனர். ஆனால் ரஷியாவில் ஆண்களும் பெண்களும் இத் தன்மையர் போல் இருக்க மாட்டார்கள். ஆண்களும் பெண்களும் இரவும் பகலுமாக ஒரே பெட்டியில் பிரயாணம் செய்கின்றார்கள். அவர்கள் கோடைகாலத்தில் குளிக்கும்போது உடுத்தும் ஆடையை சிறிது அளவில் உடுத்திக்கொண்டும், அல்லது சிலவேளைகளில்திரேகத்தில் ஒன்று மில்லாமலும் (நிர்வாணம்) நதிக்கரையில் ஒருவர் பக்கத்தில் ஒருவராக குளிக்கின்றனர். ஊர் வலத்தில் ஆண்களும் பெண்களும் ஓர் வித நாணமின்றி ஒருவர் பக்கத்தில் ஒருவராக நடந்து செல்லுகின்றார்கள். ஒருவர் விருப்பமின்றி மற்றொருவர் அவரை காதலிப்பது கடினமான குற்றமாகும். ரஷியர்களுக்கு இது ஓர் வீரச்செயலேயாகும். ஒருவர் காதல் விஷயத்தில் உண்மையாகவும் மனப்பூர்வமாகவும் இருத்தல் வேண்டும். ஒருவன் விவாக விடுதலை செய்து கொண்ட பிறகு இவனது பிரியம்போல மற்றொரு விவாகம் செய்து கொள்ளலாம். ஆனால் அவன் அவ்வாறு செய்வது அவனது சுபாவம் என்று ரூபித்து விட்டால் அவனை சிறைச்சாலையிடைக்கப் படும். சர்வகலாசாலையிலும் கல்லூரியிலுமுள்ள இளைஞர்களுக்குள் இரு வகுப்பினர்களின் வாழ்க்கை (ஆண் பெண்) சிக்கலாகத் தான் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனித்த அறையில் இருப்பினும் ஆண் பெண் மாணவர்கள் ஒன்றாய் உண்பதும், உட்காருவதும் பாடுவதுமாக இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் மற்ற ஒவ்வொரு அறைக்கும் சென்று அங்குள்ளவர் மீது காதலடையக்கூடும். மேலும் அவர்கள் விவாகம் செய்து கொண்டு பிள்ளைகளையும் அங்கே வைத்திருக்கவும் கூடும். மேல் அதிகாரியாவது அல்லது இதர மாணவர்களாவது இதை வேறு விதமாக நினைத்து தாஷிக்க மாட்டார்கள். இரண்டு மாணவர்கள் ரிஜிஸ்டர் செய்துகொண்டோ அல்லதுசெய்யாமலோ விவாகம் செய்து கொள்ள விரும்பினால் அவர்களை அவ்வாறு செய்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றது. அவர்களுக்கு குழந்தை இருப்பின், அதை சர்வகலாசாலைக்கு சம்பந்தப்பட்ட குழந்தையை போஷிக்கும் இல்லத்தில் விட்டு விட்டு தாயார் தன்னுடைய படிப்பை கவனித்துக் கொண்டு வருகின்றாள்.

ஆனால் எந்தமாணவனாகஇருந்தாலும் அது ஆணோ பெண்ணோ தாம் இஷ்டப்பட்ட நாளில் அன்னிய வகுப்பினருடன் இன்பந்துய்ப்பதை நிரூபித்துவிட்டால் அவரை கண்டித்து இனி ஒழுங்காக நடக்கும்படி திட்டம் செய்யப்படுகின்றது. அவர்களிடத்தில் உண்மையான காதல் இல்லாவிடினும் கூட, தம்மனத்தை சாந்தப்படுத்தும் ஆவல் முக்கியமாக இருக்கின்றது போலும். காதலுக்கு எல்லா வித உரிமையும் உண்டு. ஆனால் ஒரு

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

ஜீயன் ஜாகூஸ் ரூஸோ.

அல்லது

அரசியல் உரிமையை அனைவருக்கும் அளித்த ஆடவன்.

சமூகமே விலங்கு—மதமே விஷம்.

[திருச்சி ஆசிரியர், கே. வீ. எஸ். வாஸ் பீ ஏ. (ஹானர்ஸ்)]

கிறிஸ்து பிறப்பதற்கு நான்கு நூற்றாண்டுகள் முன்னரே அரிஸ்டாடில் வென்னும் கிரேக்க ஞானியார் அரசியல் நிர்வாகம் மூவகைப் படுமெனக்கூறியுள்ளார். ஒன்று சர்வாதிகாரம்படைத்த சக்கிர வர்த்தியின் ஆட்சிக்குட்பட்ட அரசாங்கம், இரண்டாவதுவலிமையுள்ள சிலரின் அதிகாரத்திற்குட்பட்ட அரசியல் நிர்வாகம், மூன்றாவது பொதுமக்களின் ஆட்சி. ஆனால்இம்மூவகை ஆட்சியில்ஒன்றும் வெகு காலம் நீடித்திருப்பதில்லை. ஏக சக்கிரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்ட அரசியல் சில நூற்றாண்டுகளுக்குள் சிலருடைய அதிகாரத்திற்குட்பட்டு விடுகிறது. என்றாலும் இவ்வகை அரசாங்கமேனும் நிலைத்து நிற்கின்றதா? என்றுபார்ப்போமானால் அதுவும் சில காலம் கழிந்தபின் இந்தச் சிலரும் தங்கள் சக்தியை இழந்து விடுகின்றனர். அப்போது பொது மக்கள் அரசியல் அதிகாரத்தை அவர்களிடம் இருந்து பிடிங்கிக்கொண்டு விடுகின்றனர். இம்மூன்றும் முறை அரசாங்கமேனும் ஜனங்களுக்கு அழியாவிருப்பத்தையளிக்கின்றதா? இல்லை. பழகப்பழகப் பாலும் புளிக்கும் என்பதைப்போல பொதுமக்கள் ஆட்சியும் விரைவில் சலித்துப்போய் மன்னனின் ஆட்சியே சிறந்ததென மறுபடி நினைக்கும்படியாய் விடுகிறது இங்ஙனமே அரசியல் நிர்வாகசக்கிரம் சுழல்கின்றது. உதாரணமாகப் பொது நிர்வாகம் பயனற்றதெனக்கருதி சர்வாதிகாரம் படைத்த ஏகசக்கிரவர்த்தியின் ஆட்சியை மறுபடி விரும்பும் தற்கால அரசாங்கங்கள் சிலவற்றை நோக்குங்கள்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். ஓர் வகுப்பு அரசாங்கம் தலைகீழாக வீழ்கையில், அதாவது புதிய முறை அரசியல் நிகவாகம் கிளம்புகையில் பலத்த புரட்சியும், குழப்பமும் ஏற்படுவது மட்டும் திண்ணம். புரட்சியே மாறுதல்களின் ஆயுதம். புரட்சியின்றேல் வெற்றியில்லை. வாய்வார்த்தைகள், மேடைப்பிரசங்கள் தனிப்பட்டவர்களின் வெற்றிமாலைக் குறியவைகளேயன்றி பழக்கத்திலுள்ள தீமைகளை வேருடன் பிடிங்கி நூதன முறையை நிலைநாட்டுவதற்குச் சக்தியற்றவைகள். அஞ்சாநெஞ்சுடன்ஆடவர்களும், அணங்குகளும் உலகக்ஷேமத்திற்கென உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் அற்பணம் செய்து முன்வந்து பழையனவைகளின்குறைகளை யெடுத்துரைத்துப் புதியனவைகளை ஸ்தாபிக்கக்கிளர்ச்சிசெய்தாலன்றி சமயலரைப் பிரசங்கங்கள்பயனற்றதென நாம்கூறுகையில் தோழர்கள் மறுக்கமாட்டார்களென்பது திண்ணம்.

முதல் நான்கு நூற்றாண்டுகளில் ஐரோப்பிய தேசங்கள்மதப்புரட்சியில் மும்முறமாக ஈடுபட்டு பிராசீன மதத்தை வேருடன் பிடிங்கி முற்றிலும் புதிதான கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபித்தாற்போல் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் முதலில் அமெரிக்காவிலும், பின்னர் பிரான்சிலும் அரசியல் நிர்வாகத்தில் மும்முறமானதோர் புரட்சி யேற்பட்டது. வலிமையுள்ள சிலரின் மமதைக்குட்பட்டிருந்த ஜனங்கள் தங்கள் சக்தியையுணர்ந்து, அன்பு, சகோரத்வம் சமத்துவம் என்ற மூவகை உணர்ச்சிகளால் தூண்டப்பட்டு புரட்சிக்கொடியைக்காத்திலேந்தி ஆண்மையுடன் எழுந்தனர். மதம்கொண்டோர்மாண்டனர், வலிமையுள்ள சிலரின் ஆட்சி வீழ்ந்தது, சமத்துவம்! அன்பு! சகோரத்துவம்! ஒற்றுமைஓங்குக!மன்னன் மடிக! மதம் வீழ்க! என்ற ஆரவாரம் வானத்தை இருபிளவாகப் பிளந்து சென்றது. உதிரப் பிரவாகத்திலிருந்தபூமி சிலவருடங்களில் இளங்கதிர்களைத் தாங்கி செழித்தோங்கியது. ஷைபுரட்சி இயக்கத்தின் விபரங்களைப்படிப்போர் எவரும் பிரான்சில் அதற்கு உடந்தையாயிருந்த ஜீயன்ஜாகூஸ் ரூஸோ என்னும் பிரஞ்சுக்காரரை மறக்க வியலாது.

1712 ம் வருடம் ஜூன் மாதம் 28 ந்தேதி ஜீனீவா ஐஸாக் என்னும் ஓர் கெடிகார வியாபாரிக்கும், பர்னார்ட் என்னும் மாதிற்கும் ஜீயன் ஜாகூஸ் ரூஸோ அவதரித்தார். அவர் உலக வெளிச்சத்தைக் கண்ட மறுநிமிடமே அவரது அன்னை உயிர் துறந்தாள். தாயை பறிகொடுத்து விட்டே நான் பிறந்தேன், பிறந்த மறு நிமிடமே துயரமென்னும் காரிருள் என் இருதயத்தைக் கவிழ்ந்தது என ரூஸோ பிற்காலத்தில் வரைகிறார். தாயையிழந்ததனயனை ஐஸாக் தன் சகோதரியொருவள் மூலம் செல்வமாகவே வளர்த்து வந்தார். தனது ஏழாம்பிராயம் முதற்கொண்டே பயங்கர சம்பவங்களும், காமச்சுவையும் மிளிரும் கதைகளைப்படிப்பதில் அதிக ஊக்கமும் காட்டி வந்தாராம். இராக்காலங்களில் புத்தகத்தில் படித்த சம்பவங்கள் அவரது கண்களுக்குமுன் தாண்டவமாட சதா அவரது மனதில் பல நூதன விஷயங்கள் குடிகொண்டிருக்கும். தனது பத்தாம் ஆண்டிலேயே ப்ளூடார்ச்சின் கிரேக்கரோமானிய வீரர்களின் வாழ்க்கைசரித்திரம் தேச சரித்திரம் முதலியவைகளைப் படித்து முடித்துவிட்டார். 1722ல் ரூஸோ பள்ளிக்கு அனுப்பபட்டபோதிலும் அங்கு அவர் புதிதாக ஒன்றையும் கற்றுக்கொள்ளவில்லை, ஆனால் மாணவர்களுடன் கூடிப்பழகியதில் தயங்காது பொய் சொல்வதற்கும், கபடமாக நடிப்பதற்கும் நன்கு கற்றார் என்று மட்டும் சொல்லலாம்.

அன்பு, தயை என்பது மட்டும் ரூஸோவின் உடன் பிறந்த இரு சிறந்த குணங்கள். பிறர் துக்கிப்பதைக்காண அவர் உள்ளம் சம்மதிக்காது. உதாரணமாக ஒருசமயம் ரூஸோ ஓர் இயந்திரசாலையில் இயந்திரங்களைத் தொட்டுப் பார்த்துக்கொண்டிருக்கையில் அதைக் கவனியாத அவரது நண்பன் ஒருவன் விசையைமுடிக்கி விட சக்கரம் சுழன்று ரூஸோவின் விரல்களைக்காயப்படுத்தி விட்டது. வலி பொறுக்கமாட்டாது ரூஸோ அலறவும், தன் குற்றத்தையுணர்ந்த வாலிபன் எங்கு தன் தந்தையிடம் கூறி தனக்கு வசைமொழிகளை ரூஸோ வாங்கி வைப்பாரோ வென பயந்து தானும் கூடவே அழ ஆரம்பித்தானும். ரூஸோ தன் நண்பன் கண்ணீருதிர்ப்பதைக் காணச் சகியாது அவனுக்குத் தேறுதல் கூறி அழுகையை நிறுத்துவது மிக சிரமமாய் விட்டதாம். பின்னர் கைவிரலில் எப்படி காயம்பட்டது என அவரது தந்தை வினவியதற்குத் தன் நண்பனைக் காப்பாற்றக் கருதி ஓர் பெரிய கல் கையில் விழுந்து விட்டதெனச் சாக்குக் கூறி விட்டாராம்.

ரூஸோ சிலவருடங்கள் கழிந்தபின் ஓர் வக்கீலிடம் குமாஸ்தாவாக அமர்ந்தார். ஆனால் ஷை வக்கீல் ரூஸோ ஒரு வேலைக்கும் தகுதியற்றவர் எனக் கூறி விலக்கிவிடவும், ரூஸோ ஓர் சிற்பியிடம் வேலைக்குச் சென்றார். குரூர சுபாவமும், தீயநடத்தையுமுள்ள சிற்பியுடன் பழகியதன் பலனாக ரூஸோவின் வாழ்க்கையிலேயே பெரியதோர்மாறுதலேற்பட்டது. சிற்பி வெளியில் சென்றிருக்கும் சமயம் அவன் பெட்டிகளைத்திறப்பதும், தின்பதற்கேதாகினுமகப்படின்களவாடியுண்பதும், சற்றும் தயங்காது உண்மைபோல் பொய்கூறுவதும்,வழக்கமாய் விட்டது. எவ்வளவு தீயவழக்கங்களை மனிதன் வாழ்க்கையில் கையாளக்கூடுமோ அவ்வளவையும் ரூஸோ பால்யத்திலேயே பழக்கத்தில் கொண்டுவந்தார்.

பால்யம் கழிந்து யௌவனம் வந்தது. உதிரத்திமிர் கொண்டவாலிபப் பருவம் காமத்தீயை கிளப்பிக்கொண்டெழுந்தது. ஏன் இது வொன்றுதான் ரூஸோவிற்கு இது வரையில் ஓர் குறையாக விருந்தது. வர்ஸிலிஸ் என்னும் ஓர் மாதிடம் சில நாட்கள் வேலைபார்த்தார். ஷை மாது மூன்று மாதங்களுக்குள் இறக்க அந்த வேலையும் போய்விட்டது. வர்ஸிலிஸ் கழுத்திலணிந்திருந்த ரிப்பன் ஒன்றை ரூஸோ விடம் பார்த்த அவள் உறவினர் ஒருவர் இது உனக்கெப்படி வந்தது? எனவினவ, ரூஸோ தான் அபாயத்திலகப்பட்டுக் கொண்டிருக்கிறோமென்பதை நன்குணர்ந்து எஜமானியின் தோழி இதை என்னிடமளித்தாள் எஜமானியுடயதென்றும் அதைத்தோழி களவாடி யிருக்கிறாள் என்றும் எனக்குத்தெரியாது! என்று பகிரங்கமாகத் தோழியின் முன்னிலையிலேயே கூறினாராம்- காமத்தின்கோலத்தைப் பாருங்கள். ஒருகுற்றத்தையுமறியாத அபலையின் மீது பெரும்பழியைச் சுமத்த ரூஸோ சற்றேனும் பின் வாங்கினவரில்லை

சாப்பாட்டிற்கே வழியின்றி தவித்துக்கொண்டிருக்கையில் அனிஸி பிஷப்பிடம் அடைக்கலம் புகுந்து ஓர்கதோலிக்கராக மாறினார். அதுமுதல் கதோலிக் நூல்களைக் கவனமாய் படித்துவந்தார். ஷை பிஷப் ரூஸோவையும் சந்நியாசியாக மாறும்படி வற்புறுத்த பிரம்மசாரிய வாழ்க்கையில் சிறிதும் நம்பிக்கையற்ற ரூஸோ தன்னால் முடியாதென மறுத்துவிட்டார் அதன் காரணம் சந்நியாச வாழ்க்கைத் தவறானதென்றல்ல அனுஷ்டிக்க வியலாதென்றே. கபட நாடகத்தை அவர் வெறுப்பது ஓர் குற்றமாகாது. காஞ்சீபுரத்திலிருக்கும் எனது நண்பரொருவர் (சில காலம் ஓர் பத்திரிகைக்கு ஆசிரியராக விருந்தவர்) ஓர் கடிதத்தில் எனக்கு எழுதியிருந்தார். "மனிதனின் மனதில் இயற்கையாய் எழும் உணர்ச்சியைத் தடுக்க ஒருவருக்கும் உரிமையில்லை. பிச்சைக்காரர்களையும், காமிகளையும் நான் வெறுப்பதில்லை!" உண்மையில் அவர் கூறியதுபோல் ரூஸோ தனு வாழ்க்கை பயனற்றதென்றும் அனுஷ்டிக்க வியலாததென்றும், பிறரின் புகழ்ச்சிக்கு விரும்பி மணமாகாதவன்போல் நடப்பது கேவலமானதென்றும் கருதி பிஷப் விருப்பத்திற்கு மறுக்கவும் ரூஸோவை கோவிலினின்று விலக்கி விட்டார். அதன்பின்ரூஸோசிலசிபார்சுக் கடிதங்களுடன் ரென்ஸ் என்னும் ஓர் மாதிடம் வேலைக்கமர்ந்து சுமார் பத்து வருடங்கள் அவளுடைய போஷணையிலேயே யிருந்து வந்தார்.

1740ல் ரென்ஸ் சீமாட்டியிடம் ஏதோ மனஸ்தாபப்பட்டுக் கொண்டு "லியான்" நகருக்குப் பிரயாணமானார். இப்பொழுதோ வேலை ஒன்றுமில்லை பிழைப்பிற்கு ஓர் வழிதேட வேண்

தொடர்ச்சி 15ம் பக்கம்பார்க்க,

ஜீயன் ஜாகூஸ் ரூஸோ.

அல்லது

அரசியல் உரிமையை அனைவருக்கும் அளித்த ஆடவன்.

சமூகமே விலங்கு—மதமே விஷம்.

[திருச்சி ஆசிரியர், கே. வீ. எஸ். வாஸ் பீ ஏ. (ஹானர்ஸ்)]

கிறிஸ்து பிறப்பதற்கு நான்கு நூற்றாண்டுகள் முன்னரே அரிஸ்டாடி லென்னும் கிரேக்க ஞானியார் அரசியல் நிர்வாகம் மூவகைப் படுமெனக்கூறியுள்ளார். ஒன்று சர்வாதிகாரம்படைத்த சக்கிர வர்த்தியின் ஆட்சிக்குட்பட்ட அரசாங்கம், இரண்டாவதுவலிமையுள்ள சிலரின் அதிகாரத்திற்குட்பட்ட அரசியல் நிர்வாகம், மூன்றாவது பொதுமக்களின் ஆட்சி. ஆனால்இம்மூவகை ஆட்சியில்ஒன்றும் வெகு காலம் நீடித்திருப்பதில்லை. ஏக சக்கிரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்ட அரசியல் சில நூற்றாண்டுகளுக்குள் சிலருடைய அதிகாரத்திற்குட்பட்டு விடுகிறது. என்றாலும் இவ்வகை அரசாங்கமேனும் நிலைத்து நிற்கின்றதா? என்றுபார்ப்போமானால் அதுவும் சில காலம் கழிந்தபின் இந்தச் சிலரும் தங்கள் சக்தியை இழந்து விடுகின்றனர். அப்போது பொது மக்கள் அரசியல் அதிகாரத்தை அவர்களிடம் இருந்து பிடுங்கிக்கொண்டு விடுகின்றனர். இம்மூன்றும் முறை அரசாங்கமேனும் ஜனங்களுக்கு அழியாவிருப்பத்தையளிக்கின்றதா? இல்லை. பழகப்பழகப் பாலும் புளிக்கும் என்பதைப்போல பொதுமக்கள் ஆட்சியும் விரைவில் சலித்துப்போய் மன்னனின் ஆட்சியே சிறந்ததென மறுபடி நினைக்கும்படியாய் விடுகிறது இங்ஙனமே அரசியல் நிர்வாகசக்கிரம் சுழல்கின்றது. உதாரணமாகப் பொது நிர்வாகம் பயனற்றதெனக்கருதி சர்வாதிகாரம் படைத்த ஏகசக்கிரவர்த்தியின் ஆட்சியை மறுபடி விரும்பும் தற்கால அரசாங்கங்கள் சிலவற்றை நோக்குங்கள்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். ஓர் வகுப்பு அரசாங்கம் தலைகீழாக வீழ்கையில், அதாவது புதிய முறை அரசியல் நிகவாகம் கிளம்புகையில் பலத்த புரட்சியும், குழப்பமும் ஏற்படுவது மட்டும் திண்ணம். புரட்சியே மாறுதல்களின் ஆயுதம். புரட்சியின்றேல் வெற்றியில்லை. வாய்வார்த்தைகள், மேடைப்பிரசங்கள் தனிப்பட்டவர்களின் வெற்றிமாலைக் குறியவைகளே யன்றி பழக்கத்திலுள்ள தீமைகளை வேருடன் பிடுங்கி நூதன முறையை நிலைநாட்டு வதற்குச் சக்தியற்றவைகள். அஞ்சாநெஞ்சுடன் ஆடவர்களும், அணங்குகளும் உலகக்ஷேமத்திற்கென உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் அற்பணம் செய்து முன்வந்து பழையனவைகளின்குறைகளை யெடுத்துரைத்துப் புதியனவைகளை ஸ்தாபிக்கக்கிளர்ச்சிசெய்தாலன்றி சமயலரைப் பிரசங்கங்கள்பயனற்றதென நாம்கூறுகையில் தோழர்கள் மறுக்கமாட்டார்களென்பது திண்ணம்.

முதல் நான்கு நூற்றாண்டுகளில் ஐரோப்பிய தேசங்கள்மதப்புரட்சியில் மும்முறமாக ஈடுபட்டு பிராதீன மதத்தை வேருடன் பிடுங்கி முற்றிலும் புதிதான கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபித்தாற்போல் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் முதலில் அமெரிக்காவிலும், பின்னர் பிரான்சிலும் அரசியல் நிர்வாகத்தில் மும்முறமானதோர் புரட்சி யேற்பட்டது. வலிமையுள்ள சிலரின் மமதைக்குட்பட்டிருந்த ஜனங்கள் தங்கள் சக்தியையுணர்ந்து, அன்பு, சகோரத்வம் சமத்துவம் என்ற மூவகை உணர்ச்சிகளால் தூண்டப்பட்டு புரட்சிக்கொடியைக்கரத்திலேந்தி ஆண்மையுடன் எழுந்தனர். மதம்கொண்டோர்மாண்டனர், வலிமையுள்ள சிலரின் ஆட்சி வீழ்ந்தது, சமத்துவம்! அன்பு! சகோரத்துவம்! ஒற்றுமைஓங்குக! மன்னன் மடிக! மதம் வீழ்க! என்ற ஆரவாரம் வானத்தை இருபிளவாகப் பிளந்து சென்றது. உதிரப் பிரவாகத்திலிருந்தபூமி சிலவருடங்களில் இளங்கதிர்களைத் தாங்கி செழித்தோங்கியது. ஷைபுரட்சி இயக்கத்தின் விபரங்களைப்படிப்போர் எவரும் பிரான்சில் அதற்கு உடந்தையாயிருந்த ஜீயன்ஜாகூஸ் ரூஸோ என்னும் பிரஞ்சுக்காரரை மறக்க வியலாது.

1712 ம் வருடம் ஜுன் மாதம் 28ந்தேதி ஜீனீவா ஐஸாக் என்னும் ஓர் கெடிகார வியாபாரிக்கும், பர்னார்ட் என்னும் மாதிற்கும் ஜீயன் ஜாகூஸ் ரூஸோ அவதரித்தார். அவர் உலக வெளிச்சத்தைக் கண்ட மறுநிமிடமே அவரது அன்னை உயிர் துறந்தாள். தாயை பறிகொடுத்து விட்டே நான் பிறந்தேன், பிறந்த மறு நிமிடமே துயரமென்னும் காரிருள் என் இருதயத்தைக் கவிழ்ந்தது என ரூஸோ பிற்காலத்தில் வரைகிறார். தாயையிழந்ததனயனை ஐஸாக் தன் சகோதரியொருவள் மூலம் செல்வமாகவே வளர்த்து வந்தார். தனது ஏழாம்பிராயம் முதற்கொண்டே பயங்கர சம்பவங்களும், காமச்சுவையும் மிளிரும் கதைகளைப்படிப்பதில் அதிக ஊக்கமும் காட்டி வந்தாராம். இராக்காலங்களில் புத்தகத்தில் படித்த சம்பவங்கள் அவரது கண்களுக்குமுன் தாண்டவமாட சதா அவரது மனதில் பல நூதன விஷயங்கள் குடிகொண்டிருக்கும். தனது பத்தாம் ஆண்டிலேயே ப்ளூடார்ச்சின் கிரேக்கரோமானிய வீரர்களின் வாழ்க்கைசரித்திரம் தேச சரித்திரம் முதலியவைகளைப் படித்து முடித்துவிட்டார். 1722ல் ரூஸோ பள்ளிக்கு அனுப்பபட்டபோதிலும் அங்கு அவர் புதிதாக ஒன்றையும் கற்றுக்கொள்ளவில்லை, ஆனால் மாணவர்களுடன் கூடிப்பழகியதில் தயங்காது பொய் சொல்வதற்கும், கபடமாக நடிப்பதற்கும் நன்கு கற்றார் என்று மட்டும் சொல்லலாம்.

அன்பு, தயை என்பது மட்டும் ரூஸோவின் உடன் பிறந்த இரு சிறந்த குணங்கள். பிறர் துக்கிப்பதைக்காண அவர் உள்ளம் சம்மதிக்காது. உதாரணமாக ஒருசமயம் ரூஸோ ஓர் இயந்திரசாலையில் இயந்திரங்களைத் தொட்டுப் பார்த்துக்கொண்டிருக்கையில் அதைக் கவனியாத அவரது நண்பன் ஒருவன் விசையைமுடுக்கி விட சக்கரம் சுழன்று ரூஸோவின் விரல்களைக்காயப்படுத்தி விட்டது. வலி பொறுக்கமாட்டாது ரூஸோ அலறவும், தன் குற்றத்தையுணர்ந்த வாலிபன் எங்கு தன் தந்தையிடம் கூறி தனக்கு வசைமொழிகளை ரூஸோ வாங்கி வைப்பாரோ வென பயந்து தானும் கூடவே அழ ஆரம்பித்தானும். ரூஸோ தன் நண்பன் கண்ணீருதிர்ப்பதைக் காணச் சகியாது அவனுக்குத் தேறுதல் கூறி அழுகையை நிறுத்துவது மிக சிரமமாய் விட்டதாம். பின்னர் கைவிரலில் எப்படி காயம்பட்டது என அவரது தந்தை வினவியதற்குத் தன் நண்பனைக் காப்பாற்றக் கருதி ஓர் பெரிய கல் கையில் விழுந்து விட்டதெனச் சாக்குக் கூறி விட்டாராம்.

ரூஸோ சிலவருடங்கள் கழிந்தபின் ஓர் வக்கீலிடம் குமாஸ்தாவாக அமர்ந்தார். ஆனால் ஷை வக்கீல் ரூஸோ ஒரு வேலைக்கும் தகுதியற்றவர் எனக் கூறி விலக்கிவிடவும், ரூஸோ ஓர் சிற்பியிடம் வேலைக்குச் சென்றார். குரூர சுபாவமும், தீய நடத்தையுமுள்ள சிற்பியுடன் பழகியதன் பலனாக ரூஸோவின் வாழ்க்கையிலேயே பெரியதோர்மாறுதலேற்பட்டது. சிற்பி வெளியில் சென்றிருக்கும் சமயம் அவன் பெட்டிகளைத்திறப்பதும், தின்பதற்கேதாகினுமகப்படின்களவாடியுண்பதும், சற்றும் தயங்காது உண்மைபோல் பொய்கூறுவதும்,வழக்கமாய் விட்டது. எவ்வளவுதீயவழக்கங்களை மனிதன் வாழ்க்கையில் கையாளக்கூடுமோ அவ்வளவையும் ரூஸோ பால்யத்திலேயே பழக்கத்தில் கொண்டுவந்தார்.

பால்யம் கழிந்து யௌவனம் வந்தது. உதிரத்திமிர் கொண்டவாலிபப் பருவம் காமத்தீயை கிளப்பிக்கொண்டெழுந்தது. ஏன் இது வொன்று தான் ரூஸோவிற்கு இது வரையில் ஓர் குறையாக விருந்தது. வர்ஸிலிஸ் என்னும் ஓர் மாதிடம் சில நாட்கள் வேலைபார்த்தார். ஷை மாது மூன்று மாதங்களுக்குள் இறக்க அந்த வேலையும் போய்விட்டது. வர்ஸிலிஸ் கழுத்திலணிந்திருந்த ரிப்பன் ஒன்றை ரூஸோ விடம் பார்த்த அவள் உறவினர் ஒருவர் இது உனக்கெப்படி வந்தது? எனவினவ, ரூஸோ தான் அபாயத்திலகப்பட்டுக் கொண்டிருக்கிறோமென்பதை நன்குணர்ந்து எஜமானியின் தோழி இதை என்னிடமளித்தாள் எஜமானியுடையதென்றும் அதைத்தோழி களவாடி யிருக்கிறாள் என்றும் எனக்குத்தெரியாது! என்று பகிரங்கமாகத் தோழியின் முன்னிலையிலேயே கூறினாராம்- காமத்தின்கோலத்தைப் பாருங்கள். ஒருகுற்றத்தையுமறியாத அபலையின் மீது பெரும்பழியைச் சுமத்த ரூஸோ சற்றேனும் பின் வாங்கினவரில்லை

சாப்பாட்டிற்கே வழியின்றி தவித்துக்கொண்டிருக்கையில் அனிஸி பிஷப்பிடம் அடைக்கலம் புகுந்து ஓர்கதோலிக்கராக மாறினார். அதுமுதல் கதோலிக் நூல்களைக் கவனமாய் படித்துவந்தார். ஷை பிஷப் ரூஸோவையும் சந்நியாசியாக மாறும்படி வற்புறுத்த பிரம்மசாரிய வாழ்க்கையில் சிறிதும் நம்பிக்கையற்ற ரூஸோ தன்னால் முடியாதென மறுத்துவிட்டார் அதன் காரணம் சந்நியாச வாழ்க்கைத் தவறானதென்றல்ல அனுஷ்டிக்க வியலாததென்றே. கபட நாடகத்தை அவர் வெறுப்பது ஓர் குற்றமாகாது. காஞ்சீபுரத்திலிருக்கும் எனது நண்பரொருவர் (சில காலம் ஓர் பத்திரிகைக்கு ஆசிரியராக விருந்தவர்) ஓர் கடிதத்தில் எனக்கு எழுதியிருந்தார். "மனிதனின் மனதில் இயற்கையாய் எழும் உணர்ச்சியைத் தடுக்க ஒருவருக்கும் உரிமையில்லை. பிச்சைக்காரர்களையும், காமிகளையும் நான் வெறுப்பதில்லை!" உண்மையில் அவர் கூறியதுபோல் ரூஸோ தனு வாழ்க்கை பயனற்றதென்றும் அனுஷ்டிக்க வியலாததென்றும், பிறரின் புகழ்ச்சிக்கு விரும்பி மணமாகாதவன்போல் நடப்பது கேவலமானதென்றும் கருதி பிஷப் விருப்பத்திற்கு மறுக்கவும் ரூஸோவை கோவிலினின்று விலக்கி விட்டார். அதன்பின்ரூஸோசிலசிபார்சுக் கடிதங்களுடன் ரென்ஸ் என்னும் ஓர் மாதிடம் வேலைக்கமர்ந்து சுமார் பத்து வருடங்கள் அவளுடைய போஷணையிலேயே யிருந்து வந்தார்.

1740ல் ரென்ஸ் சீமாட்டியிடம் ஏதோ மனஸ்தாபப்பட்டுக் கொண்டு "லியான்" நகருக்குப் பிரயாணமானார். இப்பொழுதோ வேலை ஒன்றுமில்லை. பிழைப்பிற்கு ஓர் வழிதேட வேண்

தொடர்ச்சி 15ம் பக்கம்பார்க்க,

புதுப்பாளையம் சமதர்ம வாசகசாலை வாராந்திரக் கூட்டம்.

6-5-34 மாலை 5-30 மணிக்கு தோழர் வி. தங்கவேலு அவர்கள் தலைமையில் கூடியது. தோழர் எம். நடராஜன் அவர்கள் "நமது வாசகசாலையின் நோக்கம் யாது" என்பது பற்றியும், தோழர் ப. கிருஷ்ணன் அவர்கள் "பக்தி" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். மேற்கண்ட விஷயங்களைப் பற்றி தோழர்களான எம். நடேசன், ஏ. கோவிந்தன், எம். நாராயணசாமி, ஏ. முத்துகிருஷ்ணன் ஆகியவர்கள் பேசினார்கள். வாதத்திற்குப்பின் தலைவர் முடிவுரை கூறி முடித்தார். பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 8-மணிக்கு இனிது முடிந்தது.

13-5-34 மாலை 5-மணிக்கு தோழர் வி. பி. குப்புசாமி அவர்கள் தலைமையில் நடந்தது. காஞ்சி தோழர் எம். நீலகண்டன் அவர்கள் "பாப புண்ணியம்" என்பது பற்றியும், தோழர் கே. கோபால்சாமி அவர்கள் "நமது நாடும் பிற நாடும்" என்பது பற்றியும், தோழர் ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் "பெண்ணுரிமை" என்பது பற்றியும், தோழர் ஏ. சென்னகிருஷ்ணன் அவர்கள் "பார்ப்பனீயம்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். மேற்கண்ட விஷயங்களைப் பின்பற்றியே தோழர்களான எம். நடேசன், எம். நாராயணசாமி, கோவிந்தன், எம். நடராஜன், பி. ஆர் குப்புசாமி, தங்கவேலு ஆகியவர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்கு பின் கூட்டம் இரவு 8-மணிக்கு கலைந்தது.

20-5-34 மாலை 6-மணிக்கு தோழர் எம். லட்சுமணன் அவர்கள் தலைமையில் கூடிற்று. தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் "சுயமரியாதை இயக்கம்" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். அதைப் பின்பற்றியே தோழர்களான ஏ. முத்துகிருஷ்ணன், ப. கிருஷ்ணன், சுந்தரமூர்த்தி அகியவர்கள் பேசினார்கள். கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது:—நமது தலைவர் தோழர். ஈ. வெ. ரா. அவர்கள் விடுதலையடைந்ததைப் பற்றி இக்கூட்டம் பெருமகிழ்ச்சி அடைகிறது வாசகசாலையின் சந்தோஷத்தை தோழர் ஈ. வெ. ரா. அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறது:—

திருச்சி சுயமரியாதைச் சங்கம்.

திருச்சி சுயமரியாதைச் சங்க நிர்வாககமிட்டிக்கூட்டம், ஷை சங்க காரியாலயத்தில் 23—5—34 புதன்கிழமை இரவு 8 மணிக்கு தோழர் டி. ஏ. தங்கவேலு அவர்கள் தலைமையில் கூடிற்று. அது சமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டது.

இந்த நடப்பு வருஷத்தின் வரவு செலவு கணக்குகளை பரிசீலனை செய்ய பரிசீலகராக தோழர் டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்களை நியமிக்கப்பட்டிருக்கிறது.

சுயமரியாதை அன்பரும் பார்ப்பனரல்லாதவர் இயக்கத்தலைவரும் பொது சேவையாளருமாகிய, கோயம்புத்தூர் தோழர் வி. வெரிசாடைய்யா அவர்களும் காஞ்சீபுரம் சங்கீதவித்வான் தோழர் நாயினு அவர்களும் மாணமடைந்ததைக்குறித்து அவர்களின் குடும்பத்தாருக்கு இக்கூட்டம் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

மே ௴ முடிவோடு முடிவடையும் முதலாவது ஆண்டுவிழாவை ஜுன் மாதம் 29 தேதிக்குள் ஓர் தேதி குறிப்பிட்டு நடத்துவதெனவும் அதுசமயம் சமபந்தி சாப்பாடு டிக்கட் 1 க்கு 3 அணா வீதம் வைத்து நடத்துவதெனவும், அன்றையவிழாவிற்குத் தலைமைவகிக்க தோழர் ஈ. வெ. ரா. அவர்களை கேட்டுக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பிரதி சனிக்கிழமை மாலையிலும் திருச்சி டவுன் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள நமது சங்கத்தில் சமதர்ம பாட்டுக்கச்சேரி நடத்துவதென தீர்மானிக்கப்பட்டதென காரியதரிசி எழுதுகிறார்.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றத்தின் அங்கத்தினர்கள் பொதுக்கூட்டம் ஒன்று 27-5-34 ஞாயிற்றுக்கிழமை பகல் 2-மணிக்கு 221 தங்க சாலை வீதியில் மன்றத்தின் துணைத்தலைவர் தோழர் சி. தங்கராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

தீர்மானங்கள்.

1. ஆறுமாத சந்தாரூபாஒன்றை நவம்பர்மாதத்திற்குள்ளும் மே, மாதத்திற்குள்ளும்கட்டவேண்டுமென்றும் தவறினால் டிசம்பர், ஜுன் மாதத்தில் ஒரு அணா சேர்த்துக் கட்டவேண்டுமென்றும ஜனவரி ஜுலையில் கட்டினால் இரண்டு அணா சேர்த்து கட்டுவதென்றும் அப்படியும் கட்டத்தவறினால் மன்றத்தினின்று நீக்கி விடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த 6மாத சந்தாவை ஜுன் மாதத்திற்குள் கட்டி விடுவதென்றும், அப்படித்தவறினால் ஜுலைமாதத்தில் ஒரு அணா சேர்த்துக் கட்டவேண்டும் என்றும அதுவும் தவறினால் மன்றத்தினின்று நீக்கி விடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

2. தோழர் செ, தெ. நாயகம் அவர்களின் சேர்மான நிதி.

மன்றத்தில் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும், மாதாமாதம் ஒரு ரூபாய்க்குக்குறையாமல் தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கு கணக்கில் தங்கள் பேரில் மன்றத்தின் அங்கத்தினராக உள்ளவர்கள் கட்டவேண்டும் என்றும் கட்டின பணத்தை 84 மாதத்திற்குள் திருப்பி வாங்கக் கூடாதென்றும் (முதல் கட்டின மாத முதலிலிருந்து 84மாதம்) தீர்மானிக்கப்பட்டது.

தவிர பணம் கட்டின பாஸ் புஸ்தகத்தை மன்றத்தின் காரியதரிசிக்கு மாதாமாதம் பார்வைக்குக் கொண்டுவரவேண்டுமென்றும, பார்வை இட்டதற்கு அடையாளமாக மன்றத்தின் காரியதரிசி மன்றத்தில் ஓர் ரிஜிஸ்டர் தயார் செய்து அதில் பதிவு செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

3. அங்கத்தினராக சேர விரும்புவோரின் மனுவில் இரண்டு அங்கத்தினருக்குக்குறையாமல் சிபார்சுவேண்டுமென்றும். தவிர ஷை மனு நிர்வாக சபையாரால் அங்கீகரிக்கப்பட்டால் தான் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை பெரியமெட்

சென்னை பெரியமெட் சமதர்ம சங்கத்தின் வாரந்திரக் கூட்டம் 27-5-34 மாலை 5மணிக்கு மாட்டுக்கார வீரபத்திரன் வீதி நெ. 16 கட்டிடத்தில் தோழர் கே. ஆர். எத்திராஜன் அவர்களின் தலைமையில் கூடியது.

அதுசமயம்தோழர் கே. ஆர். ரங்கசாமி அவர்கள் மதம், ஆதிதிராவிடர்கள்முன்னேற்றம், பசிப்பிணி, என்பதைப்பற்றியும். தோழர் வி. கந்தசாமியார் மதம் ஒழிந்தால்தான் மக்கள் முன்னேற்றமடைய முடியும் என்பதைப்பற்றியும் சொற்பொற்பொழிவாற்றினார்கள் தலைவர் முடிவுரையில் புத்தருடைய பிறந்த நாள் விஷயத்தைப்பற்றியும், மிக தெளிவாகவும், விரிவாகவும் சொற்பொவாற்றினார்கள். இத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

புதுக்கோட்டை திருக்கோகர்ணம்.

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் தோழியர் டி. எம். பிரகதாம்பாள் அவர்கள் பங்களாவில் 25-5-34 வெள்ளிக்கிழமையன்று மாலை 6மணிக்கு இவ்வூர் சமதர்ம வாலிபர்களின் முயற்சியால் ஒரு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தோழர்கள் வீராசாமி, நீலமேகம் ராமாமிர்தம், ராமசாமி, ராமகல்யாணி முத்தியால், குருசாமி, சுப்ரமணியம். பி. ராஜாம்பாள் டி. எம். பிரகதாம்பாள் தங்கவேலு பாப்பம்மாள். ஆர். தனம் முதலியவர்களும் மற்றும் பல தோழர்களும்விஜயம் செய்திருந்தார்கள்.

இக்கூட்டத்திற்கு தோழர் சுப்ரமணியம் அவர்கள் தலைமைவகித்து முன்னுரை கூறினார்.

தோழர் அ. போன்னம்பலம் அவர்கட்கு ஒரு வர வேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள்.

தோழர் அ. பொன்னம்பலம்அவர்கள் வரவேற்புப்பத்திரத்திற்கு பதில் கூறிவிட்டு "வாலிபர் கடமை, சீர்திருத்தம், சமதர்மம், சுயமரியாதை இயக்கம், நாஸ்திகம், பெண்கள்நிலை" என்பது பற்றிப் பேசினார். தலைவர் முடிவுரையுடன் இரவு 8-30 மணிக்கு முடிந்தது.

மயிலாப்பூர் சுயமரியாதைச் சங்கம்.

நாளிது மெ மாதம் 23ந்தேதி புதன் கிழமை மாலை 6மணிக்கு நாட்டுச்சுப்பராய முதலித்தெரு No. 1/6 B. உள்ள இல்லத்தில் சங்க நிர்வாக சபைக்கூட்டம் தோழர் எம். கே அழகப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் நிறைவேறிய தீர்மானங்களாவன.

1. நாயனுபிள்ளை என்னும் காஞ்சீவரம் சுப்பிரமணிய பிள்ளை காலஞ்சென்றமை குறித்து நமது அனுதாபத்தை அன்னவரின் குடும்பத்துக்கு தெரிவித்துக்கொள்ளுகிறது

2. தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்யும் பொழுது அவர்களின் தலைமையில் சமபந்திபோஜனம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

3 தோழர் ஈ வெ. ரா. சென்னைக்கு விஜயம் செய்யும் பொழுது மயிலாப்பூரில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

திருச்செங்கோடு தாலூகா மூன்றுவது ஆதி திராவிட மகாநாடு.

20-5-34ந்தேதிகாலை 8 மணிக்கு மேல் ஆதி திராவிட போர்டு ஆண்பாட சாலையின் முன் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் கோவைதோழர் ஆர். வீரையன் தலைமையின் கீழ் திருச்செங்கோடு தாலூகாஆதிதிராவிடமூன்றுவதுமகாநாடுநடைபெற்றது. மகாநாட்டுத்தலைவராயும் மகாநாட்டுத்திறப்பாளர் தோழர் ஆர். அண்ணப்பூரணி அம்மாள் அவர்களையும் மாலை சூட்டி ஜனங்கள் புடை சூழ ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது- தாலூகாவின் பலபாகங்களிலிருந்தும் விஜயம்செய்திருந்தனர். மகாநாட்டில் தோழர்கள்ஆர். வீரையன் ஆர். அண்ணப்பூரணி அம்மாள் ஏ. ரத்தினசபாபதி, கே. வி. அழகிர்சாமி முதலியவர்கள் அறிய பொற்பொழிவாற்றினார்கள். பிறகு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தனோபசாரத்துடன் மகாநாடு இரவு 8-மணிக்கு மேல் இனிது முடிந்தது.

கடந்த மே மாதம் 20தேதி "புரட்சி" இதழில் தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் எழுதியுள்ள சோஷியலிஸ்டு லீக் அறிக்கையைக் குறித்து நாம் இதுசமயம் சில விஷயங்களை எழுதவேண்டியது அவசியமென்றுணர்கிறோம். அவர் கூறியுள்ளபடி மத விரோத நடைமுறைகளை-உழைப்பாளிகள், தொழிலாளர்கள் அடங்கிய ஸ்தாபனங்களிலிருந்து (தனிப்படுத்தி)வேறுபடுத்தி விடவேண்டுமென்பதை நாமும் ஒத்துக்கொள்கின்றோம். நிற்க அவர் மூன்று ஸ்தாபனங்களைப்பற்றி குறிப்பிடுகிறார் என்று உணர்கிறேன். அதாவது:—

1. சமூக சீர்திருத்தங்களைக் கவனிக்கவும், கடவுள் விரோதப் பிரசாரம் செய்யவும்—ஒன்று.

2. சோஷியலிஸ்டு முறைகளை அடிப்படையாகக்கொண்டு தொழிலாளர்களுடைய ஸ்தாபன வேலை முறைகளைக் கொண்டு செலுத்துவதற்கு—இரண்டு.

3. சோஷியலிஸ்ட் சட்ட சபைக்காரர்களடங்கிய ஒரு கூட்டத்தை அமைத்தல்—மூன்று.

இன்றையநிலைமைக்குசோஷியலிஸ்டு முறைகளை அடிப்படையாகக்கொண்ட தொழிலாளர்களுடைய ஸ்தாபனமே மிக இன்றியமையாத அவசியமென்று நாம் கருதுவதைத் தோழர் ம. சிங்காரவேலு அவர்களும் ஒத்துக் கொள்வாரென்றே நம்புகிறோம். இந்த வேலையே மிக கடினமானதும்-நாட்டிற்கு மிக அவசியமானதும் அவசரமானதுமாகும். சட்டசபைகளில் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளாக ஒரு தனிக் கட்சி அமைக்கவேண்டுமென்கிற நோக்கமானது சற்று-முந்தி பரிபக்குவமானதாகுமெனலாம். நாம் தீவிர சோஷியலிஸ்டு வாதிகளோடு—ஒரு தமாஷா செய்ய துணிவோமேயானால் நாம் சட்டசபையில் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்கும் தீவிர அபிலாஷைகளுக்காகவேறு பிறரை அந்தப் பொருப்பை ஏற்றுக்கொள்ளச் செய்யலாம். இது ஒரு தமாஷே ஒழிய வேறில்லை. நாம் அறிந்தவர்களில் தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் மிக நேர்மையான தீவிர புருஷராவர். தொழிலாளர்களுடைய பெயரையும்-பலனையும் கொள்ளை கொள்ள, சரியான சோஷியலிஸ்டு அல்லாத சிலர் சட்டசபைக்காரர்களடங்கிய ஒரு கட்சியாகதிகழக் கூடுமென்பதை அவர் ஒத்துக் கொள்வார்.

சோஷலிசம்.

(சமதர்மம்)

கட்டுரை 4.

[சோஷலிஸ்ட்]

(இக்கட்டுரையில் தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் வெளியிட்ட சோஷியலிஸ்ட் லீக் அறிக்கையைக் குறித்து எழும் பிரச்சினைகள் சம்மந்தமாக பரிசிலனை செய்யப்பட்டிருப்பதோடு— தொழிலாளர்களடங்கிய சோஷியலிஸ்டு கக்ஷியின் பிரதானம் மிக நன்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ப-ர்.)

சில சுயமரியாதைக் காரர்களோடு நாம் பழக ஏற்பட்ட சொற்பகால அனுபவத்திற்குள்ளாகவே-பிரயோசனமற்ற முதல்தர பூர்ஷ்வாக்கள் சிலர் அதன் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டும்—மற்றும் வருங்கால சோஷியலிஸ்டு இயக்கத்தின் தலைவர்களென்றும் கூறிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை — நாம் அறிவோம். இந்தப் பிரயோஜனமற்ற மனிதர்கள்—தங்களுக்குக் கார் இருக்கின்றது—பணச்செலாவணி இருக்கின்றது-இன்னும் மற்ற வசதிகள் இருக்கின்றது என்ற காரணங்களைக் கொண்டு ஏழைத்தொழிலாளர்களைப் பயமுறுத்த ஏதுவாகலாம், அதன் மூலம் கஷ்டப்படும் தொழிலாளர்கள் பேரால் சட்டசபைக்குள் பிரவேசித்து, தாங்களே தான்உண்மையான—சரியான கஷ்டப்படும் மக்களின் பிரதிநிதிகள் என்றும் பறைசாற்றிக்கொண்டிருக்கலாம். ஆனால் பரிபூரணமாகத் தொழிலாளர்களுடைய அமைப்பு ஸ்தாபனமானது ஏற்படுத்தப்படாமல் சோஷியலிஸ்டு பார்லிமெண்டரி [சட்டசபை] கட்சி ஏற்படுத்தப்படுவதானது — மிக கொடுமையான— தற்கொலைக்குச் சமானமானதாகுமென்பதேநமது அழுத்தமான முடிவு.

கடவுள் மறுப்பு (விரோத) பிரசாரமும் —மற்றும் சீர்திருத்த வேலைகளும் மக்கள் விடுதலை உணர்ச்சிக்கு உகந்ததே என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் தொழிலாளர்களுடைய உயரிய மேம்பாட்டிற்கு இவைகள் நேரடியான சம்பந்தமில்லை என்னும் தோழர் சிங்காரவேலு அவர்களின் கருத்தோடு நாம் ஒத்தவராகிறோம். நமது தோழர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதையே நாமும் சென்றவாரக் கட்டுரையில்- அதாவது தொழிலாளர்களுக்கு ஆரம்ப திசையில் நாஸ்திகப் பிரசாரத்தை ஊட்டுவது கூடாதென்பதே லெனினுடைய போதனையாதுமெனக் காட்டியிருக்கிறோம்.

சுயமரியாதை இயக்கத்தில் உள்ள உற்சாக மிகுந்தவர்களில் சிலர் சிறைக்காவலின் காரணமாகவும்—முன்னதாகவே ஒன்றின் மீது வைத்துள்ள பக்ஷத்தின் காரணமாகவும் சோஷியலிஸ்டு வேலைகளை நடத்திச்செல்ல லாயக்கற்றவர்களாக இருக்கின்றனர். இவர்களே தான் முதல்தர நாஸ்திகப்பிரசாரகர்களாக நன்கு திகழக் கூடும்.

ஐக்கிய சோவியத் நாட்டில் இரு வேறுபட்ட ஸ்தாபனங்கள் வேலை செய்து வருகின்றன. அதாவது ஒன்று பொதுவுடமை ஸ்தாபனமாகும். மற்றொன்று கடவுள் விரோத ஸ்தாபனமாகும்.

நாஸ்திகரல்லாத தொழிலாளர்கள் பொதுவாக சோஷியலிஸ்டு ஸ்தாபனத்தில் தாராளமாககலந்து கொள்ள அனுமதியுண்டு. அதுபோலவே சோஷியலிஸ்டு அல்லாத மக்கள் கடவுள் விரோத ஸ்தாபனத்தில் தாராளமாக இடம் பெறுவார்கள்.

சமீபத்தில் சென்னையில் நடந்த நாஸ்திக மகாநாட்டில் நாஸ்திகர்கள் மட்டுமன்றி சாதிவாரியான நாஸ்திக வாதிகளும் வந்திருந்ததைக் கண்டு மகாநாட்டிற்கு பிரசன்னமாகியிருந்த உற்சாகமிகுந்த வாலிப கோஷ்டியார் பேராச்சரிய முற்றார்கள் என்பதை நான் நன்கு உணர்வேன். அவர்கள்நடை முறை விவாதங்களில்கலந்து கொள்ளாமல் வெறுமனேபோய்விட்டார்கள்.இது போலவே சில ஏழைத் தொழிலாளர்களும் பிற சோஷியலிஸ்டுகளும் சில சுயமரியாதைக் கூட்டங்களைக் கவனித்துப் பார்த்து விட்டு "அவர்கள் சொல்வதெல்லாம் சரிதான்—ஆனால் கடவுள் இல்லையென்றுமறுதளிக்கும்அவர்கள்பெரிய பயங்கரமானவர்கள்-கடவுள் இல்லாத இவர்கள் சுயநலம் பிடித்தவர்களே. இவர்கள் நமக்கென்ன செய்ய முடியும்?" என்று பேசிப் போகிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் தான் நாம் நமது நிலைமையை எவ்வளவு சுலபத்தில் தெளிவாக்கிக் கொள்ள வேண்டுமோ அவ்வளவு சுலபத்தில் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். நம்மைத் தொழிலாளர்கள் கடவுளற்ற பைசாசங்கள் என்று கருதுவார்களானால் நாம் நமதுலட்சியத்தையடைவதில்பின் தங்கிவிடுவோம். நம்மை யோக்கியமானவர்களென்று அவர்கள் கருத வேண்டும். மற்றும் நாம் நமக்காகவே வாழ்கிறோமென்பதை விட்டு பரந்த மனித ஜீவ உலகத்தில் நாம் நம்மை அர்ப்பணம்செய்கிறோமென்பதை அவர்கள் உணர வேண்டும். இந்த பாதைக்குத் தான் லெனின் வழிகாட்டியானார்; இதையே தான் தோழர் சிங்காரவேலு அவர்களும் எடுத்துக் காட்டுகிறார். இதுவே தான் மிகச் சிறந்தது. தொழிலாளர்களை கடவுள் பிரச்சினை சம்பந்தத்தின் காரணமாக பிரிவினைப் படுத்துவது சோஷியலிசத்திற்கு பரம விரோதமானதாகும். ஆகவே மிக தெளிவான இரண்டு ஸ்தாபனங்கள் ஏற்பட வேண்டும்.

(1) சோஷியலிஸ்டு ஸ்தாபனம்.

(2) கடவுள் விரோத ஸ்தாபனம்.

இந்த இரண்டு ஸ்தாபனங்களிலும் ஒருவர் அங்கத்தினராகயிருப்பது பெரிதும் இடைஞ்சல் இல்லையென்றாலும், ஒரு ஸ்தாபனத்தின் தலைமைப் பதவிகளில் உள்ள அங்கத்தினர்கள், மற்றொரு ஸ்தாபனத்தில் பங்கெடுத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. அநேகர்கள் இரண்டிலும் கலந்து குட்டையை குழப்பி இரண்டையும் நாசமாக்கி விடுவார்கள். அப்பேர்ப்பட்டவர்கள்-கஷ்டத்தால் அவதிபுறும் தொழிலாளிகளின் நலனுக்காகஇரண்டும் வெவ்வேறாக தனித்திருக்கக்கவனித்துக்கொள்ள வேண்டும். மற்றும் இரண்டினுடைய தலைமை ஸ்தாபனங்களும் வெவ்வேறு இடத்தில் அமைக்கப் பெற வேண்டுமென நாம் விரும்புகிறோம். "புரட்சி" சோஷியலிசத்தின் முக்கிய பத்திரிக்கையாக இருக்க வேண்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

அருப்புக்கோட்டை பகுத்தறிவு நிலையத் திறப்பு விழா.

தலைவர், திறப்பாளர் சொற்பொழிவுகள்.

வாலிபர்களின் பெருக்கம்.

பகுத்தறிவு நிலையத் திறப்பு விழா அறிக்கைக்கும், அழைப்பிற்கும் இணங்க இந்நகர வாசிகளும், சுற்றிலுமுள்ள பற்பல கிராம வாசிகளும் மாலை 5 மணி முதல் நிலையத்திற்கூட ஆரம்பித்தனர். முதலாவதாக கல்லூரணி தோழர் க. அ. புன்னைமுத்து அவர்களும், பின்னர் தலைவர் பட்டி வீரன்பட்டி தோழர் ஊ. பு. அ. சௌந்தர பாண்டியன் அவர்களும் வந்து சேர அங்கத்தினர்களால் குதூகலமாக வரவேற்கப் பட்டு ட்ராவலர்ஸ் பங்களாவுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். தலைவர் திறப்பாளருள்பட தோழர்களான கூ. ச. நா. பெரிய தம்பி, பாண்டிய நாடார் (பட்டிவீரன் பட்டி) வி. வி. ராமசாமி (முனிசிபல் சேர்மென் விருதுநகர்) ஆ. அ. ஆறுமுகம், வி. கருப்பையா நாடார், புன்னைவனநாடார், (மதுரை) ப. உ. பழனிச்சாமி நாடார், (சிங்கம் புணரி) முதலியவர்களுக்கும் மற்றும் வெளியூர் வாசிகளுக்கும் சிற்றுண்டியும், இராப்போஜனமும் வழங்கப் பட்டது. விருந்து முடிந்து தலைவர் சகாக் களுடன் நிலையத்திற்குப் புறப்பட்டனர். அவர்களை எதிர்கொண்டழைக்க நிலையத் தலைவர் உபதலைவருள்பட பெரிய தோர் கூட்டம் ஊர்வலமாகச் சென்று ஹைஸ்கூல் ரோட்டில்சிறிதுநேரம்காத்திருந்தனர். ஊர்வலத்தைஅலங்காரயானையும் முன்னின்றது குறிப்பிடத்தக்கது. தலைவர் சகாக்களுடன் கூட்டத்தார் எதிர் நோக்கி நிற்கு மிடம் வந்து சேரவும் பெருத்த கரகோஷத்தினிடையே புஷ்ப மாலைகள் சூட்டி வரவேற்கப் பட்டு ஊர்வலம் நிலையக் கட்டிடம் நோக்கிப் புறப்பட்டது வழிநெடுக அபிமானிகள் பலர், தலைவருக்கு மாலை சூட்டினர். ஊர்வலம் நிலையத்தை யடைந்ததும் தலைவரும், திறப்பாளரும் மற்றும் முக்கியஸ்தர்களும் மேடை மேல் அவரவர்களுக்கான ஆசனத்தமர்ந்தார்கள். நிலையக்கட்டிடத்தின் முன் கண்கவரும் வண்ணம் பெரியதோர் பந்தல் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அழகிய தோரணங்கள் பல கண்ணுக்கினிய காக்ஷியளித்தது. ஊர்வலம் வந்த வீதிகளிலும், பிரசங்க மேடைப் பந்தக்கால்களிலும் பொன்னுரைகள் நிறைந்த வளைவு தட்டிகளும், சிறிய போர்டுகளும் மிகுந்த எழுச்சியூட்டக் கூடிய தாயிருந்தன. ஆண்களும், பெண்களுமாக சுமார் 1000-டேர் குழுமியிருந்தனர். அக்கிராசனர் முறையே பிரேரபித்து ஆமோதித்து ஆதரிக்கப் பெற்று ஆசனத்தமர்ந்தார். தலைவர் வரவேற்புப் பாடல், தோழர்களான அண்ணாமலை, பழனிச்சாமி ஆகியவர்கள் பாடினார்கள். நிலையத்தின் சார்பாக தோழர்களான சர்க்கரைப் பாண்டியன், முத்துராமலிங்க புரம் சுயமரியாதைப் பாவலர் தி. அ. வெங்கிடசாமி, ஆசிரியர் செல்லம் இவர்கள் முறையே தலைவருக்கு வரவேற்புப் பத்திரமும், பாசுரமும் திறப்பாளருக்கு வரவேற்புப்பத்திரமும் வாசித்தளித்தனர்.

தலைவர் முன்னுரையில் நிலையத்தார் தமக்கும், தமது சகாக்களுக்கும் அளித்த வரவேற்பிற்கு வந்தனம் தந்து தாம் இந்த ஜில்லாவின் தலைவராயிருந்த காலத்தில் பழகியிருந்த பழைய நண்பர்களைக்கண்டு களிக்கவும், இப்போது புதுமையிலீடுபட்டிருக்கும் வாலிபர் பலரின் நட்பு கிடைக்கவும் கிட்டிய சந்தர்ப்பத்திற்காக மிகவும் சந்தோஷிப்பதாகக் கூறி, திறப்பாளரை நிலையத்தைத் திறந்து வைக்கக் கேட்டுக் கொண்டார். தோழர் க. அ. புன்னைமுத்து அவர்கள் தமது திறப்புப் பேருரை படித்து நிலையத்தைத் திறந்து வைத்தார். ஆசிரியர் தோழர் செல்லம் அவர்கள் "வருங்காலமும், வாலிபர் உலகமும்" என்பது பற்றி நிகழ்த்திய விரிவுரையில் தம் முன்தொங்கவிடப்பட்டிருந்த "வாலிபர் முன்வந்தால் வலிய தொன்றில்லை" என்ற போர்டைச் சுட்டிக் காட்டி வாலிபர் ஒவ்வொருவரும் இந்நிலைய முன்னேற்றமே தன்னேற்றமாய் கொண்டுழைக்க வேண்டுமென்றும், உலகப்பிரசித்தி பெற்ற நெப்போலியன் "முடியாது" என்னும் பதம் தன்னுடைய அகராதியில் இல்லையென்று கொண்ட வீரா வேசத்தைப்போலவே நாமுங் கொள்ள வேண்டுமென்றும் வாலிபர் என்ற வார்த்தையானது பலர் சுலபமாய் நினைப்பது போல் ஆண்களை மட்டுமன்றிப் பெண்களையும் குறிக்குமென்றும், ஆண்களுடன் பெண்களுக்கும் சரிநிகர் சம உரிமை வழங்க வேண்டியதவசியமும் அவசரமுமாகுமென்றும், மேல் ஜாதி, கீழ் ஜாதி ஏழை, பணக்காரனென்ற ஏற்றத் தாழ்வுகளையும் எற்றித்தள்ள வேண்டுவதும் வருங்கால வாலிபர் கடமை என்றும் சுருங்கக்கூறி விளங்க வைத்தார். பின்பு தலைவர் தமது முடிவுரையில் திறப்பாளரையும், உரையாளரையும் பாராட்டிக் கூறி நம் நாட்டில் மக்கள் முன்னேற்றத்திற்கு உருப்படியான வேலை ஏதாவது செய்ய வேண்டுமெனின் இத்தகைய பகுத்தறிவு நிலையங்களால் தான் முடியுமென்றும் உண்மையிலே ஏழை மக்களுடையவும், பொதுமக்களுடையவும் நன்மையே பிரதானமாய் இந்நிலையம் வேலை செய்யுமென்றுதாம் நம்புவதாயும் நகரப் புறங்களில் மட்டுமின்றி, கிராமாந்தரங்களிலும் முன்னேற்ற முறையில் முன்னின்று பாடுபட வேண்டுமென்றும் வாலிபர்களின் சீர்திருத்த வேலைகளில் வயோதிகர்கள் உதவி செய்யாவிடினும் உபத்திரமாவது செய்யாமலிருக்கத்தாம் கேட்டுக்கொள்வதாகவும் சமீபிக்கும் தேர்தலில் வாக்காளர்கள் தங்கள் பகுத்தறிவால் பொது ஜனாபிமானிகளைத் தேர்ந்தெடுக்கக் கேட்டுக் கொள்வதாகவும் கூறி முடித்தார். காரியதரிசி வந்தனங்கூற கூட்டம் இனிது நிறைவேறியது.

(திறப்பாளர் தோழர் புன்னைமுத்து அவர்களின் சொற்பொழிவு அடுத்தவாரம் வரும்.)

உதக மண்டலத்தில் தொழிலாளர் கக்ஷி ஆரம்ப விழா.

தோழர் ஜீவானந்தம் ஆரம்பித்து வைத்தார்.

23-5-34ந் தேதி புதன் கிழமை மாலை 4-30 மணிக்கு உதக மண்டலம் சிவலிங்கம் பிக்சர் பேலசில் தோழர்கள் எல். அப்பாசாமி, முனிசிபல் கவுன்சிலர், வி. ஷண்முகம், ஜி. ஏ. நாராயணன் ஆகியவர்களின் நன் முயற்சியால் தொழிலாளர் கக்ஷி ஒன்று துவக்கு முகத்தான் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. பெருந்திரளான மக்கள் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் குறிப்பிடத்தக்க பிரமுகர்கள், ராவ்சாஹேப், வி. ஐ. முனுசாமி பிள்ளை எம். எல். சி., தோழர்கள் சி. பாசுதேவ் எம். எல். சி., பி. ஆரிகவுடர் எம். எல். சி., நாராயணசாமிஐய்யர் பி. ஏ., எல். டி., எல். அப்பாசாமி, வி. ஷண்முகம், ஜி. ஏ. நாராயணசாமி, கான் பகதூர் காசிம் அப்துல்லா சாயபு, கவுரவ பெஞ்ச் மாஜிஸ்திரேட், கவிராஜ், ஜில்லா போர்டு செக்ரடெரி முதலியவர்களாவார்கள்.

நோட்டிசில் குறிப்பிட்ட படி குறித்த நேரத்தில் சில அசந்தர்ப்பத்தை முன்னிட்டு தோழர் சி. பாசுதேவ் அவர்கள் வரமுடியாமையால் ராவ் சாஹெப் வி. ஐ. முனுசாமி பிள்ளை எம். எல். சி., அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாகச் சில வார்த்தைகள் கூறி தொழிலாளர் கக்ஷியை ஆரம்பித்து வைக்கும்படி தோழர் ஜீவானந்தம் அவர்களைக் கேட்டுக்கொண்டார். பின்னர் தோழர் ஜீவானந்தம் அவர்கள் தொழிலாளர் கக்ஷியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், உலகெங்குமுள்ள தொழிலாளரது துயரங்களையும், கஷ்டங்களையும், விளக்கிக் கூறி, அவர்கள் முன்னேறுவதற்கு, கடைத்தேறுவதற்கு சமதர்மம் ஒன்றே ஏற்ற மருந்து என்றும், அந்த சமதர்ம ஆக்ஷியில் தொழிலாளர் ஆதிக்கம் பெற்றால் தான் அவர்கள் வாழ்வில் இன்பங்காண முடியுமென்றும், அதற்காக தொழிலாளர்களது ஒன்றுபட்ட, கட்டுப்பாடான கிளர்ச்சி வேண்டும். அதற்காக தொழிலாளர்கள் எல்லோரும் ஜாதி, மத, பேதமின்றி சங்கங்களில் சேர்ந்து, தங்கள் சக்தியை வலுப்படுத்திக் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்றும் மிக விரிவாகவும், விளக்கமாகவும் சுமார் 1-30 மணி நேரம் பேசினார். பின்னர் தோழர் சி. பாசுதேவ் அவர்கள் வந்துவிட்டமையால் அவர் தலைமை வகித்து தொழிலாளர்கள் சங்கங்களில் சேரவேண்டிய அவசியத்தைப்பற்றியும், அவர்களுடைய உரிமைகளை அடைவதற்கு அவர்களது ஒற்றுமையான கிளர்ச்சி அவசியம் என்பதைப்பற்றியும் பேசினார். பின்னர் தோழர் பி. ஆரிகவுடர் எம். எல். சி., அவர்கள் பேசுகையில், தொழிலாளர்கள் ஜாதி, மத, பேதங்களையனுஷ்டிக்கும் வரையில் ஒரு நாளும் அவர்கள் முன்னேற முடியாதென்றும் தொழிலாளர்கள் ஜாதி, மத, பேதங்களை மறந்து, தொழிலாளி, முதலாளி என்ற வகுப்புணர்ச்சியோடு நின்றுபோராட வேண்டுமென்றும், மேல் நாடுகளில் தமது சுற்றுப் பிரயாணத்தில் கண்ட அநுபவத்தில் ரஷியா ஒன்று தான் தொழிலாளிகளை கவுரவப் படுத்தும் தேசம் என்றும், அங்கு தான் தொழிலாளிகள் ஜாதி, மத, நிறபேதமற்று ஒன்றுபட்டு இன்ப வாழ்க்கை நடத்துகிறார்கள் என்றும், நமது நாட்டில் ஜாதியின் பேராலும், மதத்தின் பேராலும் பழக்க வழக்கங்கள் பேராலும் மக்களைப் பிரித்து வைத்து ஒற்றுமையைக் குலைத்து வைத்திருக்கும் கொடுமையை மிக வன்மையாகக் கண்டித்துப் பேசினார். பின்னர் தோழர் நாராயணசாமிஅய்யர். பி. ஏ. எல். டி. அவர்களால் வந்தனோபசாரங்கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

சேரியில் சமதர்மப் பிரசாரம்.

29-5-34ந் தேதி காலை 10-30 மணிக்கு காஞ்சிதாலூக்கா ஈஞ்சம்பாக்கம் சேரியில் பொதுவுடைமை பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ரயில்வே காங் தொழிலாளர்களும், இதரத் தொழிலாளர்களும் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்தில் பொதுவுடைமைக் கீதங்கள் தோழர்கள் பாடினார்கள் காஞ்சி தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் சமதர்மம் என்பது பற்றிப் பேசினாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சமதர்மக் கூட்டம்.

30-5-34ந்தேதி இரவு 8-30 மணிக்குக் காஞ்சிதாலூக்கா 61 நெம்பர் சுரோத்திரிய திருப்பருத்தி குன்றம் சேரியில் சமதர்மப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. காஞ்சி தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் "பொதுவுடைமை என்பது பற்றிப் பேசினார்.

அரக்கோணத்தில் சு. ம. திருமணம்

அரக்கோணம் மளிகை வியாபாரி தோழர் கே. ஆர். நடேசனுக்கும், தோழர் வையாபுரி முதலியார் குமாரத்தி தோழர் மோகனம்பாளுக்கும் 27—5—34காலை 8 மணிக்கு அரக்கோணம் டவுன் ஹாலில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் தலைமையில் சு. ம. திருமண ஒப்பந்தம் நடைபெற்றது.

இத்திருமணத்திற்கு வெளியூர்களில் இருந்து சுமார் 100 பேர்களுக்கு மேலாகவே வந்திருந்தார்கள். மண்டபத்தில் பெண்களும், ஆண்களுமாக சுமார் 1000 பேர்கள் வரை கூடி இருந்தார்கள். அவர்களில் முக்கியஸ்தர்கள் தோழர்கள் இந்திராணிபாலசுப்பிரமணியம், குஞ்சிதம், குருசாமி, பார்த்தசாரதி, சி. கே. குப்புசாமி, தக்கோலம் செல்லப்பா, தேவராஜய்யா நித்தியானந்தம். முதலியவர்களாகும். பெண்ணும் மாப்பிள்ளையும் டவுன் ஹால் மண்டபத்திற்குள் பெருத்த கரகோஷத்திற்கிடையில் வந்ததும், மேடை மீது நாற்காலியில் உட்கார வைத்து தோழர் தேவராஜய்யாவால் பிரஸ்தாப திருமணத்தின் சரித்திரத்தைப் பற்றி சொல்லப்பட்டு தோழர் ஈ. வெ. ராமசாமியை தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது தோழர் ஈ. வெ. ரா. தலைமை வகித்து சு. ம. திருமணம் என்பது என்ன அது ஏன் செய்யப்படுகிறது. இது வரையில் தென் இந்தியாவில் சுமார் ஆயிரம் திருமணம் வரையில் எப்படி நடக்க முடிந்தது. என்கின்ற விபரங்களை எடுத்துச் சொன்னதோடு தேசத்தில் இனி சு. ம. காரர்கள் முயற்சி இல்லாமலே இப்படிப்பட்ட திருமணங்கள் நடக்கும் என்கின்ற நம்பிக்கை இருப்பதாகவும் சொல்லி ஒருவருக்கொருவர் மாலை மாற்றிக் கொள்வதன் மூலம் மணவினை நடந்தேறியது.

பிறகு தோழர்கள் ஜோலார்பேட்டை பார்த்தசாரதி, காஞ்சிபுரம் சி. கே. குப்புசாமி, இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மாள், குஞ்சிதம் அம்மாள், குருசாமி ஆகியவர்கள் மணமக்களை பாராட்டினார்கள். பிறகு தலைவர் முடிவுரை கூறி சந்தனம், பன்னீர், கற்கண்டு, பப்பர்மிட் முதலியவை வினியோகிக்கப் பட்டு மணமக்களால் சபையோருக்கும், தலைவருக்கும், பாராட்டு கூறியவர்களுக்கும் நன்றி கூறப்பட்டு 10 மணிக்கெல்லாம் கூட்டம் கலைந்ததும் பகலில் ஒரு விருந்து நடந்தது. பிறகு மாலையில் ஆஸ்பத்திரிக்கெதிரிலுள்ள மைதானத்தில் தோழர் சி. கே. குப்புசாமி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதில் தோழர்கள் ஈ. வெ ராமசாமி, குஞ்சிதம், பார்த்தசாரதி, முதலியவர்கள் சீர்திருத்தம், சமதர்மம் என்பது பற்றி பேசினார்கள் சுமார் 500 பேர் வரை இந்து முஸ்லீம் கிறிஸ்தவர்கள் வந்திருந்தார்கள்.

தோழர்கள் ஈ. வெ. ரா. குஞ்சிதம், பார்த்தசாரதி நித்தியானந்தம் முதலியவர்கள் ஏழு மணி வண்டிக்கு சென்னைக்கு சென்றார்கள்.

சேலம் டைம்ஸ்.

"சேலம் டைம்ஸ்" என்னும் வாரப்பத்திரிக்கையின் முதல் இதழ் வரப்பெற்றோம், அப்பத்திரிகையின் நோக்கத்தில் அது பெரிதும் சேலம் ஜில்லா முழுமைக்கும், சிறப்பாக சேலம் நகருக்கும் வேண்டிய விஷயங்கள் கவனம் செலுத்தி உழைத்துவருமென்பதாகக் காணப்படுகின்றது. இது பெரிதும் பொன்னே போல் போற்றத்தக்கது.

அந்தந்த ஜில்லா சம்மந்தப்பட்ட மட்டில்ஸ்தலஸ்தாபனங்கள் கோவாப்பரேட்டிவ் என்னும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் நீதி நிர்வாக இலாக்காக்கள் தாழ்த்தப்பட்ட சமூகம் முதலியவைகளைப் பற்றி பாமர ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லவும் அந்த ஸ்தாபனங்களின்நடவடிக்கைகளைகாய்த்தல் உவத்தல் இன்றிப் போற்றவேண்டியவைகளைப்போற்றியும், கண்டிக்கவேண்டியவைகளைக் கண்டித்தும் விளக்கிக்காட்ட ஒவ்வொரு ஜில்லாக்களுக்கும் ஒவ்வொரு பத்திரிகை அவசியம் என்பதை எவரும் மறுக்கார். அத்துடன் அறிய தத்துவங்களையும் தற்காலம்மனித சமூகத்துக்கு அவசியமானதும், இன்றியமையாததுமான சமதர்மங்களின் தத்துவத்தை விளக்க வேண்டியதும் அவசியமான காரியமாகும். சேலம் டைம்சின் சொந்தக்காரரும் பத்திராதிபரும் இவ்விஷயங்களில் உண்மையான ஆர்வமும் அனுபோகமும் உடையவர்களானதால் அது சேலம் ஜில்லா முழுவதும் கிராமங்கள் சந்து பொந்துக்கள் தவறாமல் எங்கும் வியாபித்து அறிய சேவை செய்யும் என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. ஆதலால் சேலம் டைம்சை அச்ஜில்லா மக்களும் மற்றும் பொது ஜனங்களும் ஒவ்வொருவரும் ஆதரித்து அது வெகுகாலம் தொண்டு புரிந்துவர மனப்பூர்வமாய் ஆசைப்படுகிறோம்.

இதன் ஆசிரியர் தோழர் தாமஸ் பாலையா அவர்களாகும். இதன் சொந்தக்காரர் சேலம் தோழர் எஸ். சி. ரங்கசாமி அவர்களாகும். வருட சந்தா ரூ. 2. ஆகும். தனிப்பிரதி 6 பைசாவாகும்.

விலாசம்:—

மானேஜர், "சேலம் டைம்ஸ்"

சேலம்.

"கடவுளின் கருணை"

இவ்வருஷம் தென்னிந்தியாவின் கால நிலையானது சமீப காலமாக எங்கும் இருந்திராதமாதிரி 120 டிக்கிரி உஷ்ணமுள்ள வெய்யில் காய்கின்றது. இதன் பயனாக பல வீடுகள் தீப்பற்றி எரிந்து அனேக பொருள்கள் நாசமாகி பல ஆயிரக்கணக்கான பேர்கள் வீடு வாசல்களின்றி பரதவிக்கின்றனர். பலர் சிசுக்கள் உட்பட உஷ்ண வியாதியால் மடிகின்றனர். ஆயிரக்கணக்கான பறவைகள், மிருகங்கள் மற்றும் ஜீவராசிகள் கொத்துக்கொத்தாய், குலைகுலையாய் மடிகின்றன. கடவுளின் கருணையை என்னென்று சொல்லுவது? எல்லாம் நன்மைக்கே—அவனன்றி ஓரணுவுமசையாது—படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தன்னை வணங்க என்பதுபோன்ற வாக்கியங்கள் கடவுள் அருங்குணத்தையும், கருணையையும் புத்திசாலித்தனத்தையும், நல்ல தன்மையையும் இச்சம்பவங்களும் வாக்கியங்களும் எவ்வளவு விளக்குகின்றது.

அறிவிப்பு.

நமது ஆபிசிற்கு சிலர் பெயரும், ஊருமில்லாது கட்டுரைகளும்; கடிதங்களும் எழுதி வருகிறார்கள். பெயரும், ஊருமில்லாத கடிதங்களை கவனிக்கப் படமாட்டாது. பதிப்பிக்கப் படாத கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படவும் மாட்டாது.

புரட்சி மீது வழக்கு.

—0—

100 ரூபாய் அபராதம்.

"புரட்சி" பத்திரிகையில் ஆசிரியர் பெயரில்லாது வெளியிட்டதற்காக அதன் பிரசுரக் கர்த்தா தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் அவர்கள் மீது போலீசாரால் டிப்டி கலெக்டர்முன்வழக்கு தொடந்துசுமார்7, 8 வாயிதாக்கள் வரை நடந்து சென்ற 29.5.34ந் தேதி பெருந்துறை முகாமில் ஈரோடு டிப்டி கலெக்ட்டர் சி. துரைராஜ் அவர்கள்தோழர் கண்ணம்மாள்அவர்களுக்கு 100 ரூபாய்அபராதமும், செலுத்தத்தவறினால் 1மாத தண்டனையும்விதித்திருப்பதாகத் தீர்ப்பளித்தார்.

தோழர் சி, நடராஜன்

மாயவரம் தோழர் சி. நடராஜன் அவர்கள் நமது தலைவர் ஈ.வெ. ரா. அவர்கள் மீதுஏற்பட்ட கேசை முன்னிட்டு ஈரோட்டிற்கு வந்து சகல நிர்வாகங்களையும் பார்த்து வந்தது யாவராலும் அறிந்ததாகும். அவர் சென்ற 1.6.34 தேதி திரும்பவும் மாயவரத்திற்குச் சென்றுவிட்டார். மாயவரத்திலிருந்து நமதுஇயக்கப்பிரசாரவேலைகளை தமிழ் நாடெங்கும் நடைபெற ஏற்பாடு செய்து வருவார்.

ஆதலால் மகாநாடுகள் விஷயமாகவும், பிரசார விஷயமாகவும் இதுவரை ஈரோட்டிற்கு எழுதித் தெரிந்துவந்தவர்கள் இனி மாயவரத்துக்கு எழுதிக் கொள்ள வேணுமாய் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வரதராஜபுரம். சென்னை.

ஷை சங்கத்தின் ஆதரவில் 20ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு லாங்ஸ்கார்டன் ரோட் ஒயிட்டெட் ஹாலில் கூட்டம்கூட்டப்பட்டது. அதுசமயம் தோழர் திருப்பூர் சி. பழனியப்பன் தலைமையின் கீழ் மதங்களின் கோரமும், மக்களின் வீரமும் என்பதைப்பற்றி தோழர் பி. சாமிநாதன் சொற்பொழிவாற்றினார். பிறகு தோழர் ஆர். பி. வடிவேலு அவர்களால் வந்தனோபசாரம் கூறிய பின் கூட்டம் கலைக்கப்பட்டது.

புரட்சி

ஈரோடு 1934-ஆம் ஜூன் 3-உ

ஸ்தலஸ்தாபனங்கள்.

ஸ்தலஸ்தாபன சுயாட்சி என்று சொல்லப்படும் ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு, கிராமப்பஞ்சாயத்து முதலாகியவைகள் அரசாங்கத்தின் நேர்பார்வையிலிருந்து "ஜனநாயகத்துவத்"திற்கு மாற்றப்பட்டதின் பயனாக சுமார் இந்த 30 வருஷ காலத்தில் பொதுஜனங்களுக்கு ஏதாவது பயனேற்பட்டதா அல்லது அரசாங்க நேர்ப்பார்வையின் கீழ் இருந்ததைவிட மோசமான நிலையில் இருக்கின்றனவா என்பதை யோசிக்கவேண்டியதும், அதன் உண்மையைப் பாமர மக்கள் அறியும்படி செய்யவேண்டியதும் அவசியமான காரியமாகும்.

நம்மைப்பொருத்தவரை ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் கலந்திருந்ததைக் கொண்டும், சில ஸ்தலஸ்தாபன நிர்வாகங்களுக்குத் தலைமை வகித்து நிர்வாகப்பொருப்பை ஏற்றிருந்ததைக் கொண்டும் ஏற்பட்டுள்ள அனுபவத்தையும், மற்றும் அனேக ஸ்தலஸ்தாபன நிர்வாக விஷயங்களைப்பார்த்தும், கேட்டும் உள்ள அனுபவத்தைக்கொண்டும் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் ஸ்தலஸ்தாபன ஆட்சி என்பது பொதுஜனங்கள் கையில் இருப்பதைவிட, அரசாங்கத்தின் நேர்ப்பார்வையிலிருந்து வந்ததும் இனியும் அப்படியே இருந்து வருவதும் மேலானதெனக் கூறுவோம்.

அரசாங்க நேர்ப்பார்வையினால் முதலாவது அனுகூலம் என்னவென்றால் ஸ்தலஸ்தாபன நிர்வாகம் இன்று "ஜனநாயகத்தின்" கீழ் நடைபெறும் செலவுத்தன்மையில் பகுதி செலவிலேயே நடைபெறக்கூடும் என்பதும் நாணைய விஷயமும் நீதி நிர்வாகப் பாரபக்ஷமற்ற விஷயமும் இன்றுள்ள ஜனநாயக ஆட்சி நீதி நிர்வாகம் நாணயம் ஆகியவைகளைவிட பல பங்கு மேலான யோக்கிய முறையில் நடைபெறக்கூடுமென்றும் சொல்லுவோம்.

ஏனெனில் ஸ்தலஸ்தாபன நிர்வாகப் பொருப்பிலிருப்பவர்களில் 100க்கு 90 பேர் அந்நிர்வாகத்தை துஷ்ப்பிரயோகம் செய்தும் மனப்பூர்வமாய்-மனதாரத் தெரிந்து பொருளாதாரத் துறையில் தாருமாருகவும், கவலையற்றும் கையாடுதல்கள் உள்பட நாணயக்குறைவாக நடந்தும் வருகின்றார்கள் என்று நாம் எழுதினால் அதை கண்டு நமது தோழர்கள் வெட்கப்பட வேண்டுமே ஒழிய நம்மை குற்றம் காணமாட்டார்கள் என்றே கருதுகின்றோம். உதாரணமாக ஸ்தல ஸ்தாபன கண்ட்ராக்டுகள் பெரிதும் அதன் கௌரவ நிர்வாகிகளான அதன் தலைவர்கள், அங்கத்தினர்கள் ஆகியவர்களின் சொந்தப் பொருப்பிலும், சுயநல வேட்கையிலுமே நடைபெறுகின்றன என்பது சிறிது கூட ரகசியமான காரியமல்ல.

ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகள் விஷயத்திலோ சகிக்க் முடியாத அக்கிரமங்கள் நடைபெறுவதை நாம் எடுத்துக்காட்ட வேண்டுமென்று எவரும் விரும்பமாட்டார்கள் என்றே கருதுகின்றோம்.

ஏனெனில் அரசாங்க மேற்பார்வைஸ்தாபன சிப்பந்திகளுக்காவது, வேஷத்திற்காகிலும் ஒரு வித யோக்கியதாம்சமும், அனுபோகமும் ஒழுங்கு முறையும் கவனிக்கப் படுகின்றது. ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளுக்கு இவற்றில் எதுவும் சரியாக கவனிக்கப் படுவதில்லை. பி. ஏ. க்கள் மாதம் 20 ரூபாய்க்கு திண்டாடும் போது எஸ். எஸ். எல். சி. ஆள்கள், சில சமயங்களில் பாஸ் பண்ணாத ஆள்கள் இந்தக் காலத்தில் நியமிக்கப்பட்டு மாதம் 100 ரூ. 150ரூ. சம்பளங்களுக்கு எவ்வித ஒழுங்கு முறையும் கவனிக்கப்படாமல்இஷ்டம்போல் சம்பளங்கள் உயர்த்தப் படுவதையும் பார்த்தால் பொது ஜனங்களின் வரிப்பணம் ஸ்தல ஸ்தாபனங்களின் பேரால் ஜன நாயகத்தில் எவ்வளவு தூரம் பாழாக்கப்படுகின்றது என்பது சுலபமாய் விளங்கும்.

மற்றும் சிப்பந்திகள் தேர்தல் (எலக்ஷன்)களில் சம்பந்தப்பட்டதற்காகவும், அங்கத்தினர்கள் தயவிற்காகவும் மற்றும் தலைவர்கள் பலர் தாட்சண்யங்களுக்காகவும் உத்தியோகங்களை உற்பத்தி செய்வதும் அவர்களுக்கு தங்கள் இஷ்டப்படி சம்பளங்கள் அள்ளிக் கொடுப்பதுமாகிய காரியங்களைப் பார்த்தால் அரசாங்க நேர்முக நிர்வாகம் 10 மடங்கு மேலானதென்றே ஏன் சொல்லக் கூடாது.

ஸ்தல ஸ்தாபனங்களில் உத்தியோகங்கள் உற்பத்தி செய்யும் போதும் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம்நிர்ணயிக்கும் போதும் கிரேடுகள் ஏற்படுத்தி உயர்த்தப்படும் போதும் பெரிதும் வரி செலுத்துவோரின் பண விஷயத்தில் தங்களுக்கு கடுகளவாவது பொருப்பு-நாணயம்-கவலை ஆகியவை இருக்க வேண்டாமா என்று கவனிக்கும் அங்கத்தினர்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் 100க்கு 5 பேராவது உண்டா என்று கண்டு பிடிப்பது மிக கடினமான காரியமே யாகும். இப்போது உள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்கு பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம் சிப்பந்திகளை ஏற்படுத்தப்பட்டிருந்தால் இன்றைய செலவில் 3 ல் ஒருபாக செலவில் சிப்பந்திகள் ஏற்படுத்தப் பட்டிருக்கலாம் என்பதோடு இன்றைய ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளின் யோக்கியதையையும், நாணயத்தையும்விட பல மடங்கு அதிகமுள்ளவர்களாகவும் இருக்கக் கூடும் என்பதிலும் நமக்கு சந்தேகமில்லை.

இப்படியெல்லாம் நாம் எழுதுவதால் அரசாங்க நேர்ப்பார்வையில் உள்ள ஸ்தாபன நிர்வாகங்களும், சிப்பந்திகளும் அவர்களது யோக்கியதைகளும் மேன்மையானதென்றோ, நாணயமானதென்றோ, நீதியானதென்றோ சொல்லுவதாக யாரும் நினைத்துவிடக் கூடாது. அரசாங்க நிர்வாக ஊழல்களும், சிப்பந்திகள் யோக்கியதையும் நாணயக்குறைவும் நமக்கு நன்றாய்த் தெரியும். இவ் விஷயத்தில் நமக்கு 30, 40 வருஷ அனுபவமுண்டு என்றும் குறிப்பிட்ட இரண்டொரு விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களில் அட்டெண்டர் முதல், ஹைகோர்ட் ஜட்ஜி வரையிலும் இந்தியர்களைவிட ஆங்கிலேயர்கள் நாணயமும், யோக்கியப்பொருப்பும், நடு நிலையுமுள்ளவர்கள் என்பதை நாம் மறைக்க முயலவில்லை. எப்படியிருந்த போதிலும் அரசாங்க நேர்முக நிர்வாகம் பொது ஜனங்களுக்கு பொருப்புடையதாக இல்லை என்கின்ற ஆதாரத்தைக்காட்டி கிளர்ச்சி செய்து அடைந்த ஜனநாயக ஸ்தலஸ்தாபன நிர்வாகம் அரசாங்க நேர்ப்பார்வை நிர்வாகத்தைவிட கேவலமாக நடைபெறுகின்றது என்பதைக் காட்டுவதற்காகவே இவற்றை எழுதுகிறோம்.

மற்றும் தேர்தல்களில் நடக்கும் நீதிக்கொடுமையும், நாணயக் குறைவும் ஒருபுறம் இருக்க, ஸ்தலஸ்தாபனங்களில் அதன் அங்கத்தினர்களுக்குள் ஏற்படும் கட்சிப்பிரதி கட்சி உபத்திரவங்களால் நிர்வாகம் கெடுதல், நஷ்டமடைதல் முதலாகிய காரியங்கள் அரசாங்க நேர்முக ஆட்சியில் இருக்க முடியாது. சமீபகாலமாக அதாவது சுமார் 20 வருஷ காலமாக அரசாங்க ஸ்தலஸ்தாபன இலாக்கா "ஜனநாயக" மந்திரிகள் கைக்கு வந்த பின்பு ஸ்தல. ஸ்தாபனங்களுக்கு இருந்த-இருக்கவேண்டிய யோக்கியதைகள் அனேகம் அடியோடு குறைந்து போய் விட்டன. சாதாரணமான மீன் கடைகள் கள்ளுக்கடைகள் என்று சொல்லும்படியான இடங்களில் நடக்கும் நடவடிக்கைகள், வார்த்தைப்பிரயோகங்கள் ஆகியவைகள் பெரிதும் பெருகி வருகின்றன. எங்காவது ஒன்று இரண்டு ஸ்தலஸ்தாபனங்கள் சற்று கௌரவமாய் நடைபெறுகின்றது என்று சொல்லப்படுமானால் அவை பெரிதும் தலைவர் என்று சொல்லும்படியானவரின் ஏதேச்சாதிகாரத்திலும், அத்தலைவருடைய சுயநல லாபத்துக்கும் அனுகூலமாய் நடந்து வருவதாய் இருக்கலாம். அல்லது ஒன்று இரண்டு தனி விசேஷத்துவமாய் இருக்கலாம். நாம் 100க்கு 90 எண்களைப் பொருத்தே எழுதுகிறோம்.

ஸ்தலஸ்தாபனங்கள் மந்திரிகள் ஆட்சிக்கு வந்தபின் அதிக மோசமானதற்கு காரணம் சொல்ல வேண்டுமானால் உண்மையான ஜன நாயகத்துக்கு மக்களை தகுதியாக்காமல் பாமர மக்கள் பெயரால் ஒரு சிலர் அதிகாரமும், பதவியும் பணமும் அனுபவிக்கத்தக்க மாதிரியான "ஜனநாயகம்" பெற்றதாலும் அப்படிப்பெற்றவர்கள் "ஜனநாயக ஆட்சியை தங்கள் சுயநலத்துக்குப்பயன் படுத்திக்கொள்ளும் கருத்தில் கட்சி பேரால் நிர்வாகம் செலுத்தவேண்டிய தாக ஏற்பட்டதினாலும் அதற்கு கௌரவமும், பிடிப்பும் இல்லாமல் போக நேரிட்டு விட்டது. நமக்குத்தெரிய ஸ்தல ஸ்தாபனங்களில் மனதார பணத்தைக் கையாடினவர்களையும் பொய்கணக்கு எழுதி பணத்தை எடுத்துக்கொண்டவர்களையும் கட்சி காரணமாக என்று கேள்வியும் கேட்பாடும்இல்லாமல் விட்டு விடப் பட்டிருக்கிறது.

நிற்க பொது முறையில் சமீபத்தில் நடந்த கல்கத்தா முனிசிபல் மேயர் தேர்தல் முதலிய பலதேர்தல்களைப்பார்த்தாலும் ஜனநாய

கம் எப்படி இருக்கின்றது என்பதும் ஒருவாறு அறியலாம். ஜனநாயகம் என்பதும், ஜனநாயகத்துவத்திற்கு உட்பட்ட அரசர்கள் ஆட்சி என்பதும் குடி ஆட்சி என்பதும் ஆகிய ஆட்சிகள் எல்லாம் இன்றைய உலகில் கஷ்டப் பட்டு உழைத்துச்சாப்பிடும் மக்களுக்கு ஒரே பலனைத்தான் கொடுத்து வருகின்றன. ஆனால் அளவில் சிறிது வித்தியாசங்கள் இருக்கலாம். பயன் எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகின்றது. இக்கஷ்டங்கள் ஒழிக்கப்பட வேண்டுமானால் இந்த 10வருஷகாலமாக எப்படி ஸ்தல ஸ்தாபன அதிகாரங்கள் "பொது ஜனங்க" ளிடமிருந்து சிறிது சிறிதாக பிடுங்கப்பட்டு விட்டதோ அதுபோலவே இப்பொழுது இருக்கும் மற்றும் சில அதிகாரங்களும் கூடிய சீக்கிரத்தில் பிடுங்கப்பட்டு கடைசியாக மற்ற இலாக்காக்களைப் போலவே சகலமும் அரசாங்க நேரடியான ஆதிக்கத்திற்கே போய் இப்போது இருப்பது போன்ற பொதுஜனங்களின் சம்மந்தத்தில் இருப்பதை மாற்றி விடவேண்டியதே அவசியமாகும்.

ஏனெனில் பொதுஜனங்களுக்கு மிகவும் முக்கியமான விஷயங்களை ஸ்தலஸ்தாபனம் ஜனநாயகம் என்னும் பேரால் ஜனநாயகத்துவம் அறியாத—அதற்கு லாயக்கில்லாத மக்களிடம் போய்ச் சேரும்படியான மாதிரியில் ஏற்பாடு செய்து அவர்கள் வசம் விட்டுப்பாமர மக்களை (ஏற்கனவே அரசாங்கம் உருஞ்சுவது ஒருபுறமிருக்க) இவர்கள் ஒருபுறம் உருஞ்சும்படி செய்வது மிக பரிதாபகரமான காரியமாகும்.

சமீப காலத்தில் சில முனிசிபாலிட்டிகளிலும், ஜில்லா போர்டுகளிலும் ஏற்பட்ட சம்பவங்களையும் அது விஷயமாய் ஸ்தலஸ்தாபன இலாக்கா நடந்து கொண்ட மாதிரியையும் அதனால் பொது ஜனங்கள், பாமர மக்கள் எப்படி எப்படி பாதிக்கப்படுகிறார்கள், அவமானப்படுத்தப்படுகிறார்கள் என்பதையும் உணர்ந்தே நாம் இப்படி எழுதுகின்றோம்.

முடிவாக ஒரு விஷயத்தைக் குறித்துவிட்டு இதை முடிக்கின்றோம். அதாவது திருச்சி முனிசிபல் சேர்மனை அரசாங்கம் விரும்பாமல் அவரைப்பதவியில் இருந்து நீக்கியாய் விட்டது. பொது ஜனங்கள் இப்போது அவரையே விரும்பி மீண்டும் தேர்ந்தெடுத்து அரசாங்கத்தை அவமானப்படுத்தி விட்டார்கள். இது அரசாங்க முடிவுக்கு விரோதமாக ஜனங்கள் நடந்துகொண்ட காரியம் என்று அரசாங்கம் சொல்லி விடலாம். ஆனால் பொதுஜனங்கள் விரும்பாமல் மதுரை ஜில்லா போர்டு தலைவரை நீக்கிவிட பெரும்பான்மையோர் சம்மதித்து அபிப்பிராயத்தை முறைப்படி தெரிவித்தார்கள். இதை அரசாங்கம் லட்சியம் செய்யாமல் பொதுஜனங்களை அவமானப்படுத்தி விட்டதுடன் அவருக்கு (அப்படிப்பட்ட மதுரை ஜில்லா போர்டு தலைவருக்கு) ஒரு உத்தியோகத்தை சிருஷ்டித்து பொதுஜனங்களுடைய வரிப் பணத்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளமாகக் கொடுக்கப்பட்டும் வருகின்றது. போருக்குறைக்கு திருநெல்வேலி நீலகிரி (ஊத்தை) ஆகிய சேர்மென்களுக்கும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி சேர்மனையே மறுபடியும் பொது ஜனங்கள் தெரிந்தெடுப்பார்கள் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. இதனாலும் அரசாங்க ஸ்தலஸ்தாபன இலாக்கா மற்றொருதடவை பொதுஜனங்களால் "அவமதிக்கப்பட்ட அவமானத்திற்கு ஆளாகலாம் இந்தக் காரியங்கள் நியாயத்தையும், நிர்வாகஒழுங்கையும் ஆதாரமாகக்கொண்டுநடைபெற்றவைகளா அல்லது கக்ஷி—ஜாதி அபிமானம்—சுயநலம் ஆகியவைகளை லக்ஷியமாக கொண்டு நடைபெற்றவைகளா என்றுபார்த்தால் நியாத்தை விட கக்ஷியும் ஜாதி அபிமானமேஅதிகமாய்தாண்டவமாடி இருக்கிறது என்பது நமது அபிப்பராயம். ஆனால் நிர்வாகிகளிடம் (ஸ்தலஸ்தாபனத் தலைவர்களிடம்) பல ஒழுங்கு தவருதல்கள் இருந்திருக்கலாம், என்றாலும் அவ்வித ஒழுங்குத் தவருதல்களை விட பலமடங்கு அதிகமான ஒழுங்குத் தவருதல்கள் [நாணையத் தவரான குற்றங்கள்]செய்தவர்களை எல்லம் சும்மா விட்டுவிட்டு ஒருவர் இருவர் ஒழுங்குத் தவறுதல்கள் (அதுவும் சட்டத்தவருதல்கள்) செய்ததை மாத்திரம் கவனித்தால் அது வாதத்திற்கு சமாதானமாகுமே ஒழிய நியாயத்திற்குச்சமாதானமாகாது. ஆதலால்தான் ஸ்தல ஸ்தாபன இலாக்காவில் மேற்பார்வைகூட அரசாங்கத்தின் நேரடியான பார்வைக்குள் போய் விடவேண்டுமென்று விரும்புகின்றோம் ஏனெனில் ஸ்தல ஸ்தாபனங்கள் எப்படி சிலருடைய (செல்வவான்கள் படித்தவர்கள் ஆகியவர்களுடைய) நன்மைக்கு பயன் படுகின்றனவோ அதுபோலவே தான் ஸ்தல ஸ்தாபன நிர்வாக இலாக்காவும பிரபுக்கள், ஜமீன்தாரர்கள், செல்வவான்கள், படித்தவர் ஆகியவர்களுடைய நன்மைக்காக இருந்து வருகின்றது. இதுவரையில் இந்த இரண்டு துறையும் அரசாங்க நேரடி மேற்பார்வை, நேரடிநிர்வாகம் என்று சொல்லப்படுவதைவிட ஏழை மக்களுக்கு உழைப்பாளிகளுக்கு எவ்வித நன்மையும் அதிகமாய்ச் செய்து விடவில்லை என்பதுடன் பல தீமைகளும் செய்யாமல் இருக்கவில்லை என்று விசனத்துடன் கூறி முடிக்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சி.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் தோழர் பொப்லி ராஜா அவர்களும், தென்னிந்திய நல உரிமைச்சங்க அக்கிராசனர் தோழர் செட்டிநாட்டுக்குமாரராஜா அவர்களும்கக்ஷி சம்மந்தமான சில விஷயங்களைப் பற்றி யோசிப்பதற்காகவென்று இம்மாதம் 7, 8-தேதிகளில் மீட்டிங்குகள் கூட்ட ஏற்பாடு செய்திருப்பதாய் கட்சி அங்கத்தினர்களுக்குத் தனித்தனி அழைப்பு அனுப்பி இருக்கிறார்கள்.

அக்கட்சியானது அதாவது தென்னிந்திய பார்ப்பனரல்லாதார் கட்சியானது அரசியலிலும், சமூக இயலிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், வாழ்க்கைப்போட்டியில் சமசந்தர்ப்பம் இல்லாத மக்களுக்கும் விடுதலையும், சமத்துவமும் அளிப்பதற்காக என்று தோற்றுவிக்கப்பட்ட என்கின்ற உண்மை யாவருமறிந்ததாகும். அப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியானது இப்போது நாளடைவில் செல்வவந்தர்களான முதலாளிமார்கள், ஜமீன்தார்கள் ஆகியவர்கள் ஆதிக்கத்திற்குள்ளாகி அவர்களது நன்மைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும், பெருக்கிக்கொள்ளவுமான வழிகளுக்கே பயன்படக்கூடிய மார்க்கத்தில் திருப்பப்பட்டுவருகின்றது என்கின்ற விஷயம் பார்ப்பனரல்லாத மக்களில் பெரும்பான்மையோர் அறிந்ததாகும்.

ஆனாலும் அதை பழயபடி தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மக்கள் விடுதலைக்கும், சமத்துவத்துக்கும் திருப்ப முடியாது என்று சொல்லிவிடுவதற்கில்லை என்பது இன்னமும் நமது அபிப்பிராயம். பார்ப்பனரல்லாத சாதாரண மக்கள், அதாவது ஜமீன்தார், பிரபுக்கள் முதலாளிகள் அல்லாத மக்கள் ஒரு கட்டுப்பாடாய் இருந்து நெருக்குவார்களானால் அவர்கள் வழிக்கு வந்து கட்சியின் உண்மை நோக்கத்திற்கு உழைக்க முன் வந்தாலும் வரலாம். ஆகையால் கட்சியின் உண்மைத்தத்துவத்தில் அக்கரையுள்ள தோழர்கள் அந்தத் தேதிகளில் சென்னைக்கு வந்து தங்கள் அபிப்பிராயங்களை அதன் தலைவர்கள் என்போர்கள் அறியும்படி செய்ய வேணுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இப்போது கூட்டம் கூடுவதன் நோக்கம்பார்ப்பனர்களைக்கட்சியில் சேர்க்கலாமா வேண்டாமா என்பதற்காகவும், வரப்போகும் M. L. A. எலக்ஷன் விஷயத்தைப்பற்றி யோசிப்பதற்காகவுமே முக்கியமாய் கூட்டப்படுவதாய் இருந்தாலும் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொண்டு செய்யப் போகும் வேலை என்ன? இந்திய சட்டசபையில் நமது கொள்கை என்ன? இது வரை நாம் என்ன செய்து வந்திருக்கிறோம்? என்பவைகளையும் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆதலால் அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தவறாமல் சென்று தைரியமாய் தங்கள் அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

புரட்சி பத்திராதிபர் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி, அரஸ்ட்.

புரட்சி மீது மன்னார்குடி அடிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டிலிருந்து புரட்சி பத்திராதிபர் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களுக்கு அரஸ்ட் வாரண்டு வந்து 2—6—34 மாலை 5 மணிக்கு போலீசாரால் அரஸ்ட் செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டார் 4-ந் தேதி வழக்கு விசாரணை நடைபெறும்.

தோழர் ஈ. வெ. ரா.

தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் சனிக்கிழமை இரவு மெயிலில் ஆரணிக்குச் செல்கிறார். அங்கு தோழர் திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு உபந்யாசம் நடக்கும். பிறகு ஒரு சமயம் சென்னை சென்று விட்டு ஈரோடு திரும்பக் கூடும்.

பகுத்தறிவு
நிறுத்தப்பட்டுள்ளது.

புரட்சிக்காரியாலயத்தில் பிரசுரித்து வந்த "பகுத்தறிவு" தினசரி பத்திரிகை சென்ற வாரம் முதல் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. அப்போதே இதை "புரட்சி"யில் தெரிவித்திருந்தும் சந்தாரர்களும், ஏஜண்டுகளும் முன் பணமாக மணியார்டர்கள் அனுப்பி வருகின்றார்கள். அவற்றை அப்படியே வாபீஸ் செய்யப்பட்டு வருகின்றது. இனியாரும் அதற்காக ஆர்டர் அனுப்பாமலும், பணம் அனுப்பமலும் இருக்க வேண்டுகிறோம்.

மானேஜர் "புரட்சி"

ஈரோடு முனிசிபாலிட்டியில் மிருகக்காட்சி.

ஈரோடு முனிசிபாலிட்டியாரால் பராமரித்து வரும் பீப்பிள்ஸ் பார்க்கு என்னும் சிங்கார வனத்தில் இப்போது சிறுத்தைகள், கரடிகள், வெள்ளை எலிகள், வெள்ளைப்பெருச்சாளிகள், முதலை, பலவர்ண குழி முயல்கள், மான்கள் முதலிய பல ஜந்துக்களை வேடிக்கைக்காக வைத்து வளர்க்கிறார்கள். இவற்றுள் 2சிறுத்தை 2கரடி,ஒரு முதலை ஆகியவைகள் புதுக்கோட்டை அரசாங்கத்தாரால் இனாமாகக் கொடுக்கப்பட்டவை.

இக்காக்ஷியைக் காண ஏராளமான ஜனங்கள் தினமும் பலபாகங்களிலிருந்து வருவதால் சென்ற புதன் கிழமை முதல் கொண்டு பார்க்க வருகின்றவர்களுக்கு நபர் 1-க்கு பெரியவர்களுக்கு 6பை வீதமும், 12 வயதுக்கு உள்பட்ட சிறுவர்களுக்கு 3பை வீதமும் கட்டணம் வாங்கப்படுகின்றது.

மணமகன் தேவை.

S. S. L. C. படித்து பொருப்புள்ள உத்தியோகத்தில் ரூ 40, 50 ரூபாய் சம்பளத்தில் இருக்கும் சுமார் 25-வயதுடைய பெண்ணுக்கு தக்க மணமகன் தேவை மணமகன் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக்கொண்டவராகவும், பொருளாதார நிலையில் தகுந்த யோக்யதையும் வாலிபமும் கல்வியும் உடையவராகவும் இருக்க வேண்டும். மணமகனைப்பற்றி சகல விபரத்தோடும் எழுதப்பட்ட கடிதங்களே கவனிக்கப்படும்.

O. C.
C/o E. V. Ramasamy
"PURATCHI" ERODE.

தஞ்சை ஜில்லா
சுயமரியாதை மகாநாடு.

—:0:—

நமது மாகாண சுயமரியாதைச் சங்க நிர்வாகக் கமிட்டியின் தீர்மானப்படி இதுவரை நமது மகாநாடுகளைக்கூட்ட எவரும் முன் வரவில்லை. மாகாண நிர்வாகக் கமிட்டியோ ஜில்லா மகாநாடுகள் கூட்டக்கூடாதென்று கூறிவிட்டு எவ்வித வேலையுஞ் செய்யாது இருக்குமிடந்தெரியாதிருக்கிறது. இந்நிலையில் ஜில்லா தாலூக்கா மகாநாடுகள் நடைபெறாமலிருப்பது நம் இயக்கத்திற்கோர் முட்டுக்கட்டை போட்டாற்போலிருக்கிறது.

எனவே ஆங்காங்கே ஜில்லா, தாலூகா மகாநாடுகளைக்கூட்டி மாகாணக்கமிட்டியின் தீர்மானபபடி புதிய சங்கங்கள் நிறுவியும் அங்கத்தினர்கள் சேர்த்தும் இயக்கத்திற்கோர் புத்துணர்ச்சியுண்டாக்கவேண்டியது மிக அவசியமான காரியமாயிருக்கிறது.

இதை உத்தேசித்து தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டை, கும்பகோணம், பட்டுக்கோட்டை, தஞ்சை முதலிய இடங்களில் ஏதாவது ஒன்றில் நடத்த வேண்டுமென்று நினைக்கின்றேன். தஞ்சை ஜில்லாவிலுள்ள தோழர்களைக் கலந்து விரைவில் தகுந்த வரவேற்புக் கமிட்டி ஏற்படுத்தி இடம், காலம் முதலிய விபரங்கள் அறிவிக்கிறேன்.

சி. நடராஜன்,
மாயவரம்.

தஞ்சை ஜில்லா பிராமண மகாசபை.

பார்ப்பனீயத் தீர்மானங்கள்.

சென்ற 28-5-34ந்தேதி மாலை தஞ்சை ஜில்லா பிராமண மகாசபையின் காரியக் கமிட்டிக் கூட்டம் கும்பகோணத்தில் கூடியது.

அதுசமயம் கர்ப்பகோடிகாலமாக வேதாகமப்படி யாகங்கள்மூலம் மிருக பலி முதலியவைகளைச்சிலர் எதிர்த்து வருவதை வன்மையாகக் கண்டிப்பதோடு, அப்பேர்ப்பட்டவர்கள் கிளர்ச்சிக்கு இடங்கொடுக்கக் கூடாதென்றும், எந்த மதங்களையும் யாரும் குற்றங்குறைகள் சொல்லக் கூடாதென்றும் மத விசுவாசிகளது மனம் கொஞ்சமும் புண் படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் சர்க்காரைக்கேட்டுக்கொள்வதோடு குறிப்பாக அங்கு நடைபெறும் மத விரோதமானபிசாரங்களை அடக்கவேண்டுமெனக்கோறிதீர்மானங்கள் செய்துள்ளார்கள்.

பெண் தேவை

மாதம்60 ரூபாய் சம்பளம் வாங்கும் 30 வயதுடைய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் ஒருவருக்கு ஆங்கிலமும், தமிழுக்கற்ற ஒரு கன்னிப் பெண் தேவை. பெண் எம் மதத்தினராயிருப்பினும் சரி. மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்தாருக்கு எழுதவும்.

S. V. R.
C/o E. V. R. ஈரோடு 1—5—34

The Rational books Publishing Society Ltd,

1வது வயது மஹாசபை நோட்டீஸ்

(பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்)

அன்புள்ள தோழர்களே !

இதனடியிற்கண்ட விஷயங்களைத் தீர்மானிக்கும் பொருட்டு 27-5-34ல் நடைபெறுவதாயிருந்த ஜெனரல் பாடிமீட்டிங்கிற்குகோரமில்லாததால் 1934-ஜுன் 15ம் தேதி மாலை 4மணிக்கு கழக ஆபீசில் நடைபெறும். உருப்பினர்கள்வர வேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது-

விஷயம்

1. 31—4—34-உ முடிவாகிய முதலாவது வயதின் பாலன் ஷீட்டையும் நிறைவேற்றற் கழகத்தார் ரிப்போர்ட்டையும், வாசிக்கக் கேட்டுபாஸ் செய்தல்-
2. கழகத்தின் அடுத்த ஆண்டிற்கு வேண்டிய நிறை வேற்றற் கழக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்தல்.
3. கழக ரூல்ஸ் புஸ்தகத்தில் அவசியமான திருத்தங்கள் செய்தல்
4. அடுத்த ஆண்டிற்கு வேண்டிய ஆடிட்டரை நியமித்து ஷெயாருக்கு பீஸ் தீர்மானித்தல்.

ஈரோடு, } A. இராகவன்
காரியதரிசி

ஐரோப்பியனின் பரிஹாசம்.

"பீபிள்ஸ்" என்னும் பத்திரிகையில், ரொனல்ட் கால்பாக் என்பவர் கூறியதாக கீழ் நாட்டின் கேவலமான மணம்செய்துகொள்ளும்முறையைக் குறித்துப் பரிஹாசமாகப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

விசித்திரமான நடை, யுடை, பாவனைகள் கொண்ட 'திபெத்' என்னும் பிரதேசத்தில் 11 மாத காலம் வசித்து வந்தேன். நம்முடைய நாட்டில் பெண்களுக்குச் சுதந்திரமில்லை யென்று சொல்லுபவர்கள் திபெத்திற்குச் சென்று, பெண்கள் நடத்தப்படுவதைக் கவனிக்க வேண்டும். அங்கு நடைபெறும்விவாகத்திற்கும், நமது நாட்டில் நடைபெறும் விவாகத்திற்கும் சம்பந்தமேயிராது.

உதாரணமாகச் சொல்லுகிறேன், ஒரு குடும்பத்தில் தலைப் பிள்ளைதான் முதலில் கலியாணம் செய்து கொள்ள வேண்டும். அவன் தெருவில் ஒரு பெண் போவதைக்கண்டு அவளை மனம் புரியவேண்டுமென்று மனதில் எண்ணி விட்டால் போதும் அவளுடைய சம்மதத்தைப் பெற வேண்டுமென்ற நிர்ப்பந்தமே கிடையாது. தான் அவளைக் காதலிப்பதாக அவளிடம் தெரிவிக்கக் கூட மாட்டான். உடனே அவளுடைய இருப்பிடத்தைக் கண்டு தெரிந்துகொள்வான். அப் பெண்ணின் பெற்றோர்களிடம் சென்று 'நான் இவ்வளவு பணம் கொடுக்கிறேன் உன் பெண்ணை எனக்குக் கொடுத்து விடு' என்று கேட்பான். இந்த வியாபாரம் பலித்து விட்டால், பிறகு அந்தப் பெண் அவனுடைய மனைவிதான் இந்த விசித்திரமான பழக்கத்திற்கேற்ற சட்டம் அமுலிலிருக்கிறது. ஒரு பெண் தன் கணவன் சொற்படி நடப்பதுடன் வீட்டிலுள்ளவர்களுக்கும் கீழ்ப் படிந்து நடக்க வேண்டும். கணவனின் சகோதரர்களுக்கும் கீழ்ப் படிய வேண்டும். அதாவது ஒரு பெண் சில சமயங்களில் 4 அல்லது 5 பேர்களுக்கு மனைவியாக விருக்கவேண்டி வரும். இம் மாதிரி கஷ்டப்படும் பெண்களுக்கு வேறு கதியே கிடையாது. திரும்பி தன் தாய் வீட்டிற்குச் செல்வதும் முடியாது.

இந்திய விதவைகள்.

1931-ம் வருட ஜனத்தொகைக் கணக்கின்படி இந்தியாவிலுள்ள இளம் மனைவியர், விதவைகளின் தொகை வருமாறு:—

ஒரு வயதுக்குட்பட்ட மனைவியர் 44,082; விதவைகள் 1,515. ஒன்றுக்குமேல் ஐந்து வயதுக்குட்பட்ட மனைவியர் 7,57,770; விதவைகள் 29,365. ஐந்துக்கு மேல் பத்துவயதுக்குட்பட்ட மனைவியர்42,00,534; விதவைகள் 1,05,482. பத்துவயதுக்குட்பட்ட மனைவியர் 72,69,208; விதவைகள் 1,85,339.

குனியமுத்தூரில் சமதர்மப் பிரசாரம்.

ஜீவானந்தம் விளக்கவுரை

29—5—34 செவ்வாயன்று மாலை 8 மணிக்கு கோயமுத்தூருக்கடுத்த குனியமுத்தூரில் மாரியம்மன் கோவிலுக்கெதிரில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. தோழர்கள் எம். திரவியசகாயம். டி. ஆர். மஞ்சுளாபாய் ஆகியவர்கள் சமதர்மகீதங்கள் பாடினர்கள். பின்னர் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் "சமதர்மம்' என்பது பற்றி மிக விரிவானதோர் சொற்பொழிவாற்றினர். சொற்பொழிவில் சமதர்மிகள்—சுயமரியாதைக்காரர்கள் ஏன் ஜாதியையும், மதத்தையும்பழக்கவழக்கங்களையும், கடவுளையும் ஒழிக்கவேண்டுமென்று கூறுகிறோமென்பது பற்றி மிக விளக்கமாகப் பேசினர்கள். தோழர் அவர்கள் அத்துடன் தொழிலாளர் குறைபாடுகளையும், கஷ்டங்களையும் எடுத்தோதி மானஉணர்ச்சியுள்ள, மனிதத்தன்மையுள்ள வாலிப ரத்தமுள்ள மக்கள் யாவரும் கேவலம் புழுக்களும், பறவைகளும், விலங்கினங்களுங்கூட வயிற்றுக்குக் குறைவில்லாது இறக்காதுசுகித்திருக்க ஆறறிவுபடைத்த உலகை அதன் போக போக்கிய வளங்களைப்படைத்த தொழிலாளிகள் உண்ண வுணவுக்கும், உடைக்கும், இடவசதிக்கும் அவதியுறுவது மனித சமூகத்துக்கே மிகவும் இழிவை உண்டாக்குவதாகுமென்றும், இந்நிலைமை சமூக அமைப்பை மாற்றியமைத்து எல்லோரும் இன்புற்றிருக்கும் சமதர்மச் செந்நெறிகாண வேண்டுமென்றும் அதற்காக வாலிபர்களின் ஒன்றுபட்ட தீவிரமான உணர்ச்சியும், உத்வேகமும், தியாக சிந்தையும் கொண்ட கிளர்ச்சி மிக அவசியம் என்றும் குறிப்பிட்டார். இரவு சுமார் 11-30. மணிக்குக்கூட்டம் முடிவு பெற்றது.

ஆதிதிராவிடச்சேரியில் பொதுக்கூட்டம்.

8-6-34 வியாழக்கிழமை யன்று சுசிந்திரத்திற்குசமீபமுள்ளகலக்காட்டில் ஆதிதிராவிடர் தெருவில் தோழர் மருதாசலம், அவர்களின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் பிரபல சுயமரியாதை தொண்டரான தோழர் டி. கே. சண்முகம் அவர்கள் நாம் ஏன் தாழ்தப்பட்டோம் என்பது பற்றியும், ஆசிரியர், தோழர் சுந்தரம் அவர்கள் "இன்னுமா உறக்கம்" என்பது பற்றியும், நாகர்கோவில் சுயமரியாதை இளைஞர் சங்கக்காரியதரிசி கோட்டாறு தோழர்- ஆர். ராமையா "பண்டும் இன்றும்" என்பது பற்றியும் சொற்பொழிவு நிகழ்துவார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மதுரை முனிசிபல் வரி செலுத்துவோர் சங்கம்.

தோழர். பி. ரத்தினவேலு அவர்களுக்குப்பாராட்டு.

நாளது மே 30ந்தேதி யன்று மாலை 6-மணிக்கு மதுரை மேங்காட்டுப் பொட்டலில் வரிசெலுத்துவோர் சங்கத்தின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் கூடிற்று. அது சமயம் பட்டுக்கோட்டை தோழர். டி. டேவிஸ் அவர்கள் தோழர். எ. எஸ். அருணசலம், வெடிகுண்டு ஆசிரியர் தோழர் எ. எஸ். ஆனந்தம், ஆகியவர்கள் தோழர் பி. ரத்தினவேலு அவர்கள் பேரில் சென்னை ஸ்தலஸ்தாபன அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை பற்றியும், தற்கால ஜஸ்டிஸ் கட்சியின் பெயரால், முக்கிய தலைவர்கள் செய்துவரும், அக்கிரமச் செயல்களைப் பற்றியும், கண்டித்துப் பேசினர்கள். பின்னர் அடியில்கண்ட தீர்மானம்ஏகமனதுடன் நிறைவேறிற்று.

தீர்மானம்.

1. பொது மக்களின் பிரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட திருச்சி முனிசிபல் சேர்மன் தோழர் பி. ரத்தினவேலு தேவர் அவர்களை சென்னை ஸ்தலஸ்தாபன மந்திரியார் அரசாங்க உத்திரவுக்குக் கீழ்படியவில்லை என்ற காரணத்துக்காக சேர்மன் பதவியிலிருந்து நீக்கியும், மீண்டும் 25-5-34ல் நடந்த திருச்சி முனிசிபல் சேர்மன் எலக்‌ஷனில் தோழர் பி. ரெத்தினவேலுத் தேவர் அவர்களையே, தேர்ந்தெடுத்த கவுன்சிலர் அரசாங்கத் தலைவர்களை இக் கூட்டம் வாழ்த்துகிறது என்ற தீர்மானமும், இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

பொதுக்கூட்டம்.

தஞ்சை சுயமரியாதை சங்கத்தினுதரவில, 28-5-34 மாலையில் பெரிய கோவிலுக்கு அருகிலுள்ள மைதானத்தில், பள்ளியக்கிரகாரம் தோழர் ஆளவந்தார் அவர்கள் தலைமையில் சுயமரியாதைக் கூட்டம் கூட்டப்பட்டது.

அது சமயம் தஞ்சை தோழர் எஸ். ஆர். சுப்பண்ணு அவர்கள் 'மதக்கொடுமையும்' மக்கள் வறுமையும் என்னும் பாட்டையும், புரோகிதப் புரட்டு என்னும் பாடலையும் பாடினர். பின்னர் பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலனரவர்கள் நமது இயக்கத்தின் நோக்கத்தைப் பற்றியும், மதமும் கடவுளும், மக்கள் முன்னேற்றத்திற்கு பயன் படாதது, என்பது பற்றியும் நீண்ட நேரம் பேசி முடித்தார். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைவுற்றது.

மறுநாள்

29-5-34மாலையில் தஞ்சை கீழவாசல் குஜிலிமார்க்கெட் மைதானத்தில் சுயமரியாதைக் கூட்டம் தோழர் ஆளவந்தார் தலைமையில் ஷை சங்கத்தினுதரவில் நடந்தது. கூட்டம் ஏராளமாகக் கூடியிருந்தது. தோழர் எஸ். ஆர். சுப்பண்ணு சுயமரியாதை கீதம் பாடினர். பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலனரவர்கள் "சுயமரியாதை இயக்கம்" சமதர்மம் என்பது பற்றி சொற்பொழிவு நிகழத்தினர்.

திருமணம்.

தோழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் கோவில்பட்டி' தனுக்கோடியாபுரம் தோழர் ஐ. பால்பிள்ளை அவர்கள் குமாரர் தோழர் சுப்பிரமணியம் அவர்களுக்கும், தூத்துக்குடி சின்னக்கடைத்தெரு தோழர் பி. கைலாசம் பிள்ளையவர்கள் புதல்வி தோழர் வசந்தாவுக்கும் 7-6-34ந் தேதி தூத்துக்குடியில் திருமணம் நடை பெறுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஸோவியத் ருஷியாவில் தங்கவிளைவு.

ஸோவியத் ருஷியாவில் தங்கம் விளைவிக்கப்படுகின்றதென்ற செய்தியைக் கேட்டதும் தங்கம் சேர்த்துவைக்கும் ஐரோப்பிய வணிகர்களெல்லாம் மலைத்து விட்டனர். சென்ற வருடத்தில் மட்டும் ருஷியாவில் 150 கோடி ரூபாய் தங்கம் சேமிக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் வெள்ளி படும்பாடு தங்கத்திற்கும் ஏற்படக்கூடும்.

சர்வாதிகாரிகளின் பூர்வோத்ரம்.

பெனிட்டோ முசோலினி.

இட்டாலியின் வீரரான பெனிட்டோ முசோலினியின் தந்தையார் கொல்லுலைக் கூடம் வைத்து வேலை செய்துவந்தார், இவர் தாயார் ஓர் உபாத்தியாயினியாக இருந்தார். இவர்தனது குடும்ப வருமையால் வெறுப்புற்று வீட்டை விட்டு வெளிக் கிளம்பி, சுவஜர்லாந்தில் சாக்லெட் தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்தார். அதன் பின்னர், கட்டடம் கட்டும் இடங்களில் செங்கற்களையெடுத்துக்கொடுக்கும் கூலிவேலையில் அமர்ந்தார். கடைசியில் சிறையினின்றும் தப்பியோடினர். பிறகு பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிப்பிழைத்து வந்தார். பின்னர் ஒரு பத்திரிகை மூலம் தம் சமதர்மக் கொள்கையை இட்டாலி முழுவதும் பரவச்செய்து பாஸிஸ்டுக்கட்சியை ஏற்படுத்தினர். இப்போது இட்டாலியின் சர்வாதிகாரியானர்.

ஸ்டாலின்.

நவீன ரஷ்யாவின் சர்வாதிகாரியாக விளங்கிவருபவரான ஸ்டாலின் என்பவர், ஓர் ஏழைச் சக்கிலியின் புதல்வராவர். இவர் சிறுவயதில் செருப்புத்தைத்துப்பிழைத்து வந்தவர். எனினும், உழைப்பை மேற்கொண்டு கல்விகற்று, அரசியல் நடவடிக்கைகளில் கலந்து, அரசியல் முன்னேற்றத்துக்கு மிகவும் பாடுபட்டார். முடிவில் சோவியத் அரசாங்கத் தலைவரானர். இன்று ருஷியா முழுவதும் இவரது சொற்கேட்டு நடந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கமால்பாட்சா

இவர் மிக எளிய முகம்மதிய குடும்பத்திற் பிறந்தவர். "கல்வி கற்காமூடன்" என ஆசிரியரால் இகழப்பட்டுக் கலாசாலையினின்றும் வெளியேற்றப்பட்ட இவர் இன்று துருக்கி நாட்டின் சர்வாதிகாரியானர். மதக்கொள்கைகள் என்பவைகளையும், வேதக்கட்டளைகள் என்பவைகளையும் தன்னிஷ்டப்படி ஆட்டிவருகிறார். துருக்கிப் பெண்களை வீரப்பெண்மணிகளாக்கிக் கல்விஞானம் அளித்துள்ளார். பழைய குருட்டுப் பழக்கவழக்கங்களை வேரோடு களைந்துள்ளார். இவர் செய்துள்ள தீவிரமான சீர்திருத்தங்களைக் கண்டு மேனாடுகளும் பிரமிக்கின்றன.

இயர்க்கைமணி உதயம்.

வட ஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் சுயமரியாதைத்தோழர் எம். ஆர். ஆறுமுகம் அவர்களின் வாழ்க்கைத்துணைவியார் ஆர். எ. சரஸ்வதி 28-5-34 ஞாயிற்றுக்கிழமை இரவு 12-15 மணிக்கு ஓர் ஆண் மகவை ஈன்றனர். அக்குழந்தைக்கு இயர்க்கைமணி என்ற திருநாமம் சூட்டப்பெற்றது. தாயும், சேயும் சுகமாக இருக்கிறார்கள். (ஒரு நிருபர்)

ஒரு திருத்தம்.

20-5-34ந் தேதி 'புரட்சி' இதழின் 8ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஈ. வெ. ரா. பாராட்டுக் கூட்டச் செய்தியில் "முஸ்லீம் வாலிபர் சார்பாக என்று தோழர் டி.கே பாப்ஜான் அவர்கள் தோழர் ஈ. வெ. ரா. அவர்களைப் பாராட்டி ஓர் நீண்ட பத்திரம் வாசித்துக் கொடுத்தார்." என்றிருப்பதை தனித்த முறையில் தன் சொந்த சார்பாகவே தோழர் டி. கே. பாப்ஜான் அவர்கள் தோழர் ஈ. வெ. ரா. அவர்களைப் பாராட்டி ஓர் பத்திரம் வாசித்துக் கொடுத்தார் என திருத்தி வாசித்துக்கொள்ளக் கோருகிறோம். காரியாலயத்தார் தவறுதலுக்கு வருந்துகிறோம். (பர்)

சுந்தராம்பாள், தங்கவேலு

சுயமரியாதைத் திருமணம்.

25-5-34 வெள்ளிக்கிழமை அம்பல் எஸ். ராமனுதன் அவர்களின் சகோதரியின் புதல்வி சுந்தராம்பாளுக்கும், திருவாஞ்சியம், ஆர். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் குமாரர் தங்கவேலுவுக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணம் பூரண சுயமரியாதைக் கொள்கைப்படி நடைபெற்றது. திருமணத்திற்கு ஜே எஸ். கண்ணப்பர், டி. எம். பார்த்த சாரதி, எஸ். நடேச முதலியார் (சென்னை) டி. சேவியர் மாயவரம், சிதம்பரனுர், கிருத்திவாஸ், ஆர். ராமசாமி, சித்தக்காடு கே. ராமையா, நாகை மணி, டி. சின்னையா, கே. ஆர். பால், மன்னுர்குடி தியாகராஜன். குடவிளாகம் பார்த்தசாரதி, திருவாரூர் கே. கோவிந்தராஜ், வேம்பனூர் ஆர். ரெத்தின சபாபதி, கர்ணுஊர், மரகதவல்லி காரைக்குடி, சிவகாமி, கும்பகோணம், காவேரி அம்மாள் குப்பம்மாள் திருப்புகலூர் செல்வசுந்தரி குடவிளாகம், ஜானகி கர்ணுஊர் கே. மௌல் விபாகூா சாயபு எஸ். ஏ. சையத் காதர் பி. கல்யாணம் மன்னுர்குடி எம். தியாகராஜ செட்டியார் சிக்கல், பி. டி. சம்பந்தன் அம்பல் எம். கோவிந்தன் திருமாகாணம், ராஜமாணிக்கம் முதலியவர்கள் உள்படமாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான சுயமரியாதைத்தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டத்திற்கு 800 பேருக்கு அதிகமாகவே விஜயம் செய்திருந்தார்கள். எஸ். ராமநாதன் அவர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து திருமணத்தை நடத்திவைக்குமாறுகாரைக்குடி 'குமரன்' ஆசிரியர் எஸ். முருகப்பா அவர்களைக்கேட்டுக்கொண்டார். பின்னர் திருமண வைபவத்திற்கு வரமுடியாமல் சர். ஆர். கே. ஷண்முகம், பி. வரதராஜலு, ஈ. வி. ராமசாமி கே. ஏ. பி. விஸ்வனுதம், ஜோலார்பேட்டை பார்த்தசாரதி, நீலாவதி, பாலசுப்ரமணியம், குருசாமி, குஞ்சிதம், ராணிப்பேட்டை இந்திராணி பாலசுப்ரமணியம் ஏ. பொன்னம்பலனுர், டி. வி. ராமன், சுயமரியாதை இளைஞர் மன்றம் சமதர்மச்சங்கம், வில்லிவாக்கம், எஸ். எம். ராமசாமி செம்பிய மகாதேவி பி. பக்கிரிசாமி தமிழ் பண்டிதர் டி. டி. வி. ஹைஸ்கூல் சென்னை இவர்களிடமிருந்து வாழ்த்துக் கடிதங்களும், தந்திகளும் வந்திருந்தது. இவைகளை எஸ். ராமனுதன் சபைமுன் படித்தார்.

சொ. முருகப்பா அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாக சீர்திருத்த திருமணத்தின் அவசியத்தைப்பற்றி பேசினுர். திருமணத்தம்பதிகள் உறுதி மொழி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். திருமண நிகழ்ச்சியை ஆதரித்து ஜே. எஸ். கண்ணப்பர் டி. சேவியர், சிதம்பரனுர், டி. எம். பார்த்த சாரதி, ராமாமிர்தத்தம்மாள் கே. கே. நீலமேகம், தியாகராஜ, ஞானியார், கே. ஆர். சுப்ரமண்யம் பௌன கூட்டுறவாளர் சங்க காரியதரிசி என். எஸ். கோவிந்த சாமி (மணமகளின் சகோதரர்) என். தியாகராஜன் திருமாளம் முதலியவர்கள் பேசினுர்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் எஸ். ராமனுதன் அவர்கள் மணத்திற்திற்கு விஜயம் செய்திருந்தவர்களைப்பாராட்டிப்பேசினுர். மத்தியானம் சமபந்தி போஜனம் நடைபெற்றது. சமபந்தியில் முஸ்லீம், ஆதி திராவிடர், கிருஸ்தவர்கள், உள்பட யாவரும் இன வித்தியாசமில்லாமல் கலந்து கொண்டார்கள்-

சுயமரியாதைக் கொள்கையில் நடத்தும் இத்திருமண நிகழ்ச்சியில் எஸ். ராமனுதன் அவர்கள் சகோதரிகள் ஜெகதாம்பாள், ஜானகி இருவர்களும் திருமண நிகழ்ச்சிக் கென்று விஜயம் செய்திருந்தவர்களெல்லோரையும் மனமுவந்து வரவேற்ருர்கள். அவர்களுடைய உபசாரங்களைப்பார்த்துவிஜயம் செய்தவர்கள் கொண்ட ஆனந்தத்திற்கு அளவில்லை. பெரிய குடும்பம், பணக்காரத்தன்மை கொண்ட குடும்ப பரம்பரையைச் சேர்ந்தவர்கள். பரம்பரை சைவைக்குடும்பம் இத்தகைய பரம்பரையில் உதித்த எஸ். ராமனுதன் சகோதரிகள் செய்யும் உபசாரத்தைப்பார்த்து விஜயம் செய்திருந்தவர்கள் எல்லோரும் சாதி, சமயம், வேறுபாடின்றி எல்லா காரியத்திலும் கலந்து ஒத்துழைத்தார்கள். இந்தப்பக்கத்துக்கே இந்தத் திருமணம்எல்லாருடையமனதையும் கவர்ந்து விட்டதென்று சொல்லலாம் மாலையில் திருமணத்தம்பதிகள் உள்பட விஜயம் செய்திருந்தவர்களையும் வைத்துப் புகைப்படம் எடுக்கப்பட்டது.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

டும். அதுமதசம்பந்தமான எல்லாப்பேச்சுகளையும் விட்டொழிக்க வேண்டும். கடவுள் விரோத இயக்கத்தார்கள் அவர்களுடைய தலைமை ஸ்தாபனத்திலிருந்து வேருெரு பத்திரிகையின் மூலம் அவர்கள் வேலையை நடத்தட்டும், நாம் இன்னும் அதிகமாக யோசனை சொல்ல வேண்டுமானுல் தோழர்கள் ராமசாமி, நடராஜன், சிங்காரவேலு முதலியோர்களடங்கிய கக்ஷியானது சோஷியலிஸ்டு ஸ்தாபனத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். தோழர்கள் ராமனுதன், குருசாமி, நீலாவதி ஆகியோர்களடங்கிய கூட்டம் மற்ருெரு, ஸ்தாபனத்தின் பொருப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த சர்ந்தர்ப்பத்தில் நாம் புரட்சி காரியாலயத்தில் கிடைக்கப்பெறும். "லெனினும் மதமும்" என்ற புஸ்தகத்தைப் படிக்கும்படி சிபார்சு செய்கிருேம். இதையே புகாரின் என்பார் மிகவிரிவாக அவருடைய Historical Materialism சாஸ்திரீக லோகாயுதம் என்ற நூலில் எழுதியுள்ளார். அந்த ரசமான பாகத்தை "புரட்சி"க்கு மொழிபெயர்த்துத்தரும்படி நமது தீவிர தோழர் சிங்காரவேலு அவர்களைக் கேட்டுக் கொள்கிருேம்.

ஓளவுக்கு முஸ்லீம்கள் சோஷியலிஸ்டுகளாக இருக்கின்றனர். மத விஷயம் கவனிக்கப்படாது விட்டுவிடப்படுமானுல் அவர்கள் ஆயிரக்கணக்கில் சோஷியலிஸ்டு கட்சிக்குள் வந்து சேருவார்கள். மலபாரில் உள்ள ஆநேகமாக எல்லா மாப்ளாஸ்களும், அளவற்ற சோஷியலிஸ்டு வெறிகொண்டவர்களாக இருக்கின்றனர். அதோடு அவர்கள் மதப்பற்றுடையவர்களே. அவர்கள் மதத்தை அனுசரிக்க நாம் விட்டுவிட வேண்டும். ஆனுல் அவர்கள் சோஷியலிஸ்டு ஸ்தாபனத்தின் வலைக்குள் இழுக்கப்படவும் வேண்டும். மாப்ளாக்களைப் போலவேதான் உலகம் பூராவிலும் உள்ள முஸ்லீம்களுமாவார்கள். மனித ஜீவ நடவடிக்கையான எந்த சமத்துவ முறைகளிலும் அவர்களுடைய கவனம் பெரிதும் செல்லுகிறது. அவர்களுடைய சக்தியை நாம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். நாம் அலட்சியமாக இதை விட்டுவிடக்கூடாது. ரஷ்யாவில் நடந்த புரட்சியும் அவர்கள் விஷயத்தில் தலையிடவில்லை. அது மிக சாமர்த்தியமாக அங்கு நடத்தப்பட்டது. நாம் அவர்களுடைய மத சீர்திருத்தத்தை அவர்களுடைய பிற்கால சந்ததியார்களுக்கே விட்டுவிடுவோம். அவசியமானுல் அவர்களுடைய வருங்கால வாலிப ஜன சமுதாயமே அதை மாற்றிக்கொள்ளட்டும். முஸ்லீம்களைப் பொருத்தது எது உண்மையோ அதுவே மூர்க்க மத வைராக்கியம் கொண்ட சகலருக்கும் பொதுவான உண்மையாகும். அவர்களை சீர்திருத்த வேண்டுவது அவர்களின் வாலிப சமுதாயத்தைச் சேர்ந்ததே, அவர்களுடைய ஆவிகளைப்பற்றியோ, ஆத்மாக்களைப்பற்றியோ நமக்கு சம்பந்தமில்லை. நாம் அவர்களுடைய ஜீவித நல் வாழ்வில் கவலை கொண்டவர்களாவோம். அவர்களுடைய மத முறைகள் ஒருபுறமிருக்க, நாம் அவர்களை எல்லாம், நம்மோடு ஒன்றுசேர்த்து பலம் பொருந்திய தொழிலாளர் ஆக்க சக்தியை ஸ்தாபிப்போம். சட்டசபைகளில் பிரதிநிதித்துவ சம்பந்தமான பிரச்னைகளை போதுமான அளவுக்கு தொழிலாளர்களை அமைப்புப்படுத்திய பிறகே கிளப்ப வேண்டும்.

ஏன் கலைக்கக்கூடாது.

சர்க்கார் உத்திரவு.

திருநெல்வேலி நகரசபை கமிஷனரை உடனே நீக்கி விடவேண்டுமென்று சர்க்காருக்கு சிபார்சு செய்வதாக திருநெல்வேலி நகரசபையார் சமீபத்தில் ஒருதீர்மானத்தை நிறைவேற்றியது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். தம்வேலையின் உபயோகத்தையோ, உபயொகமின்மையையோ காட்டிக்கொள்ள கமிஷனருக்கு அவகாசம் கொடுக்கப்படவில்லையென்றும், நகர சபை தன் அதிகாரத்தை துர்விநியோகம் செய்தற்காக இரண்டு வருடத்திற்கு அதை ஏன் கலைத்து விடக் கூடாதென்பதற்கு ஒருமாதத்திற்குள் காரணம் காட்ட வேண்டுமென்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளார்கள்.

சம்பளவிகிதம்.

"ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகை எழுதுவதாவது:—ஸோபியாவில் மந்திரிகள் தங்களது சம்பளத்தில் குறைவேற்படுத்திக்கொள்ள விருக்கின்றனர். இதற்கு முன் அவர்களுடைய சம்பளமென்ன ; வென்பது தெரியவில்லை. இனி வருஷத்தில் 430-பவுனுக அவர்கள் சம்பளம் குறைக்கப் படுமெனத் தெரிகிறது. கவர்ன்மெண்டு செலவில் அவர்களுக்கான மோட்டார், ரயில்வே, செலூன், முதலிய இதர சௌகரியங்களும் அலவன்ஸ்களும்இனி நிறுத்தப்படும். ஆகவே அந்தஸ்துகாரணமாகச் செய்யப்படும். செலுவுகளெல்லாம் மறைந்து விடும். மந்திரிகள் எளிய வாழ்க்கை நடத்தி ஆடம்பரமின்றிதங்கள் கடமையைச்செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. மகாத்மா காந்தி மற்ற விஷயங்களில்முழுக்கவனஞ்செலுத்தியிருக்கிறபடியால் மற்ற துறைகளில் ஏற்படவேண்டுமென்று அவர் விரும்பிய சவுகரியங்களைப் பற்றி அவர் தற்சமயம் கவனஞ்செலுத்துவதில்லை. அப்படிஅவருக்கு அதிக வேலை யிருந்திராவிடில் பல்கெரியர் தனது மந்திரிகள் அந்தஸ்து விஷயத்தில் இப்பொழுது செய்துள்ள முடிவைப்பற்றி அவர் ஏதாகிலும் அபிப்பிராயம் வெளியிட்டிருப்பார். வருஷத்தில் 430 பவுன் என்பது இப்பொழுதுள்ள பரிவர்த்தனை விகிதத்தில் மாதம் ரூ500 ஆகிறது. நேர்மையான ஒருராஜ்யத்தில்உயர்ந்த பதவி உத்தியோகஸ்தர்களுக்கு ரூ500தான் கொடுக்கவேண்டுமென்பதாக ஒருசமயத்தில் காந்திஜீ கூறினுர்.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

டியதவசியமாயிற்று. ரூஸோ சற்று சங்கீதத்தில் தன் முயற்சியைச் செலுத்தலானார். நாடக மேடைக்கென பல பாடல்கள் எழுதி புத்தக ரூபமாக வெளியிடத் தொடங்கினார். ஆனால் அப் புதகங்களை வாங்குவார்களில்லை. ஆகவே சங்கீதத் துறையிலும் பிழைப்பிற் கிடமில்லாமல் போகவே வேனிஸ் நகரினின்று பாரிஸூக்குப் பிரயாணமாகிக்கொண்டிருந்த தூதர் ஒருவருக்குச்சங்கீத உபாத்தியாயராகத் தானும் அவருடன் சென்றார். பாரீஸில் அழகிற் சிறந்த அணங்குகளிடம் மனதைப் பறிகொடுத்தார் ஆனால் ஒருவளுடைய மையலும் முற்றவில்லை வண்டினங்கள் பல மலர்களினுட் புகுந்து தேனைப்பருகுவதை யொப்ப ரூஸோ ஸ்தீரிகளுடன் ஸ்ருங்கார லீலா விநோத குதூஹலத்துடன் கூடிக் குலவி இன்பம் நுகர்ந்தாரே யாயினும் எவளிடமும் நிரந்திரமான பற்றுள்ளவராகக் காணப்படவில்லை. ரூஸோவிற்கு எவ்வளவு குழந்தைகள் உண்டு என எவரும் கூற வியலாது என்று ஒருவர் எழுதுகிறார். ரூஸோவின் பிள்ளைகளும் பெண்களும் ஐரோப்பாவில் பல பாகங்களில் தகப்பன் யார் என அறியாது உழன்று வந்தனவாம். விந்தை! தாயும், தகப்பனும், பெண்ணும், பிள்ளையும் ஒருவரை யொருவர் அறியாது உலகில் உழன்ற விந்தை தானென்னே!!

பாரீஸ் நகரஓட்டல்ஒன்றில் யௌவன மாதொருவளைச் சந்திக்கவும் ரூஸோ அவளுடன் கூடிச் சுகியாவிடில் வாழ்க்கையே வீண் எனக் கருதி வெகுவாய்ப் பிரயததனம்செய்துமுடிவில் வெற்றி பெற்றனராம்' ஷிமாதிடம் கொண்ட மோகத்தை ரூஸோ தன் மரணத்தருவாயில் கூட மறந்தவரில்லை.இம் மாதொருவளே ரூஸோவின் மனதில் என்றும் மறையாத காதல் என்னும் உணர்ச்சியை யெழுப்பிய எழிலரசியாகும். ரூஸோவின் சரீர வலிமை சிறிது சிறுதாகக் குறையத் தலைப்பட்டது. சரீரவலிமையுடன் மனோதிடமும் குன்றலாயிற்று. காசரோகம் சற்று உண்டாயிற்று. சிறிதுகாலம் ரூஸோ மிகவும் கஷ்டப்படலானார்,

1736ம் ஆண்டில் தான் ரூஸோ முதன்முதலாக எழுதுவதற்கென பேனாவைப் பிடித்தனர். தனது 21ம் ஆண்டில் முதலாவதாக ஓர் நாடகத்தை வெளியிட்டார். இச்சமயம் பிரான்ஸ் தேசத்தில் கட்டுரைப் போட்டி யொன்று நிகழ்ந்தது. “கலைகளும், பௌதீக ரஸாயன சாஸ்திரங்களும் மனிதனின் நல்லொழுக்கத்தை முன்னேற்றமடையச் செய்வதற்கு அவசியமானவைகளா?” என்ற விஷயத்தைத் தலையங்கமாகக் கொண்டு எழுதும் சிறந்த கட்டுரைக்குஓர் பரிசு அளிப்பதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. ரூஸோ இப் போட்டியில் பலர் கலந்து கொள்வார்களாதலின் தனக்குப் பரிசு நிச்சயமாகக் கிடைக்காதென' வெண்ணிவாளவிருந்தார். ஆயின் அவரது நண்பர்கள் வற்புறுத்தவும், மனிதனின் முன்னேற்றத்திற்கு டி கலைகள் அவசியமானவைகளில்லை யெனப் பலர் புகழும் வண்ணம் அருமையானதோர் கட்டுரை வரைந்து பரிசையும் பெற்றார். அப்போட்டியில் ரூஸோ அடைந்த ஜயம் மேலும்மேலும் ஆசிரியத் துறையில் அவரது அவாவைத்தூண்டியது

ரூஸோ வரைந்த ஸ்ருங்கார நாடகம் ஒன்று நடித்துக்கொண்டிருக்கப் படுகையில் பிரான்ஸ் மன்னர் லூயி XV ம் விஜயம் செய்திருந்தார்.மன்னர் நாடகத்தைப் பார்த்து விட்டு மனமகிழ்ந்து “இதை வரைந்த ஆசிரியரை நாம் பார்க்க விரும்புகின்றோம்!” எனத் தன் மந்திரிகளிடம் தெரிவிக்கவும் தன்னை அரசர் பார்க்கவேண்டுமென விரும்புகிறார் என்ற விஷயம் ரூஸோவின் செவிகளுக்கெட்டியது. மறுநிமிடம் அவ்வூரை விட்டே ரூஸோ ஓடிவிட்டார். ஏன் என வாசகர்கள் வியப்புறலாம். ரூஸோ இதுவரையில் அரசரை நேரில் சந்தித்ததில்லை. அவருடன் சந்தித்துப் பேசுவதெனில் என்ன பேசுவது எப்படிப்பேசுவது என்ற பல்விதயோசனை வந்து விட்டது. அதையும் தவிர அரசனுடன் பேசவே அவருக்குச் சிறிதுபயமாகவுமிருந்தது. இதனின்று ரூஸோவின் மனம் எவ்வளவு தளர்ந்தது என வாசகர்கள் நன்கறிந்து கொண்டிருப்பார்கள்.

ரூஸோ தெரிஸா என்னும் மாதை மணம் செய்து கொண்டார். ஆனால் அவளுடன் கூடி சுமார் 25 ஆண்டுகள் சுகமாய் காலங்கழித்த பின்னரே அவளை மணம் செய்து கொண்டாராம். அவரதுபின்னாள் சமூக சேவையிலும், பேனாவின் வேலையிலுமேகழிந்தது “நாம் யாவரும் ஒன்றாய்க்கூடுவோம், அபலைகளை ஆதப்போம் மதங்கொண்டவர்கள் உயிரை மாய்ப்போம்! நமக்குள் நாமே புதிய சட்டத்தையும், ஞாயத்தையும் ஸ்தாபிப்போம். வகுப்பு வித்தியாசம் ஏழை தனவந்தன் என்ற பேதங்களின்றி யாவரும் ஒரேதேசத்தினர், உடன் பிறந்த சகோதரர்கள் என்ற உணர்ச்சியுடன்உழைப்போம்!” இதுவே ரூஸோவின் வாழ்க்கை நிலை ஆம் உயிர் நிலை. இதை நிறைவேற்றவே தன் பின்னாளைச் செலவிட்டார்.

ரூஸோவின் தத்துவங்களையும், அவரது நோக்கங்களையும் விளக்கு முன்னர் அவர்மீது எய்யப்பட்டுள்ள சில அம்புகளை கவனித்து விட்டு மேலேதொடங்குவோம். முதலாவதாக ரூஸோவின் சுயவாழ்க்கை பல தீயவழுக்கங்களினுட்பட்டதே. அவர் பல ஸ்தீரிகளுடன் புணர்ந்து பல குழந்தைகளைப்பெற்றிருக்கிறார்என்பதும்உண்மையே-பொய்சொல்வதற்கு சிறிதும் அஞ்சினவரில்லை என்பதும் வாஸ்தவமே. இவைகளைக் கொண்டு அவரது அறிய உபதேசங்களையும், நோக்கங்களையும் உதாசீனமாக நினைப்பது தவறு என்பதே எமது சொந்தஅபிப்பிராயம். குண்டுமணி குப்பையில் கிடப்பினும் அதன் நிறம் மாறாதுபோல், வைரம்கரியாகவிருப்பினும் பலராலும் புகழ்ந்து மதிக்கப்படுவதுபோல், தங்கம் கல் மண்ணுடன் கலந்து கிடப்பினும் அதன் உயர்வு குறையாததுபோல் ரூஸோவின் சுய வாழ்க்கை எவ்வளவு அவமதிக்கத்தக்கதாயிருப்பினும் அவரதுநோக்கம் உயர்ந்ததென்பதை எவரும் மறுக்கவியலாது. மனிதனைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. அவரும் இப்பொழுது ம்நம்முன்னர் இல்லை. அவரது உபதேசங்களை நாம் அனுஷ்டிக்க வேண்டுமேயன்றி அவரதுசுபவாழ்க்கையை எவரும் பின்பற்றவேண்டுமென கூறவில்லை வெகு நாட்கள் வரையில்பலராலும் ஏசப்பட்டு வந்த அவரது அரசியல் தத்துவங்களின் ரஸம்இப்பொழுதே சிறிது சிறிதாக உணரப்படுகிறது

உன்னத வாழ்க்கை.

உன்னத வாழ்க்கை எது? கவலையற்ற வாழ்க்கை துன்பமற்ற வாழ்க்கை பொருமையற்றவாழ்க்கை சண்டை சச்சரவற்ற வாழ்க்கை,—இன்பமான வாழ்க்கை எது? புராதீன மக்களின் வாழ்க்கையேசுயவாழ்க்கை என்பது ரூஸோவின் அபிப்பிராயம் மனிதன் பிறர்வாசனையின்றி தனிமையாக வசித்து வந்தான். காடுகளிலும், மலைகளிலும், ஆற்றோரங்களிலும், குளக்கரைகளிலும் சிறு சிறு குடிசைகள் கட்டிக்கொண்டு கவலையென்பதையே கனவிலும் உணராது சுகமாய் காலங்கழித்துவந்தான். அவனுக்கு ஆசைஎன்பதில்லை•உணவிற்கு வேண்டிய பொருள்களை வேட்டையாடி கொணர்வான். குளத்திலும், ஆற்றிலும் நீரைப்பருகுவான் மரங்களின்மீதேறி யமர்ந்து உல்லாசமாக ஊஞ்சலாடுவான். வானமேஅவனுக்கு அல்மானகிரி பூமியே பட்டுமெத்தை மரங்களும் மிருகங்களுமே நண்பர்கள். சண்டை என்பதை அறியான் அமைதியே அவனது அணிகலன்.

ஆனால் இந்த இன்ப வாழ்க்கை எவ்வளவு காலம் நீடித்திருக்கும். மனிதனுக்கு மனிதன் நேரில் சந்திக்க நேர்ந்தது. தனிவாழ்க்கை ஒழிந்தது. பலர் கூடவும் சண்டைகள் உண்டாகத் தலைப்பட்டன. அமைதி குறைந்தது. அடிமைத்தனம் ஆரம்பமாயிற்று. ஆசை என்னும் பேய் மெள்ள மெள்ள இவர்களைப்பிடித்துக் கொண்டது உலோகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவைகளின் மூலம் ஆயுதங்கள் செய்வதற்கு ஆரம்பிக்கவும் சண்டைகளும் ஒவ்வோர் நூதன ஆராய்ச்சியும் சண்டையை அதிகரித்ததென்றே கூறவேண்டும். சமத்வம் அழிந்து உயர்வு தாழ்வு, வலியோன் எளியோன் என்ற தார தம்மியம் உண்டாயிற்று. வலிமை யுள்ளவன் எளியோரைக் கொல்வதும், களவாடுவதும், அடிமையாக்குவதும் சகஜமாய் விட்டது.

தற்கால வாழ்க்கை.

ஆனால் இவ்வித அமைதியற்ற வாழ்க்கை யுண்டானதின் காரணம் மனிதனின் சேர்க்கையே. பலர் ஒன்று கூடவும், சண்டைகள் தலைப்பட்டன. தனிப்பட்ட மனிதன் வாழ்ந்த இன்ப வாழ்க்கை அநேகமாய் கனவாய் மாறியது. வாழ்க்கை அநிதாகத் தோன்றவே சமூகத்தினர் ஒன்று கூடி சண்டையை யொழித்து அமைதியாக வாழ வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். சமூக ஒப்பந்தம் ஒன்று உண்டாயிற்று. அதன் மூலம் ஒவ்வொருவருடைய உரிமைகளும் நிர்ணயிக்கப்பட்டன. டி ஒப்பந்தத்தின்படி சமூகத்தினர் நடக்காவிடில் அவர்களை தண்டிக்க ஓர் அதிகாரியையுந்தேர்ந்தெடுத்தனர். இவனே அரசன். அரசனென்பவன் சமூக ஒப்பந்தத்திலுள்ள யதாஸ்துகள் யாவும் முறையே அனுஷ்டிக்கப் படுகிறதா வென கவனிக்க வேண்டும். அனுஷ்டிக்கப் படாவிடில் மீறி நடப்பவர்களை தண்டிக்க வேண்டும்.

சர்வாதிகாரம் படைத்தவர்கள் ஜனங்களே. அரசன் ஜனங்களின் பொது அபிப்பிராயப்படி நடக்கக் கடமைப் பட்டிருக்கிறான். சட்டம் என்பது பொது மக்கள்களால் விருப்பப் படும் கட்டுப்பாடுகளே யன்றி வேறல்ல. சட்டம் என்பது பொது மக்களின் அபிப்பிராயப்படி அவர்களின் முன்னேற்றத்திற் கென செய்யப்படும் சமூகக் கட்டுப்பாடுகள் இதர அரசியல் நிர்வாக சபைகளும், அங்கத்தினர்களும் டி சட்டத்திற்குக் கீழ்ப் பட்டவர்களே. பொது அபிப்பிராயமே சாவாதிகாரி.

பொது அபிப்பிராயம்.

பொது அபிப்பிராயம் பண்டை சிறிய அரசாங்கங்களில் வெகு சுலபமாய்க் கண்டு பிடிக்கப்பட்டு வந்தது. குறிப்பிட்ட நாளில் யாவரும் ஒன்று கூடி ஆலோசித்து அரசியல் சீர்திருத்தங்களைச் செய்து வந்தனர். அரசாங்கம் இவ்விதம் பொதுஜன சபையில் நிறைவேறிய தீர்மானங்களை பிரஜைகள் யாவரும் கீழ் படிந்து நடக்கும்படி வற்புறுத்தி வந்தது. ஆனால் ஜனங்களின் தொகையும், அரசாங்கத்தின் விஸ்தீரணமும் அதிகரிக்க முன் போல் யாவரும் ஒன்று கூடி சட்டங்களைக் கொணர்ந்து அவைகளின் தாரா தம்மியத்தை ஆராய்ந்து நிறைவேற்றுவதுஎன்ற பண்டை வழக்கம் அனுஷ்டிக்க வியலாது போகவே பொது ஜன அபிப்பிராயத்தை யறிய நூதன வழியொன்று தேவையாக விருந்தது. இதன் பொருட்டு யாவரும் கூடி ஆலோசிப்பதை விடம் சகல அபிப்பிராயங்களையு முடைய சிலரை ஒவ்வோர் வகுப்பினின்றும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கொண்டு ஆலோசனைக் கமி

ட்டி யொன்று தேர்ந்தெடுக்கப் பட்டது. ஆனால் இப்படிப்பட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை யாருடையது. பொது மக்களின் நலத்தை உத்தேசித்து அவர்களுடைய சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத சட்டங்களை யுண்டாக்கத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்களை நியமிக்கும் பாத்யதை உண்மையில் ஜனங்களையே சார வேண்டும். பிறப்பில் எல்லோரும் சமமானவர்களே. அரசாங்கத்தில் எல்லலோருக்கும் ஒரே வித உரிமைகளே இருக்கவேண்டும். ஆதலின் ஷை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமைஎல்லா ஜனங்களுக்கும் இருக்க வேண்டுமேயன்றி குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் ஷை உரிமையை அளித்துப் பிறர்,அவர்களால் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்குக் கீழ்படிய வேண்டுமென்று வற்புறுத்துவது ஞாயமாகாது. சுருங்கக் கூறுங்கால் பொது ஜன சேமத்தைக் கருதி யுண்டாக்கப் பட்ட அரசாங்கத்தில் சகலருக்கும் ஒரே விதமான உரிமைகளிருக்க வேண்டும்.

சமூகம் என்பதற்குச் சரியான பொருள் விலங்கு. சமூகத்தைவிட்டுப் பிரிந்து காடு, மலை வனாந்தரங்களில் யதேச்சையாகத் திரியும் மனிதன் அடையும் இன்பத்தில் இலக்ஷத்தில் ஒருபங்கு நாகரீகப்பிராணிகளிடமில்லை. தனி மனிதனுக்கு வேண்டிய உணவு பொருள்களை இயற்கையே அன்புடன் அளிக்கின்றது. அவனுக்கு ஆசை என்ற பாசம் இல்லை. உயர்வு என்ற மமதையில்லை. தாழ்ந்தவன் என்ற அவமானமில்லை. பிறரைக்கண்டு பொறாமைப்படும் சுபாவம் அவனிடமில்லை அவனுக்குக்கவலையேது? துன்பமேது? சமூகத்திலோ சுயேச்சை ஒழிகிறது எதைத்தொடங்கினும் பிறருடைய சுகத்தையும் துன்பத்தையும் கவனித்தே ஒருவன் நடக்க வேண்டியிருக்கிறது! இது மட்டுமா? கட்டுப்பாடுகள் இவன் வாழ்க்கையில் பல. சமூகக் கட்டுப்பாடும் உற்றார் உறவினர் கட்டுப்பாடு. அரசாங்கக் கட்டுப்பாடு. இவைகளைத் தவிர மதக்கட்டுப்பாடு.

மனிதன் வாழ்க்கைக்கு இன்னல் இழைப்பது மதம். மதம் ஒழிந்தாலன்றி இன்பவாழ்க்கை அறிது கடவுள் கடவுள் என்ற பெயரை வைத்துக்கொண்டு பொது ஜனங்களின் உதிரத்தை இறக்கமின்றி உறிஞ்சும் இம் மதாசாரியார்கள் ஒழிந்தாலன்றி ஜனங்கள் கடைத்தேருவதற்கு வேறு மார்க்கமில்லை. கடவுள் என்பது ஓர் பூச்சாண்டியே. மதம் என்பது மனிதனின் சுயேச்சைக்கு பங்கம் விளைவிக்கும் ஓர் முட்டுக்கட்டையே இந்த பயங்கரமான எண்ணங்கள் நம்மைவிட்டுவிலகவெண்டும். அன்பைத் தவிர வேறு இல்லை என்ற உணர்ச்சி யேற்பட்டு எல்லோரும் ஒரே தாயின் பிள்ளைகள் போல் பாவிக்கவேண்டும் இதுவே ரூஸோவின் தத்துவமாகும்.

ரூஸோவின் பொது ஜன அபிப்பிராயம், ஜனங்களின் சர்வாதிகாரம். தனிமனிதனின் உரிமைகள், சகோதர வாஞ்சை. மதப்புரட்டு, சமூக விலங்கு முதலிய நூதன அபிப்பிராயங்கள் ஜனங்களுக்குள் ஓர்வித புதிய உணர்ச்சியைத் தூண்டிவிட்டது இவ்வித நூதனஉணர்ச்சியே பிரஞ்சு மகாபுரட்சிக்கு ஆதி காரணமாகும். அடிமைத்தனத்தை ஒழித்து குடியரசைநிலைநாட்டப்புரட்சிக்கொடியுடன் எழுந்தனர் பிரஞ்சுக்காரர்கள். கொடுங்கோல் ஆட்சி வீழ்ந்தது. சமத்துவக் கொடி வானத்தில்பறந்தது. அடிமைத்தனம் அழிந்தது. இவ்வித நூதன உணர்ச்சியை எழுப்பிய மகான் ஜீயன் ஜாக்கூஸ் ரூஸோ அவர்களை உலகமுள்ள வரையில்பிரஞ்சுக்காரர்கள் மறக்கவியலாது. என்றும் அவருக்குத்தங்கள் நன்றியறிதலை செலுத்தக்கடமைப் பட்டிருக்கிறார்கள் பிரஞ்சு மக்கள்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

போய்க் கொட்டி விட்டுவெளியில் கைகட்டி வாய் புதைத்துஏமாந்து பார்வையாய் நிற்கிறார்கள். மிகுதி அவ்வொருவனை முதலாளியோ இருமார்ந்து பாடுபட்டுப் பயனைத் தன்னிடம் கொடுத்து நிற்கும் தொழிலாளிகளை புல் பூண்டாக நினைத்து காலால் உதைத்து விரட்டி அடக்கித் தான் ஒருவனே அனுபவிக்கிறான். இவ்வநிசயம் நெடுநாள் மக்களுக்குப் புலனாகவில்லை, உலக நலன்கோறி தமது அறிவைச் செலுத்தி புத்திக்குதாரணம் எனக்கூறும் ராஜதந்திர நிபுணர்கள் நிரணயிக்கும் புதிய புதிய அரசியல் திட்டமும் ஷை சூட்சமத்தைக்கண்டு தாக்கவில்லை. உழைத்து பலனைக் கண்ணால் மட்டும் காணும் தொண்ணூற்றென்பது போ ஒரு தனி மனிதனுக்கு அடங்கி தாம் பட்டினி கிடந்து, அம் மனிதனை ஊட்டி வளர்க்கும் கொடூரம் இன்னும் உலகில் உயிரோடு இருக்கிறது!

இவ்வட்டூழிய மர்மம் வெளிப்பட்டு உலகம் உண்மையை உணருமாயின் சுயநல உருக்கொண்ட முதலாளித்தன்மை குபீரென்று மறைந்து விடுமாகையால், முதலாலாளி நிழலில் நின்று சுகித்திருந்த கடவுள், மதம், அவைகளின் பிரசாரகர்களான படித்த வேதாந்த கூட்டம் முதலியன பெரிய தடைக்கல்லாக நின்று உலகம் ஈடேர வழியின்றி இது வரை காத்து வந்தன. ஆனால் கடவுள் மகிமை மனிதர்கள் தெரிந்து கொண்ட பின்பு அதையே நம்பி நின்ற மக்களுக்கு மதத்திலிருந்த உடும்புப் பிடியும் தளர்ந்து அடியோடு விலகிப் போயிற்று. முதலாளித் தத்துவ மர்மம் தானாக வெளிக்கு வரஹேதுண்டாகவே, தொழிலாளிகள் "தாங்களே உலகைத் தாங்கி நிற்கும் இரும்புத் தூண்கள் என்ற உண்மையையும் உணர ஆரம்பித்து விட்டனர். கடவுள், மதம் முதலிய பலமான கோட்டைக்குள் உட்கார்ந்திருந்த முதலாளித்திமிரும் காற்றில் பறக்க ஆரம்பித்து விட்டது. அதன் தன்மையையே சாசுவதமென பிடித்து நின்ற எண்ணிறந்த "ஏழைத் துரோகிகள்" சும்பலும், ஈசல் போல அம்பலத்திற்கு வந்து இறகுஒடிந்துபுழுவாய் துடிக்கின்றன. தன் முன் நின்ற பெரும் பெரும் இடையூறுகளும், கஷ்டங்களும் ஒன்றன்பின் ஒன்றாய் மறையவே நெருந்தூரத்தில் இருப்பதாகத் தோன்றிய ஆனந்தமும் காட்சி கொடுக்கிறது. தொழிலாளியை சமதர்ம உலகும் கைலாகு கொடுத்து வரவேற்கிறது.

ஃ ஃ

"உலகில் எல்லோரும் உழைத்து, எல்லோரும் விளையும் பயனை பேதமின்றி ஏக காலத்தில் உண்டு களிகொள்வதென்பது முடியுங்காரியமா? தனித்தனி உரிமை போய் இன்று காணும் பிரபுவும், சாலையை சுத்தி செய்யும் "ஹரிஜனும்" ஒரே ஆகாரத்தை சமபந்தியில் உட்கொள்வது இயலும் காரியமா? வீண்கனு!" என்ற சங்கை தர்ம திட்டத்தில் மோகங்கொண்ட தோழர்களுக்கும் உண்டாகிறது. முடியும் முடியாதது என்று ஒரு காரியத்தை நிறைவேற்றப் புகு முன் வகுத்துக்கொள்வதே மனிதரின் விழ்ச்சிக்கு அஸ்திவாரம். மனிதனுக்குவேண்டியது காற்று, தண்ணீர், ஆகாரம், இம் மூன்றே மனித சரீரத்தில் ஜீவ சக்திகள். மனித தேகம் உட்கொள்ளும் சுத்த பிராண வாயு பிரபுக்கென்றும் பரம ஏழைக்கென்றும் ஆதி இந்துக்கென்றும் தனித்தனியே வகுக்கப்பட்டிருக்கிறதா? இலவசமாக வீசும் எந்த பிராண வாயு கோடீஸ்வரன் நுரையீரலில் நுழைகிறதோ, அப் பரிசுத்த வாயுவே பரம ஏழையின் தேகத்திலும் பட்டு சுகத்தை உண்டாக்குகிறது. முதலாளித் தத்துவம், காற்றைத் தமக்கு என்று ஏராளமாக சேமித்து வைத்து ஏழைக்கு சிறிதளவே கொடுத்துதவும்படி திட்டம் வகுக்கக்காணோம். மனித சுகத்தின் இன்றியமையாத அம்சமான காற்றுக்குத் தடையில்லாத போது மற்றவைகட்கு தடைகளும் விதிகளும் இருப்பானேன்!

சில வருட காலத்திற்கு முன்பு கிணறுகள் ஜலசௌகரியத்திற்கென்று கண்டுபிடிக்கப்பட்டவை. பொருள் மிகுந்தவர்கள் தங்களுக்கென்று தனித்தனி கிணறுகள் தங்கள் தங்கள் வீடுகளில் ஏற்படுத்திக்கொண்டனர். அக் காலத்தும் ஏழைகள் இயற்கையாய் ஓடும் ஆறு குளங்களில் தங்கள் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டனர். செல்வவான்களுக்கிருந்த ஜலசௌகரியம் ஏழைகளுக்கில்லாமல் பேதப்பட்டுப் போயிற்று. அந்த காலத்தில் "ஒருவர் தண்ணீருக்கென்று தனிக்கிணறு வைத்துக்கொள்வது சட்ட விரோதம். அரசாங்கம் பொதுவான ஏரி உயரத்தில் அமைத்து குழாய்கள்மூலம் செல்வவான்கள் ஏழைகள் பிராணிகள் முதலிய பேதமின்றி ஒரே ஏரித் தண்ணீரை எல்லோரும் பருகும்படி அமைத்து விடுகிறோம்" என்றால் தனிக் கிணற்றின் பாத்யஸ்தர்கள் சும்மாயிருந்திருப்பார்களா? தங்கள் கிணற்றை மூடிவிட்டு பொதுவான ஏரித்தண்ணீரை உட்கொள்ள மனமிசைவார்களா? ஆனால் இப்பொழுதோ ஸைபன்ஸிஸ்டம் ஆதிக்கம் பெற்று மூலை மூலைக்குத்தண்ணீர் குழாய்கள் வைத்து நாயும் கீழ்ச்சாதியும், ஏழையும், பிரபுவும் பொதுவாய் அமைந்திருக்கும் ஒரே ஏரித்தீர்த்தத்தை ஒரே காலத்தில் கஷ்டமின்றி பேதமில்லாமல் பருகுவதில்லையா? தனிக் கிணறு என்ற பாத்யதையையாரும் கொண்டாடப்பிரியப்படுவதில்லையே! மேலும் அது வீண் பிரயாசையும் சௌகரியமும் இல்லாதது என்றும் நினைக்கின்றனர்.

இவ்வகையில் இரண்டாவது படியான தண்ணீரும்பொதுசொத்தாகி அரசாங்க அமைப்பால் கஷ்டமின்றி மக்களுக்கு சப்ளை செய்யும் மார்க்கமும், வழக்கமாகிவிட்டது. இந்த ஏற்பாட்டையே நூறு வருடங்களுக்கு முன் யாராவது தெரிவித்திருந்தால் உலகில் அது முடியும் காரியமா? என்று சங்கையெழுவதோடு பைத்தியக்காரப்பேச்சாகவும் மாறியிருக்கலாம்.

இது போன்றே ஆகாரம் முறையும் மாறுபட்டு சமதர்ம அரசாங்கம் விளையும் பயனை ஏற்று பொதுச்சொத்தாகுமானால் உலகிலுள்ள முக்கால் பங்குத் துன்பம் அடியோடு விலகும் என்பது உறுதி. படிப்படியாய் முன்னணிக்குச் சென்றுகொண்டிருக்கும்

தொழிலாளி உலகது சமதர்ம நிலவில் நின்று பிரகாசிக்கும் காலம் மிகவும் சமீபம். அவ்வுலகமைப்பில் ஒன்றான நமது தேசமும் என்று சமதர்மஜோதியிலே கலக்கப் போகிறதோ! அன்றல்லவா “ஆனந்த தரிசனம்” கிடைக்கப் போகிறது.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தியும் அதிகரித்த தென்பதே எனது கருத்து.

காங்கிரசில் சிலர் இருக்கிறார்கள். சட்டசபை வேலையில்லாவிடில்வேறெந்த வேலையுமில்லாமல் சும்மாயிருக்க வேண்டி யிருக்கும். அவர்கள் இதர காங்கிரஸ் காரர்களிடையேயும், தங்களது கருத்துக்களைபிரசாரம் செய்து புகுத்தி விடுவார்கள். இதனாலேயே நான் அவர்களது தனிக்கட்சியை கூட்டுமாறு கேட்டேன்,

மேற்கூறியவைகளிலிருந்து தோழர் காந்தியாருடைய சுயராஜியக்கட்சியைப்பற்றிய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளலாம். அவருக்கு சட்டசபைப்பிரவேசத்தில்நம்பிக்கைஇல்லை என்பது நன்றாகவே தெரிகிறதல்லாமல் சுயராஜியக் கட்சியாரை அவர்கள் இஷ்டம் போல் ஒதுக்கி விடாவிடில் இதர காங்கிரஸ் வாதிகளையும் பிரசாரத்தினால் திருப்பி விடுவார்கள் என்ற பயத்தாலேயே தோழர் காந்தியவர்கள் “உங்கள் பிரியம் போல் நீங்கள் செய்யலாம்” என்கிற தன்மையில் சொல்லி விட்டு பிறகு அவர்கள் சமயத்தில்; முன் திரு. சத்திய மூர்த்தி அய்யர் செய்தது போல் கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைத்து விடுவார்கள் என்னும் பயத்தால் “காங்கிரஸ் கமிட்டிக்கு அரசியல் விஷயங்களை எவ்விதம் நடத்திச் செல்ல வேண்டும் என்பதைப்பற்றி சொல்லுவதற்கு உரிமையுண்டு என்று கடுவாளம் போட்டிருக்கிறார். பின்னும் அவருடைய பிரசங்கத்தில், “காங்கிரஸ்காரர்களை சட்டசபைகளிலிருந்து வெளிவருமாறு கேட்கும் உரிமை நமக்கிருக்கும், ஆனால் கெட்டவர்கள் பிரவேசித்தால் அது நம் துர் அதிர்ஷ்டமே” என்கிறார்.

தோழர் காந்தியார் சமதர்மிகளுக்கு ஒரு புத்திமதி கூறியிருப்பதை இங்கு எடுத்துக்காட்டுவது அவசியம். ஆதாவது:—

சமதர்மிகளுக்கு ஒரு வார்த்தை பொதுஜனங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டு அவர்களுக்காக வேலை செய்ய விரும்பினால் சட்டசபைகள் மூலமாக அவர்கள் அவ்விதம் செய்ய முடியாது. பொது ஜனங்களுடன் நீங்கள் நெருங்கிப் பழக வேண்டும். இங்கிலாந்தில் நல்ல மனிதர்களும், பொதுஜனத் தலைவர்களும் பார்லிமெண்ட் சபையில் பிரவேசிக்கவில்லை. முதல்தரமானவர்கள் வெளியிலிருந்துகொண்டு அவர்களுக்கு உதவியளித்து வருகிறார்கள். அவர்களில் சிலருக்குப்பத்திரிகை படிக்கவும் நேரம் கிடையாது.

இப்புத்திமதியை சுயராஜ்யக்கட்சியினருக்குஏன் சொல்லவில்லை? இங்கிலாந்தில், நல்லவர்கள், பொது ஜனத் தலைவர்கள், முதல்தரமானவர்கள், எல்லாம் பார்லிமெண்ட்டுக்குப்போகாது, வெளியிலிருந்து உதவியளித்து வருகிறார்கள் அப்படி நீங்களும் செய்யுங்கள் என்று சமதர்ம வாதிகளைப்பார்த்துமாத்திரம் சொன்னால் நல்லவர்கள் பொது ஜனத் தலைவர்கள், முதல்தரமானவர்கள் சமதர்ம வாதிகள் தான் என்பதே தோழர் காந்தி அவர்களின் அபிப்ராயமாயிருக்க வேண்டும், தன்னையும் அவ்விதம் கருதியிருக்க வேண்டும். ஆகையால்தான் இவர் சட்டசபைக்குப்போக மறுக்கிறார் என்பது விளங்கும்.

ஆனால் சுயராஜியக்கட்சியினர் சட்டசபைக்குப் போவதை நேர்முகமாக மறுக்கா திருப்பதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? மேலே சொன்ன இனத்தார்கள் அதாவது நல்லவர்கள் பொதுஜனத் தலைவர்கள், முதல்தர மானவர்கள் என்பவைகளில் எதிலும் சுயராஜியக் கட்சி அங்கத்தினர்களில் எவரையும் சேர்க்க முடியாது என்பதை தோழர், காந்தி அவர்கள் சொல்லாமல் சொல்லியிருக்கிறாரா இல்லையா? அப்படி இல்லை என்றால் சமதர்மத் தோழர்களுக்கு மாத்திரம் ஏன் தனியாக அப்புத்திமதியைக் கூற வேண்டும்? ஒன்று நான் மேலே சொல்லியமாதிரியிருக்கவேண்டும், அல்லது கெட்ட எண்ணத்துடன் சுயராஜியக் கட்சியினர் சுலபமாக சமதர்மத் தோழர்களுடைய போட்டியின்றி சட்டசபைக்கு செல்லட்டும் என்ற அபிப்ராயத்துடன் சொல்லியிருக்க வேண்டும் இந்த இரண்டைத்தவிர வேறெதுவும் இருக்க முடியாது என்பது நிச்சயம். என்னை பொருத்த அளவில் தோழர் காந்தி அவர்கள் முதலில் நான் அபிப்ராயப்பட்ட மாதிரிதான், சொல்லிருப்பாரென்றும், இரண்டாவது சொன்ன மாதிரி சமதர்மிகள் போட்டியிடாதிருக்கட்டும் என்ற ஏமாற்று வார்த்தையை சொல்லியிருக்க மாட்டாரென்று நினைக்கிறேன். ஆகையால்தான் (சத்துள்ளவர்கள்) நல்லவர்கள், பொதுஜனத் தலைவர்கள், முதல் தரமானவர்கள் சட்டசபைக்குப் போகக்கூடாது (சத்தற்ற சக்கை) யாகிய சுயராஜியக்கட்சியினரே அங்கு போகட்டும் என்னும் பொருள்பட சொல்லிருக்கிறார் என்று தெரிவதினாலேயே இத தலைப்பு கொடுத்தேன். இதில் ஏதாவது சந்தேகமிருந்தால் அன்று முடிவில் அவர் சொன்னதை நினைப்பூட்டினாலேயே அக்களங்கமும்அகன்றுவிடும்.

பாபுராஜேந்திர பிரசாத், ஸ்ரீ சி. ராஜகோபலாச்சாரியார் அவர்களது பெயர்களையும் சேர்க்க வேண்டுமென்று சுயராஜியக்கட்சியினர் வற்புறுத்தினர். இதற்கு தோழர். காந்தி அவர்கள் மேலே அவர் சொன்ன பிரகாரம், மேற்குறிப்பிட்ட இருவரும் தமது இரு கரங்களெனவும், அவர்களது கவனத்தை சட்டசபை வேலையில் திருப்பினால் காங்கிரஸ் நிர்மான வேலைத்திட்டம் பாதிக்கப்படுமென்று சொல்லி அக்கொள்கையை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். இது பொதுஜனத் தலைவர்கள் முதன்மையானவர்கள் யார் யாரென்று தோழர். காந்தி அவர்கள் நினைத்திருக்கிறார் என்பதையும், சுயராஜியக் கட்சியாரைப்பற்றி பொதுப்பட என்ன அபிப்ராயம் கொண்டுள்ளார் என்பதை நீங்கள் கொஞ்சம் யோசித்தால் தெரியலாம். மற்றும் இதற்கு முன் ஓரிடத்தில் “கெட்டவர்கள் பிரவேசித்தால், அது நம் துர் அதிர்ஷ்டமே” என்று சொல்லியதிலிருந்து, சுயராஜியக்கட்சியின் மீது பொதுப்படையாக நல்லபிப்ராயமில்லை என்பதுமல்லாமல், சில கெட்டவர்களும் அதிலிருக்கலாம் என்ற பலமான சந்தேகமும் கூட யிருப்பதாகத்தெரிவதால், தோழர் காந்தியாரே அனுமதித்துவிட்டார் என்று அவர் பெயரை சொல்லி ஓட்டு வாங்குவது யோக்கிய மற்ற தாகும்.

முடிவாக இன்னொன்று மாத்திரம் சொல்லிவிடுகிறேன். திரு. சத்திய மூர்த்தி அய்யருடைய சமுதாய அரசில் கொள்கைகள் இவ்வளவு தெரிந்திருந்தும், அவரை மக்கள் சட்டசபைக்குத் தேர்ந்தெடுப்பாராகில் நாம் தெரிந்து கொள்வது யாதெனில் இன்னும் நூறு வருஷத்திற்கு அவரை தேர்ந்தெடுத்த மக்களுக்கு சுதந்திரம் ஏற்படாது என்பதைத் தெரிய இனிமேல் நடக்கப்போகும் தேர்தல் நமக்கு ஓர் அளவு கோலாகும்.

இவ்வளவு தீவிரமான அபிப்ராய பேதம் தோழர் காந்தி அவர்களுக்கிருந்தும் கூட தென்னாட்டுப் பார்பனருக்கு மாறாக அவர் சட்டசபை பிரவேசத்தை பூர்ணமாக எதிர்க்கபின் வாங்கிக்கொண்டதுதான், காங்கிரசினிடத்திலும், தோழர் காந்தியாரிடத்திலும் பார்ப்பனருக்குள்ள செல்வாக்கை காட்டுகிறது. அவர்கள் இஷ்டம்போல் விடாதுபோனால் (விஷமப்) பிராசாரம் செய்து தங்கள் கருத்துகளை மற்றகாங்கிரஸ்காரரிடையேயும் புகுத்தி (கெடுத்து) விடுவார்கள் என்று பயப்படுகிறார். ஆனால் தோழர் காந்தியவர்கள் மிக ஜாக்கிரதையாக (பிராக்கட்டில்) நான் போட்டிருக்கிற வார்த்தைகளை வெளியே சொல்லாவிட்டாலும் அந்த அர்த்தந்தான் தொக்கிநிற்கின்றமாதிரியில் சொல்லுகிறார் என்று தைரியமாய்ச் சொல்லுகிறேன்.

நன்கொடை.

(திருநெல்லை தோழர்கள் ஓ. எஸ் சுடலை முத்து. எ.சுரணத்தம்மாள் ஆகியவர்கள் வாழ்க்கைத்துணை உறுதி ஞாபகர்த்தமாக நமக்கு அனுப்பியிருந்த நன்கொடை ரூ. 1ம் வரப்பெற்றோம்.) ப-ர்

கும்பகோணம்.

சங்கராச்சாரி மடத்து யாகக்கண்டனக் கூட்டம்,

22—5—34 செவ்வாய்க்கிழமை காலையிலிருந்து நகரத்திலும் சுற்று வட்ட கிராமங்களிலும் யாகக்கண்டன அறிக்கைகள் சுமார் 10000 வரையில் விநியோகிக்கப்பட்டது. மாலை 6. மணிக்கு காங்கேயன் காந்திபார்க்கில் பிரமாண்டமானதோர் கூட்டம் கூடியது. பல தோழர்கள் ஜீவகாருண்ய கீதங்கள் பாடியபின் வி. சாமிநாதன் ஆர் சக்கிரவர்த்தியை தலைமைவகிக்குமாறு கெட்டுக்கொண்டார். தலைவர் முன்னுரையாக தான் நேரில் யாகசாலையில் கண்ட காக்ஷிகளை வெகுவிரிவாகவும், தெளிவாகவும், பேசுகையில் யாகசாலைக்குள்ளும் எலக்ஷன் நடைபெறுவதாகவும் சில மூட வைதீகர்களும், செய்துகொள்ளும் ஆர்பாட்டங்களைப் பற்றியும்ஆட்டை சகிக்கமுடியாத சித்திரவதை செய்து வெதையை எடுக்கும் காட்சியையும் கண்டித்துப் பேசியபின் ஸ்ரீராஜாராம் பாகவதர், தென்னிந்தியஜீவரக்ஷகபிரச்சார சபைகாரியதரிசி டி. எஸ். ஸ்ரீபால், கே. எஸ். சுப்பிரமணியம், வி. துரைசாமி பிள்ளை முதலியவர்கள் “யாகக்கொலையை” கண்டனம் பண்ணிப்பேசியபின் கே. ஆர். சுப்பிரமணியம் கீழ்க்கண்ட தீர்மானத்தைக்கொண்டுவந்தார்.

அதை வி. சாமிநாதன் ஆதரித்துப் பேசுகையில் யாகம் செய்பவர்கள் பொது ஜன நன்மைக்காகச்செய்வதாகச் சொல்லிக்கொள்ளுகையில் போலீஸ்பந்தோபஸ்துடன்ஏன்யாகம்நடத்தவேண்டும். இப்பொழுது எந்த நாடகைவந்து மூத்திரம் பெய்து யாகசாலையை அடித்துக்கொண்டு போகச்செய்யப்போகிறார்கள். ஆகையால் யாகத்தின் பெயரால் நடக்கும் மோசங்களைக்கொண்டு ஏமாந்துபோகவேண்டாமென்று பேசியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 10 மணிக்கு முடிந்தது.

தீர்மானம்

இக் கூட்டமானது சங்கராச்சாரி மடத்தில் நடக்கும் யாகத்தில் சகிக்க முடியாத சித்திரவதை செய்து ஆடுகளைக்கொல்வதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் சர்க்கார் உடனே தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறது.

சாமிநாதன்
காரியதரிசி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வர் விருப்பமின்றி மற்றொருவர் அவரை காதலிப்பதென்பது முழுவதிலும் நீக்கப்பட்டுள்ளது. யாராவது ஒருவர் மற்றொருவருக்கு பெண்கள் சம்பந்தப்பட்ட வியாதியை உண்டாக்குவார்களேயாகில், அவர் ஒருவருடம் வன்? சிறைச்சாலையிலடைக்கப்படும் தண்டனையை அடைவார்கள் அது புருஷன் மனைவியாக இருந்த போதிலும் இத்தண்டனையை அவர்கள் அடைவது நிச்சயம். ஆபீஸில்செய்ய வேண்டிய வேலைகள் அதிகமாக இருந்தபடியால், ஓர் கிழவிரிஜிஸ்டாருக்கு உதவிபுரிய வந்தாள். வழிகாட்டியும் நானும் மேஜை பக்கத்தில் உட்கார்ந்து இருந்தோம். ஒருவேளை நாங்கள் இருவரும் விவாகம் செய்துக் கொள்ளத்தான் வந்திருக்கிறோம் என்று அயலாருக்கு புலப்பட்டிருக்கலாம். அக்கிழவி உமது நெம்பர் என்ன வென்பதை தயவுசெய்து கூறும் என்று சிறிது ஆத்திரத்துடன் கேட்டாள். என்னுடைய வழிகாட்டி கூச்சலிட்டு சிரித்து அக்கிழவியின் கேள்வியை மொழிபெயர்த்து எனக்கு கூறினாள். ரிஜிஸ்ட்ரார் கூட சிரித்து நாங்கள் அங்கே பார்க்கவந்தவர்கள் என்று தனது கிழவிக்கு எடுத்துக்கூறினாள். அக்கிழவி எனது வழிகாட்டியைப்பார்த்து "நீர் ஓர் அயல் தேசத்திய தனவந்தனுக்குஒரு நாள் எப்போதும் வழிகாட்டியாகவே அமறுவாய் என்பது எனக்கு நிச்சயம்" என்று கூறினாள். "ஏன் ஒரு நாளைக்கு அவ்வாறு வரவேண்டும்? இன்றையதினம் அப்படிவர ஏற்பாடு செய்யவும்" என்று எனது வழிகாட்டி கூறினாள். அதற்குள் நான் "ஆனால் எங்களுக்கு நெம்பர் ஒன்றும் இல்லையே" என்று கூறினேன்.

அக்கிழவி "அதைப்பற்றி ஒன்றுமில்லை; நாங்கள் உங்களுக்கு சரியாக நெம்பர் கொடுக்கிறோம்; நீர் இப்போது தயாராக இருக்கின்றீரா?" என்று வினவினாள். நான் சிறிது வயதானவனாகஇருக்கிறேன். ஆகையால் உன்னுடைய நண்பன் அதை ஒத்துக் கொள்ளமாட்டாள் என்று நான் கூறினேன்.

"நான் ஒத்துக் கொண்டால் நீர் தயாராக இருக்கின்றீர்களா?" என்று என்னுடைய வழிகாட்டி சிறித்துக் கொண்டே கூறினாள். அப்போது எனக்கு அவமானமாகிவிட்டது. "நான் சென்ற ஆண்டில் ஓர் இந்தியனுக்கு ஓர் ரஷியப்பெண்ணை விவாகம் செய்து வைத்தேன்" என்று ரிஜிஸ்ட்ரார் கூறமுன்வந்தாள். "ஆனால் நான் இதற்கு முந்தியே விவாகம் செய்துக்கொண்டேன்" என்றுநான்சிறிதுமெதுவாககூறினேன். என்னுடையவழிகாட்டி உடனே சிறித்து "நீர் உண்மையாக விவாகம் செய்துக்கொண்டு இருக்கின்றீர்களா?" என்று கேட்டாள்.

நாங்கள் வெளியேவந்து வீதியின் வழியாக சென்றோம். ஆனால் என்னுடைய வழிகாட்டி என்னுடைய கல்யாணசங்கதியைப்பற்றி கேட்பதிலிருந்து நிறுத்த வில்லை.

"நீர் எத்தனைஆண்டுகளுக்கு முன்னர் விவாகம் செய்துக் கொண்டீர்கள்? உம்முடைய மனைவியின் வயது என்ன? அவள் அழகாக இருக்கின்றாளா? உமக்கும் அவளுக்கும்எத்தனை நாள் சிநேகம் இருந்தது?" என்றது போன்ற சுமார் நூறுகேள்விகளை ஒன்றுமேல் ஒன்று கேட்டுக்கொண்டே இருந்தாள். விவாகமாவதற்கு முன்னர், எங்கள் இருவருக்கும் சினேகம் இல்லை என்பதை அவள் என்னிடத்திலிருந்து தெரிந்துக்கொண்டபின், "அப்படியானால் நீர் எவ்வாறுவிவாகம் செய்துக்கொண்டீர்கள்" என்று மிக்க ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"எங்களுடைய தாய் தந்தையர்கள் கல்யாணப்பெண்ணை தேர்ந்து எடுத்தார்கள் என்று நான் கூறினேன். "பிறகு நீர் விவாகம்செய்துக்கொண்டீரா?" என்று மிக்க ஆச்சரியத்துடன்கேட்டாள். ஓர் பெரியஆச்சரியமென்ற கடலில் மூழ்கினவன் போல அவனது முகம் நன்கு புலப்படுத்திற்று. அவள் சிறிது தாமதித்து "நீங்கள் இதை எவ்வாறு செய்கின்றீர்கள் என்பது எனக்கு அதிக ஆச்சரியமாகவே இருக்கின்றது" என்று அவள் கூறினாள். "இது எங்கள் பழக்கமேயாகும் என்று நான் கூறினேன். ஆனால் அது சுத்த உபயோக மற்ற பழக்கம். நீங்கள் இப்பழக்கத்தை அறவே மாற்ற வேண்டும்" என்று கடைசியாக கூறினாள்.

திருவண்ணாமலையில் இடி.

22-5-34 மாலை 6-மணிக்கு திருவண்ணாமலையில் பெருங்காற்றுடன் மழையும் ஆரம்பித்தது. சுமார் 7 மணிக்குப்பெரியஇடி ஒன்று இடித்து கோயிலின் வடக்குக் கோபுரத்தின் மேலண்டை பக்கத்தில் விழுந்தது. (அம்மணி அம்மாள் கோபுரம்) அதனால் கோபுரத்தின் மேற்பாகங்களில் பலத்த சேதமேற்பட்டு அதன் காரணமாக இடிந்த கற்களெல்லாம் கல்மாரி பெய்ததுபோல் வீதியில் குவிந்துகிடக்கின்றன. திருவண்ணாமலை வாசிகள் இச்சம்பவத்தைப் பார்க்க திரள்திரளாக வந்து கொண்டிருக்கிறார்கள். இச்சமயத்தில் தோழர் அண்ணாமலைப்பிள்ளையின் குமாரர் நாகலிங்கமும், தி கு. இலட்சுமணசுவாமியும் (சென்னை) பந்துவிளையாடச்சென்றவர்கள் காற்றின் உத்வேகத்தை தாங்கக்கூடாதவர்களாய் வடவண்டைக் கோபுர வாயிலில் வந்து தங்கியிருந்தவர்கள் மழை நின்ற பிறகு போகலாமென்று இருந்த தருணத்தில்தான் இடிவிழுந்தது. இடிவிழுந்த இடத்திற்கும் இவர்களிருவரும் இருந்த இடத்திற்கும் சுமார் 6 அங்குலம்தான் இருக்கும். சிறிது தள்ளி நின்று கொண்டிருந்திருப்பார்களானால் இருவரும் இறந்திருப்பார்கள்.

விதவா விவாக தம்பதிகளுக்கு விருந்து

முத்துராமலிங்கபுரம்.

9—5—34ல் விதவைத்திருமணம் செய்து கொண்ட சவ்வாசுபுரம் தோழர்கள் சுப்பா ரெட்டியார், சுப்பம்மாள் ஆகிய மணமக்கள் இருவரும், முத்து ராமலிங்கபுரம் சமதர்ம சங்கத்தாரின் விருந்தினராக 10-5-34 முதல் 20 5-34 வரை ஷை சங்கத்தாரால்உபசரிக்கப்பெற்று தற்பொழுது அருப்புக் கோட்டை சொக்கலிங்கபுரம் தோழர் வீரையா அவர்களின் விருந்தினராக விஜயம் செய்துள்ளார்கள்.

நோயாளிகளுக்கோர் எச்சரிக்கை.

நல்லகாலம் வந்துவிட்டது.

இது சமயத்தை இழந்து விடாதீர்கள்.

ஆயிரக்கணக்கான நோய்கள் குணமாகிவிட்டது.

நீரழிவு, பவுந்திரம், வெள்ளை, வெட்டை முதலிய நோயுடையவர்கள் நேரில் வந்து குணப்படுத்திக்கொள்ளுங்கள். பத்து நாட்களில் குணமடைவீர்கள். நீரழிவு, பவுந்திரம் முதலிய நோயுடையவர்களின் விலாசத்தைத் தெரிவிப்பவர்களுக்கு ஒரு ரூபாய் இனாம் அனுப்பப்படும். விபரங்களுக்கு யெழுதித் தெரிந்து கொள்ளுங்கள்.

வேண்டிய சர்டிபிகேட்டுகளை நேரில்தெரிந்துகோள்ளுங்கள்.

அரண்மனை வைத்தியர்

எஸ். டி. மாணிக்கம் பிள்ளை,

சித்தவைத்தியசாலை, வளையல்காரத்தெருவு

ஈரோடு.

வைத்திய அறிக்கை.

வாய்வு, வயிற்றுவலி, கிராணி, இடுப்புவலி முதலிய வியாதிகளுக்கு

பஞ்சகல்ப சூரணம்,

இம்மருந்தை சாப்பிட்டு ஆயிரக்கணக்கான நோயாளிகள் குணமடைந்து விட்டார்கள்.

ஒரு முறை சாப்பிட்டுப்பாருங்கள்.

இடுப்புவலி, வயற்றுவலி, வயிற்றுப்போக்கு, வயற்றுப்பிசம், வயற்றிரைச்சல், அண்டவீக்கம், பாண்டு, காமாலை, சோகை, வாய்கசப்பு, பசியில்லாதிருத்தல், புளியேப்பம், நெஞ்சுகரிப்பு, நெஞ்செரிவு, அஜீரணம், கிராணி, குன்ம வலி, குன்மக்கட்டி, குன்ம வாந்தி, இருமல், மூலவாய்வு, மஞ்சள்நீர் மூத்திரம், பெண்களுக்குண்டாகியசூதகசம்பந்தமான சகல வாய்வுகளும், குணமாகின்றது.

இடுக்காம் சோற்றில் நெய்யுடனே இதமாய் மூன்று பிடியுண்ணே
உண்டிடுவாய் பிரகன்னம். உதிரம் பொருமல் பெருவாய்வு
குண்டுபோல் திரண்டிடுதல் கூப்பிட்டோடல் கீழ் விளுதல்
மண்டிவலித்தல் களித்திடுதல் மயக்கம் சத்திபலவாய்வும்
தெண்டம் தெண்டம் நமக்கெனப்போம். தேவி அமிர்தம் இதுதானே

என்றபடி இம்மருந்தை 3 நாள் சாதத்துடன் சாப்பிட்டால் எல்லா வாய்வுக்களும் இருந்த இடம் தெரியாமல் பறக்கின்றது. மருந்து சாப்பிடும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

3நாள் 6வேளை மருந்தடங்கிய டின்1 விலை ரூபா 2—0—0

அரண்மனை வைத்தியர் எஸ். டி. மாணிக்கம் பிள்ளை,

சித்தவைத்தியசாலை, வளையல்காரத்தெரு, ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள

இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம்	0-8-0	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்	0-6-0
சுதந்தரப்போர்	0-4-0	சுயராஜ்யம் யாருக்கு?	0-1-0
மாதர் சுதந்திரம்	0-8-0	சாமிகளின் அடிமை	0-12-0
விவாக விடுதலை	0-4-0	லோகல்போர்டு ஆக்ட் (சென்னை)	2-0-0
மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும்	2-0-0	பகுத்தறிவு கீதம்	0-1-0
		காந்தி-கிட்டு	0-1-0

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

பிரகிருதிவாதம்:—இந்நூலில் கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை 0—3—0.

பெண் ஏன் அடிமையானாள் விலை 0—5—0

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:— இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. விலை 0—3—0

பிரபஞ்ச உற்பத்தி:— இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை 0—3—0.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்ஜ்பே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 8.

லெனினும் மதமும்.

இது பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணா 4.

பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல். விலை அணா 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைந்த நூல். விலை அணா 4.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை வெளிப்படுத்தும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம்பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது. விலை அணா 8.

இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணா 4. அயோத்தியா காண்டம் அணா 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணா 4.

தர்ம பரீக்ஷை.

இது புராண காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணா 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல். விலை அணா 3.

பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா .4.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும் விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல் வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணா 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.